மலர் 8. ரிஜிஸ்டர் நெ. M. 3157

# சிவபக்தன்.

மாதவெளியீடு

பவ-வருஷம் பங்குனித் திங்கள்

சுப்பிரமணியர் ஸ்துதி.

தோலாற் சுவர்வைத்து நாலாறு காலிற் சுமத்தியிரு
காலாலெழுப்பி வளைமுதுகோட்டிக்—கை நாற்றி நரம்
பாலார்க்கையிட்டுத். தசைகொண்டு மேய்ந்த யகம்பிரிந்தால்
வேலாற் கிரிதுளைத்தோ நிருதாளன்றி வேறில்லையே.




பத்திராதிபர்.

வை. செ. குருசாமி ஐயர், குகை சேலம்

# வேண்டுகோள்.

ஆஸ்திக சிகாமணிகளான சிவபக்தர்களாயுள்ள பிரதியொருவரும் இப்பத்திரிக்கையை ஆதரிக்கவேண்டியது, மாணிடர்களின் முதற் கடமையும் முக்கியகடமை (பிரதான முறைமை)யுமாகும். ஆகையாலிதைக்கண்ணுறும் அன்பர்கள் ஒவ்வொருவரும் வருட சந்தா ரூ 1—8—0 மணியார்டர் செய்து சந்தாதாரராகச் சேரவேணுமாய் அன்புடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

நம்ம பொருளானது பலவழிகளிலும் சிலவழிந்து விடுவது சஹஜமாயிருக்கிறது. ஆகையாலிப்படிப்பட்ட அறிவிற்குணவாகிய இப்பத்திரிக்கைக்கு சிலவிடுதல் சாலச்சிறந்ததென அறிஞர்கள் கூறுவர். இதிலுள்ள விஷயங்கள் ஆழ்ந்த(உட்)கருத்துடையவைகளாகையால் ஒருமுறை வாசித்து விட்டுவிடாமல் சாவகாசமுள்ளபோது பலதடவைகளிலும் படிக்தால் விஷயங்கள் மனதுக்கு நன்கு புலப்படும் (மிகுதியாக விளங்கும்.)

இப்பத்திரிக்கையை வி. பி. யில் அனுப்புவதால் அதிக சிலவும், ஸ்ரீசிரமமுமேற்படுகிறபடியால் அன்பர்கள் வருடசந்தா ரூ 1-8-0 முன்னதாகவே மணியார்டர் செய்தனுப்பவேண்டியது.

வைத்தியர்களுக்கும் மிக அவசியமானது.

## சந்தா விபரம்.

| | | |
|---|---|---|
| வருடமொன்றுக்கு தபாற் கூலியுள்பட | இந்திய, பர்மா, சிலோன், முதலான உள்நாடுகளுக்கு | ரூ. 1—8—0 |
| | பினங்கு, சிங்கப்பூர், தென்னாப்பிரிக்கா, முதலான வெளி நாடுகட்கு | ரூ. 2—8—0 |
| தனிப்பிரதி | ... ... ... 1-க்கு விலை | 0—2—0 |
| ,, | மலாய் நாடுகட்கு 15-காசு அல்லது | அ 0—3—0 |

ஒரு வருடத்திற்கு குறைந்த சந்தா கிடையாது. எப்போது சேர்ந்தாலும் அவ்வருட ஆவணி மாதமுதல் கணக்கு வைத்து ஆவணி மாதசஞ்சிகை முதல் கொண்டு பத்திரிக்கை அனுப்பப்படும்.

பத்திரிகையை வி. பி. போஸ்டில் அனுப்புவதில்லை. ஆகையால் சந்தா தொகையை முன்னதாக மணியார்டர் செய்தனுப்ப வேண்டியது.

## விளம்பர விகிதம்.

| | |
|---|---|
| உள்பக்கம் ஒன்றிற்கு 1-மாதத்திற்கு | ரூ 5—0—0 |
| அரை பக்கத்திற்கு | ரூ 2—12—0 |
| கால் பக்கத்திற்கு | ரூ 1—8—0 |

நீடித்த விளம்பரத்திற்கும் துண்டு பிரசுரங்களை சேர்த்தனுப்புவதற்கும், ரிப்ளை கார்ட்டு எழுதி தெரிந்துங்கொள்ளவும்.

பத்திராதிபர்

**வை. செ. குருசாமி ஐயர்**, குகை, சேலம்.

# சேலம், ஸ்தல மலை,

## ஸ்ரீஜகத் குரு ரேவண சித்தேஸ்வரர் ஜயந்தி மஹோற்சவம்.

சேலம் டவுனுக்கு அடுத்துள்ள ஸ்தல மலையின் மீது கோடைக்கும் வற்றாத ஊற்றுதாரைகவே வழிந்தோடிக்கொண்டிருக்குமிடத்தில் சேலம், குகை, வைத்தியம் செங்கய்யர், குமாரன் குருசாமி ஐயரால் உண்டாக்கப்பட்ட அகஸ்தியராசிரம மென்னும் சித்தேஸ்வராலயத்தில் ஸ்ரீரேவண சித்தேஸ்வரர் அகஸ்தியரிஷிகளுக்கு சிவசித்தாந்தத்தை உபதேசித்த சாஸ்திர நியம பூர்வகமாக ஒரு பெரிய பாறையில் ஸ்ரீரேவண சித்தேஸ்வரர் ககனமார்க்கமாக விஜயம் செய்தமர்ந்து அகஸ்தியமஹரிஷிகளுக்கு உபதேசிக்கும் மாதிரியும். மற்றும் ரிஷிபத்தினி உலோபா முத்திரையும் மற்றும் அகஸ்தியராசிரமம் சிவாலிங்கம் நந்தி ஸ்ரீசக்கரம் முதலான உருவங்களை செதுக்கப்பட்டுள்ள விடமாகிய அகஸ்தியராசிரமத்தில் அகஸ்திய முனிவருக்கு உபதேச மூர்த்தியாகிய ஸ்ரீரேவண சித்தேஸ்வரர் ஜெனன நாளாகிய சென்ற 18—3—35 சோமவாரம் உதயத்தில் ஷை மூர்த்திகளுக்கு ருத்திராபிஷேகப் பூர்வகமாக சஹஸ்ர வில்வார்ச்சனை சோடசோபசார விசேஷ பூஜா வைபவங்கள் 11-மணி வரையில்மிகவைபவத்துடன் நடத்தி பிரசாத வினியோகமான பிறகு கணாராதனை சிறப்பாக நடைபெற்ற பிறகு மத்தியானம் $2\frac{1}{2}$—மணிக்கு நம்ம ஜாதியாசார சீர்திருத்த முன்னேற்றத்தைக்குறித்து சிவபிராஹ்மண (வீரசைவ ஜங்கம)ர்களின் மஹாநாடு கூட்டவேண்டு மென்னும் தீர்மானம் நிறைவேறின பிறகு சபை முடிவு பெற்றது சுற்றுப்பக்கத்து கிராமத்தார்களும் விஜயம் செய்து கலந்துக்கொண்டது போற்றத்தக்கது..

பிறதி வருட மாமூல்படி இவ்வெட்டாமாண்டும் சகல வைபவங்களுடன் தன் சொந்த சிலவில் நடத்திவைத்த ஸ்ரீமான் குருசாமி ஐயருக்கு ஸ்ரீமத் பஞ்சாசாரியர்களின் கிருபாகடாக்ஷமுண்டாகுமாறு கோருகிறேன் இப்படிக்கு,

கு. அருணாசலய்யர்.

கீர்த்தனம் பல்லவி

குரோ ஸ்ரீ ரேணுக சிவகர சோமேசஜன நாகஹரண பாஹிபிரமத சார்வ பௌம ... ... (1)

பாவனாத்மக சிவமுக்திதாயக சிவதத்வபோதக பவரோகநாசக ஸ்ரீவிரக்த தேசிக ... ... ... குரோ ஸ்ரீ (2)

பூதவிகாச விதலிதாச மதனகாச நிதன பதன தலன பாச விதி ஹரீந்த்ரவோஷ ... ... குரோ ஸ்ரீ (3)

கும்ப ஜானத வரரம்பா புரீவ்ருத நிராலம்ப கணநுத சுரசாம்ப வார்ச்சித ஸ்ரீஹரீச சேவித ... குரோ ஸ்ரீ (4)

நிகம விநுத சுகுண பரித சுகத விமத ககனகமன சமன கலித யோகினி கரநாத குரோ ஸ்ரீ (5

(ஹரீஸ்வர கவிக்ருதம்)

## குருபஜனை, கன்னட கீர்த்தனம் அடதாளம்

ஓம் நம குரு சிவாயா ஜய ஜெய ஓம் நம குரு சிவயா

அநுபல்லவி

ஓம் குரு சிவாய ஓம் குரு சிவாய
ஓம் நம குரு சிவாய, ஜெய ஜெய ... ... ஓம் நம

சரணங்கள் (1)

ஹரி ஹர ப்ரஹ்மாதி சுர மனு முனிகளு
மரெயதெ நித்தவு ஸ்மரணெ மாடுவந்தா (1) ஓம் நம
பனனக சுர சித்த யக்ஷ ராக்ஷச ரெல்லா
பின்ன வில்லதெ கைது முன்ன முத்திய படெத (2) ஓம் நம
பரம பாவன ஜெகத் குருரூபி னெழுபந்து
ஸ்மரிசுவ பஜகா ஜெரப் பிருதிகள கொந்த (3) ஓம் நம
துரித ராசியனெல்லெ தரிதுபாவனகைது
நரரிகெ மோக்ஷவ கருணிசி கொடுவந்த (4) ஓம் நம
தரெயோள் கொல்லிபாகி புரதொ ளுத்பவிசுதெ
வரக்ஞானேத்தாரக்கே ஹரிஹர தொளுநிம்தா (5) ஓம் நம

முற்றிற்று.

### கீர்த்தனம் பல்லவி

பஞ்சாஸ்ய பஞ்சாசார்யான் மங்கலம் குருத குருவர்யா : (1
பிரஹ்மாண்ட புவனுசார்யா : பிண்டாண்ட சோதனகார்யா :
பாகண்ட கண்டன தைர்யா : பாண்டித்ய மண்டித வீர்யா (2)
த்ருத வேத வேத்ய லிங்கா : க்ருத பக்த பாப பங்கா
ஹிருதபஞ்ச பாணசங்கா வ்ருதசிஷ்ய ரத்னசங்கா : ... (3)
காலதி தத்வா ஹரணு : பாலாத்த தாஹகிரணு
மலபார பாதித தரணு : பலகாமி சங்கர கருணு : ... (4)

### கீர்த்தனம் ஜம்ஜூடிராகம் ஆதிதாளம்

ஸ்ரீரேணுகம் ப்ராஜகம் பஜே க்ருபா காரகம்
மாகாரிச நீதபா தசா ரிரீ சாரிக ... ... (1)
தேலகுல பலகம் ப்ரமத திலகம்
மாக ரிச கரிமா ரிக சரி கமா ... ... ... (2)
விபோதகம் விசோதகம் விமோஹகம் விசாரகம்
மகாமபா மபாதபா மனீதபா மகாரிகா ... ... (3)
ஸ்ரீநிகம நிகர மநு விநுதம் யதி பதி ததி சுத சரிதம்
மாமக மரிக சரிகரி கமா தப மப தப மக பமா (4)
புரஹர பூஜன நிரதம் யமன கலிதம் கமன கலிதம்
பத நித நீத பத பமா தப மக ரிமா பம கரி கமா ... (5)
ஸ்ரீவிரதி மிலிதம் விதர லலிதம் வித்ருத குருதம் விஹிருத
மாநிதப மகமா தபம கரிமா பம கரிகமா கரிச ... (6)
ஜாதம் சமிதம் தமிதம் சிவதம் சுபதம்
ரிகமா கரிமா ரிகமா தபமா பதமா
சுரகண பரிதம் மரண ரஹிதம்
நித தப மகமா கரி சரி கமா ... ... (7)

ஸ்ரீ அவதார புருஷாய நம:

# வீரசைவ மதோத்தாரகனுன கல்யாணி, ஸ்ரீ பசவேஸ்வரனின் செய்கைகள்.

லிங்காங்கி தர்மத்தின் சிரேஷ்டத்தைக்காட்டுவதற்காகவே பசவேஸ்வரன் என்னும் மஹா புருஷன் அலிங்கிப் பிராம்ண குலத்தில் ஜனனமெடுத்துப் பிறகு லிங்கதாரியானுனென்று இதிஹாசத்தின் விருத்தாந்தம். இம்மஹானுபாவன் லிங்காங்கி தர்மத்தை விசேஷமாகப் பிரசாரம் செய்து வெகு உன்னதத்திற்குக் கொண்டுவந்தானென்றுச்சந்தேஹமில்லாமல்சொல்லலாம். ஆனுல் அரசன் ஜைனனுயிருந்தாலும், அவனை லக்ஷியம் செய்யாது லிங்காங்கி தர்மத்தை உன்னதம் செய்துக் காட்டினுன். ஆனதினுல் தர்மத்தில் எல்லாரும் என்றுல் அரசன் முதல் சண்டாளன் வரையில் சுவதந்திரமான அக்குதார (பாத்தியதையுள்ளவ) ர்களென்பதைப் பிரத்யக்ஷமாகக் காட்டிக்கொடுத்தான். இதையே நம்ம பிரிட்டிஷ்சார்வபௌமர் அங்கீகரித்தகினுலேயே இவர் அரசாங்கம் வெகு காலம் நடக்கும் சம்பவமிருக்கிறது. ஆனுல் தர்மத்திற்கு சர்க்கார் பாத்தியரல்ல என்பதைக் காட்டினவரில் பசவேஸ்வரனே முதலாவதவன், பொருள் ஆசைக்காக மந்திரி பதவியை வகித்து எப்படி, ராஜி ராஜி என்று காலம் கடத்திக்கொண்டு போவார்களே மற்றும் சுக்கிர நீதியில் எம் மந்திரிக்கு அரசன் பயப்படுவதில்லையோ அல்லது அரசனிடத்தில் கம்பீரத்தை வைத்துக் கொண்டிராத மந்திரி கேவல வஸ்திருபரணங்களாலலங்கிருதளான ஸ்திரீயை தாசியென்றுச் சொல்லுமாதிரி பசவேஸ்வரன் அரசனுக்குப் பயந்து ராஜ்யபாரம் என்றும் செய்யவில்லை. மற்றும் ஈதல்லாது.

இதம் ராஜ்ஞஸ்ச சாஹிதம் யல்லோகானும் தன் நகாரயேத்,,

என்னும் சுக்ரநீதி வசனத்தைப்போல பிரஜைகளுக்கு அநுகூலமில்லாத காரியத்தை பசவேஸ்வரன் என்றும் செய்யவில்லை. மற்றும் பிரஜாநுகூல கார்யத்தில் கேவலம் ராஜாக்ஞையை சுவப்னத்திலும் அபேக்ஷிக்கவில்லை. இதனுல் அவன் பிரஜாபிரதிநிதி சபையினுலேயே அரசாங்க கார்யம் நடைபெற வேண்டுமென்னும் அபிப்ராயமு (கருத்து) ள்ளவனுயிருந்தான் இன்னும்.

பசவேஸ்வரன் லிங்காங்கி தர்மத்தில் நல்ல மஹிமைசாலியான உபதேசிகன் ஒரு வேளை சிலகாலம் சமாதானமாகத் தோன்று விட்டாலும், தர்மங்கள் அழியக்கூடாதென்று அதன் கட்டிடத்தை வெகு நன்றுகச் செய்து வைத்தான். எப்படி என்றுல் தர்மதத்துவங்களைத் தெரிவிப்பதற்கு தர்மத்தின் ஆசார விசார வியவஹாரிக நியாய நிர்ணயங்களுடன் கூட அன்னியரால் அழியாதபடிக்கும் நீதிபிரஷ்டத்வமாகாதபடிக்கும் பரதர்மத்தின் துர்ப்போதனையினுல் ஸ்வதர்ம தியாகிகளாகாதபடிக்கும் பிரதிபந்

தம் செய்வதற்கும் மடங்களை அநேகமாக அவ்விட மவ்விடம் நிர்மித்து அவர்களாலேயே தார்மீக விஷயங்களின் நிர்ணயமாகும்படியாகவும் வியவகாரிக ஔவுத்யோகிக நியாய நிர்ணயத்திற்காகவும் அவைகளின் உன்னதப்ரோத் (மேன்மையான உற்) சாஹத்திற்காகவும் பிரதியொரு கிராமத்திலும் (செட்டி) ஸ்ரேஷ்டி பணக்காரர் பஞ்சாயதர்களென்னும் பஞ்சாயத, சபைகளை ஏர்ப்பாடு செய்து இதற்கு செட்டி, பணக்காரரே முக்கியாதிகாரிகளாயிருக்கவேண்டியும் அவர்கள் ஐவராக்ஞையின்படியேநடக்கவேண்டுமென்றும் நிர்ணயித்தான் ஆனல் தார்மீக விஷய நிர்ணயத்தில் இச்செட்டி பணக்காரரின் அதிகார மொன்றும் கிடையாது. தார்மீக விஷயத்தில் குருவின் ஆக்கிஞையின்படிக்கு நடப்பதே இவர்களின் கர்த்தவ்யம். தார்மீக நிர்ணயமெல்லாம் குருவிஞலேயே தீரத்தக்கது. அந்தந்த கிராமங்களிலுள்ள மடத்தவருக்கு அநுகூலராகி, அவரின் சேவையின்படிக்கே சமாஜத்தின் சேவை செய்யும உத்தேசத்தினல் கணசாரி, மடபதி, என்னுமவர்களை நியமித்தும் இன்னும் மேம்பட்ட பீடத்தவருக்கு அப்போதைக்கப்போது தார்மீக விருத்தாந்தங்களைத் தெரிவிக்கச் சில காயகத்தய்யர்களை நியமித்தும் இவர்களை அந்தந்தபாகத்துபீடாதிகாரிகளின் ஆதீனம் செய்தான், இக்காயகத்தவர்கள் பிரதியொரு வாரத்திற்கொவ்வொரு கிராமங்களாகப்போய் அந்தந்த கிராமங்களின் தார்மீகாதி விருத்தாந்தங்களை பீடாதிகாரிகளுக்குத்தெரிவிப்பார்கள். இக்காயகத்தவர்கள் பீடாதிபதிகளின் போலீசார்களென்றும் சொல்லலாம் இக்காயகத்தவர்கள் தங்கள் மஹத்தான கார்யத்தின் ஜவாப்புதாரித்வம் சாதாரணமானதல்ல. இவர்கள் தங்கள் சரீரத்தைத்தண்டித்து (சரீர தபசினல்) தர்மோன்னதம் செய்பவர்களானதினல்

காயேந தர்மோன்னதிர்விதி : க்ரியதே இதி காயிகா :

என்னும் வியாக்ஞானமுள்ள நாமத்திற் கருகராயிருப்பார்கள். அந்தந்த கிராமத்து ஜனங்கள் வேறுராமங்கட்குப் போகாமலுள்ள நாளாகிய சந்தைநாள் இவர்கள் அந்தந்த கிராமங்களில் முகாம் செய்துக்கொண்டு ஜனங்கள் தங்கள் வியாபாரம், உத்தியோகம், கிரய, விக்ரயங்களினல் நிவிர்த்தராகி முடிந்து சாயங்காலத்திற்குக் தங்கள் தங்கள் வீட்டில் சேர்ந்த உடனே அவர்கள் வீட்டிற்குப்போய் தர்ம மங்கல விஜயத்வனியு (சப்தமு) ள்ள கண்டாநாதம் செய்வார்கள். உள்ளிருப்பவர்கள் வந்து உள்ளே வாருங்கள், வாருங்களென்று, அச்ஜங்கமரை யழைத்துப்போய் பாதத்திற்கு நமஸ்கரித்து தர்மத்தின் ஆசார விசாரபரமான குசல விஞவினல் அவர் தப்பிதத்தைத்தீர்க்க எச்சரிக்கைசெய்து க்ஞானபோதகனும் தர்மசாசகனுமான குருநாமத்தை மறக்கவேண்டாமென்றுச்சொல்லிஅபயதானம்கொடுத்துப்புறப்பட்டுப்போவார்கள்.

இக்காயத்தய்யன்கள் கிராமங்கட்கு வந்தால் அந்தந்த பிராந்தியத்தின் பீடத்தவரின் பிரதிநிதிகளான மடத்தவரிடமே இரங்கவேண்டியது. மற்றும் இக்காயகத்தவர்கள் கிராமங்களின் ஸ்திதிகளை அப்போதைக்கப்போது மேற்கண்ட பீடத்தவர்களுக்குத் தெரிவிப்பார்கள் பிறகு பீடத்தவர்களும் காயகத்தவர்களுமாக அக்கிராமத்திற்குப்போய் எல்லா விசாரணையும்செய்துப் போதிப்பார்கள். அல்லது அக்கிராமங்களில் கிரமாக்கிரம விஷயங்களை காயகத்தவர்கள் தெரிவித்திருந்தால் இது வாஸ்தவமானதாவென்று பூர்ணசோதனைச்செய்து யாராவது துர்மார்க்கர்களாக நடந்தாலும் அல்லது தர்மார்த்தத்திற்குபங்கமுண்டாகும் ஸ்திதியிலிருந்தால் அவைகளை விசாரித்து, அவைகள் நிர்மூலார்த்தமான உபதேசம் செய்பவேண்டி கண்டி காயகத்தய்யன்கள் என்ருல் காயகத்தவர்களைவிட கொஞ்சம் அதிகமானவர்கள், இவர்களையனுப்புவார்கள், இவர்கள் அக்கிராமத்திற்குப்போய் அவ்விடத்திய மடத்தவரால் சர்வ விருத்தாந்தங்களும் தெரிந்துக்கொண்டு அவ்வூரின் விசாலமானயிடத்தில் ஆசனம் போட்டு உட்கார்ந்துக்கொண்டு கண்டாநாதம் செய்தால் அக்கிராமத்திய சமஸ்த்த ஜனங்கள் அச்ஜங்கமரின் சன்னிதிக்கு வந்து நமஸ்கரித்து அவர் சொல்லும், உபதேசங்களைக் கேட்டுயென்ருல் யார் என்ன தர்மவிரோதம் செய்கின்ருபோ அவனுக்கு அவர் உபதேசத்தின் மர்மம் தெரிந்து அப்புண்ணியபாப பல விசிஷ்ட கர்மத்தினுல் ஜாக்ருதராகும்படிச்செய்து குரு பீடத்தின் சந்நிதிக்குப் போவார்கள். இக்கண்டி காயகக்தவர் என்ருல் தினப்பிரதி (9–10) மையில் போய் அந்தந்த கிராமத்தின் மடத்தவரால் கிராமத்தின் வார்த்தையைத் தெரிந்தே தீரவேண்டும். எப்படி என்ருல் போலீஸ் சிப்பாய் தினப்பிரதி சில கிராமங்கட்குப்போய்த் தனிக்கை செய்து அக்கிராமத்திய முனிசீபு (கிராமாதிகாரி) முதலான அதிகாரிகளுக்கு பேட்டியாகி கிராமசங்கதிகளைத் தெரிந்துக்கொண்டு போலீஸ் டேஷனுக்குப்போய் தெரிவிக்குமாதிரி எப்படியோ, அப்படி இவர்கள் (8) நாளைக்கொரு குரு பீடத்திற்குப்போய் தாம் சஞ்சரித்த கிராமத்தின் சங்கதிகளெல்லாம் குரு பீடத்திற்கு அறிவிப்பார்கள். அல்லது ஒரு மாதத்தில் (15) நாளாவது சஹஜமாகவாவது உபதேசார்த்தமாகவாவது சஞ்சாரம் செய்துப்பிறகு குரு பீடமான டாணுவுக்கு வருவார்கள், இவர்கள் உபதேசம் செய்துப்போன பிறகு மறுபடியும் அக்கிராமத்திற்குப்போய் மடத்திலிறங்கி துர்மார்க்கனின் விஷயமாக அம்மடத்தவருக்குச் சொல்ல அவர் துர்மார்க்கத்தை இன்னும் விடவில்லை என்றுச் சொல்லப்பிறகுத் தாம் உபதேசார்த்தமாக அவர் வீட்டிற்குப் போய் உபதேசம் செய்து மறுபடியும் எல்லாத் துர்மார்க்கர்களையும் நன்ருகத் தெரிந்துக்கொண்டு மடத்திற்குப்போய் அவர் துர்

மார்க்கத்தை விடவில்லை என்றுத்தெரிவிக்க அக்ஷணமே குருக்கள் சத்தியாக்கிரக காயகத்தவர்களை யழைத்து நீங்கள் போய் உங்கள் சத்தியாக்கிரகத்தினால் இத்துர்மார்க்கனை நல்லவனாகச் செய்து வரவேண்டுமென்று உத்தரவிடுவார்கள், மஹா சத்தியாக்கிரகிகளான இக்காயகத்தவர்கள் உடனே அக்கிராமத்திற்குப் போய் இத்துர்மார்க்கனின் வீட்டு வாசலுக்குள் அல்லது அவன் வீட்டு அத்துக்குள் கம்பத்தில் தன்னைக்கட்டிக்கொண்டு நின்று விடுவார்கள். இம்மாதிரியாக (1, 2) நாள்கள்வரைக்கும் மௌன விரத உபவாசத்தினால் காலம் கடத்த ஜகத்தில் சர்வாந்தர்யாமியான ஆத்மன் ஒன்றேயாயிருந்து அச்சங்கானின் ஆத்மத்தின் மனம் அத்துர்மார்க்கத்தின் அல்லது அவன் குடும்பத்தவர்கள் அல்லது அவன் வீட்டிலுள்ள ஜனங்களை தஹிக்காமல் விடாது என்னும் தத்துவ சித்தாந்தத்திற்குள்பட்டு அத்துன்மார்க்கன் சுவாமி இனிநான் என்துர்மார்க்கத்தை விட்டுத்தங்கள் ஆக்கினையின்படி நடக்கிறேன் தாம் இந்த விரதத்திலிருந்து நிவிர்த்தராகி என்னிடத்தில் இன்று சிவார்ச்சனை செய்து எனக்கு சுகசந்தோஷப்பூர்வகமான ஆசீர்வாதம் செய்துப் புனிதனாகச்செய்யவேண்டுமென்று வேண்ட அவர் அவ்விரதத்தைவிட்டு அவனால் ஸ்நானம சிவார்ச்சனாதிகளை முடித்துக்கொண்டு குரு பீடத்திற்குப்போய் நடந்த சங்கதிகளைக் குருக்களுக்குத் தெரிவித்துக்கொள்வார்கள். பிறகு இக்காயகத்தவர்கள் தங்கள் நியமப்படிக்கு அக்கிராமத்திற்குப்போய் விசாரிக்க அவன் ஸ்கலிதஸ்வபாவத்தை விடவில்லை என்றுத்தெரிந்தால் உடனே குரு பீடத்தவருக்கு அறிவிப்பார்கள் மறுபடியும் பீடத்தவர்கள்முன்னையவி பூஷண விரதனான சத்தியாக்கிரகியை அநுப்புவார்கள். இவர்கள் முள்ளுகாயகத்தவர்கள். குரு ஆக்கினையின்படிக்கு அக்கிராமத்திற்குப்போய் அந்த மடத்தவரால் சர்வவிருத்தாந்தங்களும் தெரிந்து ரௌத்ராகாரத்தினால் கூடிய வேஷமுள்ளவனாகி அத்துர்மார்க்கனின் வீட்டு வாசலுக்கு வந்து ஏ புருஷனே நீ லிங்காங்கி தர்மத்தை நஷ்டம் செய்வதால் உன்தர்ம பந்துவான நான் உன் அதர்மத்தை நஷ்டம் செய்து உனக்கு தார்மீக புத்தி உண்டாக்குவதற்காக என் ஆத்மத்தின் மனதினால் தேஹக்கிலேசம் செய்துக்கொண்டு அவன் வாசலில் நின்று கம்பீரவாணியை உச்சரித்து இருப்பு முள்ளுகளுள்ள பலகைகளின் மீது விழப்போக அங்கிருப்பவர்கள் சுவாமி இப்படித் தாங்கள் செய்யக்கூடாது. நாங்கள் இப்பொழுதே இவ்வீட்டுயஜமானனுக்குப்போதனைசெய்து தம் ஆக்கினையின்படிக்கு நடக்கும்படியாக எச்சரிக்கை செய்கிறோம். அதற்கு நாங்கள் சாக்ஷி பூரணமாயிருக்கிறோம். என்றுச் சொல்லி, ஏ எஜமானனே நீர் குருத்ரோஹம் தர்மத் துரோஹங்களுக்கு உட்படவேண்டாம், தார்மீகனாயிருக்கிறேனென்று மனப்பூர்வகமாக் ஒப்புக்கொள்ளெ

ன்று அவர்கள் போதித்த பிறகு சுவாமி என்ன நடவடிக்கை தப்பாயிற்று இனிநான் தப்பாது தர்மிஷ்டனுக நடக்கிறேனென்றும் இப்படிப்பட்ட வார்த்தைகளை அந்த யஜமானன் சொல்லி அவருக்கு யோக்கியமான தக்ஷிணைகொடுத்து சிவபூஜா உபசாரங்கள் செய்து அனுப்பிக்கொடுத்துப் பிறகு யஜமானன் சன்மார்க்கனுக நடந்துக்கொள்வது. இம்மாதிரி பிரதியொரு கிராமத்திற்கும் தர்ம விவேசனர்த்தமாக விபுல (விரிவாக) மடங்களை உண்டாக்கி அவரவர்சேவைக்குக் தேவையான சேவகரைத்தயாரித்துக்கொடுத்து இம்மாதிரியான தர்மபந்தன பிரசார உபாயம் எல்லாப் பக்கமுமம பசவேஸ்வரன் ஏற்படுத்தினன்.

இம்மாதிரியான காயகத்தவர் முள்ளு காயகத்தவர் முதலான வீரசைவ தர்மோன்னத விரதங்களில் ஆத்ம தமனரூப சத்யாக்கிரகமில்லை என்று எவன் தான் சொல்லுவான். எந்த பாரதீயர் தர்மத்தைத் தங்கள் பிராணனைவிட அதிகமான தென்று பாவித்து அப்படி நடப்பார்களோ? அப்படிப்பட்ட தர்மத்தையும் கூட சத்தியாக்கிரக மென்னும் விரதம் தன்னுதீனம் செய்திருப்பதென்றால் சாமான்யமான ராஜகிய விஷயத்தை சத்தியாக்கிரக விரதத்தினுல் சாதிப்பதென்ன ஆச்சரியம் தற்போதுள்ள மஹாத்துமா காந்தி முதலானவர்கள் சத்தியாக்கிரக விரதத்தைச் சோதித்துப் புதிதாகக்கண்டு பிடித்து ஆசரிக்கும் பிரக்யாதிக்குக் காரணராகியுள்ளார். ஆனுல் தார்மீகம் ராஜாங்க விஷயங்களிரண்டும் சாதித்துக் கொள்ளும் மூலோபாயமே, ஆத்ம தமனரூபமான சத்தியாக்கிரக மென்று தூரதர்சியான வசவேசனென்னும் புண்ணியாத்மன் (700)வருடங்கட்கு முன்னுகவே பரிசோதித்துஅதன்படி நடந்துக்கொள்ளும்படி ஆர்ஞாபித்கார்.

இதையே காந்தி முதலானவர்கள் ஆரம்பம் செய்தார்கள். இப்படி பரோபகாரார்த்தமாகியும் தர்மத்தின் உன்னதத்திற்காகவும் ஆத்மத்தின் ரூபமான சத்தியாக்கிரக விரதத்தைப்போதித்தும் மற்றும் தானும் அதை ஆஸ்ரயித்துப்போன சத்தியாக்கிரக முதலான சிக்ஷணமர்யாதையையடைந்தபசவேசனே தன்னியன்.

இன்னும் பசவேஸ்வரன் கண்டவர்களுக்கு லிங்க தாரணம் செய்தது வெகு தப்புச்செய்தாமெனன்றுச் சில முதியோர்கள் நிந்தித்துக்கொண்டிருந்தார்கள். ஆனுல் இதுஇவர்களின் தப்பிப்ராயமாகும். எப்படி என்ருல் பரவேஸ்வரன் லிங்கதாரணம் சர்வருக்கும் செய்தது எவ்வளவு மஹத்தான காரியமென்பது எவ்வளவு சொன்னுலும் போதாது. இப்படியாக இந்த லிங்க தாரண விதானமானது சாஸ்திரப்பிரமாணத்திற்கும் மீறவில்லை. எப்படி யென்ருல்.

பாரமேஸ்வர ராகமம்.

ஸ்திரீயோ பாலாஸ் ததா வ்ருத்தா : கம்ஜா : குப்ஜாம்த பங்கவ :
மல்லிங்கதாரணுதேவ, மத்ரூபா, ஏவதே சிவே
பிராம்ணு : க்ஷத்ரியா வைஸ்யா சூத்ராயே சான்ய ஜாயத :
லிங்கதாரண மாத்ரேண, சிவயேவ நசம்சய :
யஸ்யாப்தி பக்தி ரீசானி, வீரசைவ மதாஸ்ரயே
பக்தி மாத்ர பவித்ராஹி சர்வயேவாதி காரிண :

என்று சமஸ்தருக்கும் லிங்கதாரண முண்டென்றும், எவ்விடம் பார்த்தாலும் லிங்கத்தையேகாண வேண்டுமென்னும், ஈஸ்வராப்திக புத்தியானது அவனுடைய முதலாவது கருத்து.

ஸ்ரீ அவதார ருபோப்ய :

இதி வீரசைவ காதர்ப்பணத்தின் மொழிபெயர்ப்பு.

---

# விதி முறைகள்.

சிவ லிங்காய நம :

## பஞ்ச சூதக நிவிர்த்தி வெண்பா.

சூரவனருளாற் சிறந்த கோதிலிங்கந்தன்னி
லரியலிங்க சம்மந்த மானோர்—திருவுருவ
மான சிவலிங்க உருவர்தலாற் சாதியெனு
மீன முறாஞ் சூதகமே யில் (1)

உய்ய லிங்கபோக முயர், போகமே பிடித்துத்
துய்யலிங்க சேடமது துய்த்தலால்—வையமகிழ்
தீதிலா வீரசைவ சித்தாந்தத்தோர்க்கு சிட்ட
சூதகமே யில்லை யென்று சொல் (2)

முற்கரும மெல்லா முடித்து நிகாகன்ற
சற்குருவின் பாலுதித்த தன்மையா—நற்கருணை
மன்னிவளர் வீரசைவ மாதவனுக்குற்பத்தி
யென்னுமொரு சூதகமேயில். (3)

ஐம்பூத காயம்போ யாவி பிராணி யெனும்
வெம்பாவமானநிலை வீட்டியே—நம்பனொடு
பேதமிலா மந்திரமே பெற்றமையி னுவுருது
சூதகமேயில்லை துணி. (4)

சீரிய லிங்கத் தொழிலே சேர்ந்து சிவாசார
காரிபிரியா மற்றுனடைந்து—பேரருளா
லாண்ட சிவலிங்கத் தடங்கு சரணனுக்கே
யீண்டிறங்குஞ் சூதகமே யில். (5)

ருது முதலிய காலங்களில் ஸ்திரீகள் லிங்கபூஜைக்கு அருகர்களே யொழிய, பாகாதி கிரியைகளுக்கும் புணர்ச்சிக்கும் அருகரல்லர்.

லிங்க லக்ஷணம், சுலோஹம்.

லிங்க விர்த்தி சமம்பீடம், தீர்க்கம் விஸ்தார மேவச
ததர்த்தம் கோமுகம் சைவ, கோமுகாக்ரம் ததர்த்தகம்
ததர்த்தம் நாள விஸ்தாரம் பஞ்ச சூத்ரம் பிரகீர்த்திதம்,

லிங்கத்தின் சுற்றளவுக்குச் சமானம் பீடமும், கிழக்கு, தெற்கு, மேற்கு, வடக்கு, சமமாகியும், அவ்விலிங்கத்தின் சுற்றளவில் அரைப்பங்கு கோமுகமும், அக்கோமுகத்தின் அரைப்பாகம் கோமுகத்தின் அகலமும், அம்முகத்தின் அரைப்பங்கு நாளமும், இருக்கவேண்டியது

சிவலிங்க மஹிமை

சங்கர சம்ஹிதை, சுலோஹம்,

சிவலிங்கம் மணி: சாக்ஷரம் மந்த்ர:
பஞ்சாக்ஷா ஸ்ததா பூதிரே வௌஷதம் பும்சாம்

மணி மந்திர அவுஷதம் என்னும் மூன்றினுள்ளே மணிதர்க்கு மணி சிவலிங்கமும், மந்திரமே பஞ்சாக்ஷரமும், விபூதியே ஔஷதமுமென்று சங்கரசம்ஹிதை கூறுகின்றது. மணியெனப்படுவது உலகத்தில் ரசமணியை உணர்த்தும், இக்குளிகையைக்கொண்டு சித்தர் ஆகாசகமன முதலியவற்றைச் செய்வரென்பர், அங்ஙனமே சிவலிங்க மணி வழிபாட்டினால் இஹலோஹ பரலோஹ சித்திகளை யெல்லாம் ஒவ்வொருவர் அடையலாமென்பது பெறப்பட்டது.

சிவ லிங்க பேதங்கள்.

சிவலிங்கமானது அவ்யக்தலிங்கமெனவும், வியக்தா வியக்த லிங்கமெனவும், வியக்தலிங்க மெனவும், மூவகைப்படும், பீடமும் லிங்கமுமாயிருப்பது அவ்யக்த லிங்கமாகும், லிங்கத்திலே முகமுந்தோள்களும் வெளிப்படவிருப்பது வியக்தாவியக்தலிங்கமாகும், எல்லா அவயவங்களும் வெளிப்பட்டிருக்கும். சந்திரசேகரர்முதலிய 25, மாஹேசுர வடிவங்களே வியக்தலிங்கங்களாகும்.

பாத்தியாசமனங்களின், ஞானார்த்தம்,

சிவபெருமானின் திருவடிகளில் பொருந்துவதற்கறிகுறியாகப்பாத்தியமும், அருள்திருமுகத்தில் பொருந்துவதற்கறிகுறியாக அர்க்யமும், மோக்ஷ இன்பத்தை யடைவதற்கறி குறியாகப் புஷ்பமும், ஆன்மாவின் மலத்தைச்சுத்தி செய்வதற்கறிகுறியாகத் திருமஜ்ஜனமும், அஞ்ஞான வாசனையை நீக்குதற்கறிகுறியாக தூபமும், அவ்வஞ்ஞானம்நீங்கியவிடத்து விளங்கும் ஞானத்திற்கறி குறியாகத்தீபமும், மனதிலே அன்புண்டாகுமாறுதற்போதத்தை நீக்குதற்கறிகுறியாக நைவேத்திய முகவாசமும், சிவபெருமானுக்கு உபசாரமாகச் செய்யப்படும்.

இன்னும் பாத்தியாச நார்க்யம் பழுதக லான்மசுத்தி நிமித்தமாகவும், நறுமலரதனை நல் வீட்டின் பங்குறுகுதலேது வாகவுங்கொடுத்து, நின்மலசுத்தி நிமித்தமாக மமிழ்வுடனே திருமஞ்ஜனம்பண்ணி, ஞானவிளக்க நண்ணுதற்பொருட்டுத் தூபதீபந் துதைந்தினிதனித்து, பின் மனமமைவு பிறத்தற் பொருட்டு. நைவேத்ய முகவாச முநல்கி, என்றுச் சொல்லும் சதாசிவரூப சூஸ்திரங்களாலறிக, இன்னும்.

நிர்லேபஞ்ச ஸ்ரீகந்தோ துவந்துவ தியாக பிரசூனகம்
பிரதக்ஷிணம்ச சர்வத்ர வியா பித்வம் சஹசம்புனு
சரித் சமுத்ர சம்யோகாஜ்ஜலம் சமரசம் யதா
ததாத்ம சிவயோர் யோகே நமஸ்கார: பிரகீர்த்யதே

பிரபஞ்ச வைராக்யமே கந்தமென்றும், துவந்துவங்களை ஒன்றுக்கொன்று தொடர்ந்திருப்பதை விடுதலே புஷ்பமென்றும், சம்புவாகிய சிவனோரோடு கூட (அருள்வாயிலாக) யாண்டும் வியாபித்தலே பிரதக்ஷிண மென்றும், நதியானது சமுக்திரத்தோடு சேர்ந்து சமரசமாயிருத்தல்போல ஆன்மா சிவத்தோடு சேருங்கால் (அவ்வான்மா சிவசாமிய குணமுற்றிருத்தலே) நமஸ்கார மெனப்படும், என்று ஸ்ரீகாலோத்தராகமம் கூறுகின்றது.

அந்தர்யாக பூஜையைச் சிவஞான சித்தியார்

அந்தரி யாகந்தன்னை முக்தி சாதனமா
யரைந்திடுவ றதுதானு, மான்ம சுத்தியாகுங்
கந்தமலர் புகையொளி மஞ்ஜனமமுது முதலாகக்
கண்டன வெல்லா மனத்தாற் கருதிக்கொண்டு
சிந்தையினிற் பூசித்துச் சிவனை ஞானத்தாற்
சிந்திக்கச்சிந்திக்கத், † தர்ப்பணத்தை விளக்க
வந்திடு மவ்வொளிபோல மருவி யரனுளத்தே
வரவந்திடுவன் பின், மலமான தறுமே

நித்திய கடமை,

அலிங்கிப்பிராம்மணர்கள் தினப்பிரதி செய்யும் நித்திய கர்மம் சந்தியா வந்தனைதிகள் கிரமப்படி தினப்பிரதி செய்யாதிருந்தாலவர்களுக்கு பாபம் சம்பவிக்கிறதென்றும், வீரசைவ சிவ (லிங்கிப்)பிராஹ்மணர்கள் தினப்பிரதி செய்யும் சிவலிங்கபூஜையே யிவர்களுக்கு நித்திய கருமமாகும். இதையிவர்கள் கிரமப்படி தினப்பிறதி செய்யத்தவறினல் பாபம்சம்பவிக்கிற தென்பது சாஸ்திரோக்தமாகிறது.

முக்தி மார்க்கங்கள்.

விதிமார்க்கமெனவும், பக்தி மார்க்கமெனவு மிருவகைப்படும், இவைகளில் விதி மார்க்கமென்பது மட்குடத்திற்குச் சம

---

†, தர்ப்பணம், கண்ணடி.

மெனவும், பக்தி மார்க்கமென்பது பொற்குடத்திற்குச் சமமென வும், இவைகளில் பிராக்ருதர்களாகிய அலிங்கிகளான அறுசம யத்தவர்களா லனுஷ்டிக்கப்படுவது வேதோக்த விதிமார்க்கமென வும், அப்ராகிருதர்களாகிய சிவபிராம்மணர்களாலனுஷ்டிக்கப்படு வது பக்திமார்க்க மெனவும், இவற்றுள் விதிமார்க்கமானது பர புருடரைப்புணரும் பொதுமாதருக்குச்சமமெனவும், பக்திமார்க்க மானது தன்பதியைப்புணரும்பதிவிரதைக்குச்சமமெனவும் வீராக மங்கூறுகின்றது.

ஸ்நாநங்கள்.

சுத்தஜல ஸ்நாநமானது வெளி மலங் (அழுக்கு) களைப் போக்கும், மந்திரஸ்நாநம் இந்திரியசுத்தியாக்கும், அதாவது பாஹி யாந்தக்கரண சுத்தியையுண்டாக்கும், பஸ்ம (விபூதி) ஸ்நாநம் சர்வ பாபங்களையும் நிவிர்த்திக்கும், சிவத்தியான ஸ்நாநமானது, சிவமய மாக்கும்.

லிங்க, ஜங்கம, துரோகிகள்.

சிவலிங்கத்தை விடுத்து வேறுவடிவங்களை வழிபடுபவர் கள், லிங்கத்துரோகிகள், மற்றும் அஷ்டாவர்ணங்களே ஆபரண ங்களென்றறியாது வேறு ஆபரணங்களை யணிபவர்கள், ஜங்கம துரோகிகளாவார்கள்.

பிராணலிங்க அப்யாச லக்ஷணம்,

சோஹம் என்னும் மந்திரமானது வேதங்களில் புகழத் தக்கமந்திரமாகும், இவை பரசிவனுடைய நிட்கள உருவத்தின் சொரூபமாகிய ஓங்காரத்தையும், பரசிவன் ஆன்மாக்களைத்தனது சிவாநந்தத்தில் அபின்னத்தன்மையடைவிக்கும் பொருட்டு இச்சா சங்கற்ப சிற்சக்தியின் சலனவடிவினதாகிய, அம்சம், என்னும் பஞ்ச சம்க்ஞாரூபஓங்காரசிந்தனுவாயிலாக தனதுபிராண சலனத் தைச்சிற்சக்தியில் லயம்செய்தலே பிராணலிங்காப்யாசமாகும், இன் னும் ஹகார, சகார, யிரண்டெழுத்துக்களின் மத்தியில், ஓங்காரத் தைச் சேர்க்க சோஹம், என விளக்கிற்று, இந்த ஹம்ச, வென் னும் மந்திரமே அஜபாகாயத்ரீயென வழங்கும், இன்னும் இச் சோஹம்என்னும்மந்திரமேபிரணவசஹித பஞ்சாக்ஷரமாகவழங்கு தலுமுண்டு, ஆகாரம், ஹகாரம், மகாரம், சகாரம், †, விசர்க்கம், எனவும், இதுவே சூட்ம பஞ்சாக்ஷர மெனவும், முக்தி பஞ்சா க்ஷர மெனவும், பெயர், இன்னும் நம: சிவாய வென்னும், பஞ்சா க்ஷரமே ஸ்தூல பஞ்சாக்ஷர மெனப்படும்.

அப்ச காயத்ரீ, லக்ஷணம்

பிராணவாயுவு ஓங்காரம், இவை சுவாசம், அ. ஹ. ம். என்னும், மூன்றெழுத்துக்களின் வாயிலாகவே சுவாசம் உட்சொல் லும், இன்னும் ச, ஹ, வென்னும் இரண்டெழுத்துக்களின்வாயிலா கவே, சுவாசம் வெளிவருதலுமாகிய இவ்வுண்மையினை தியானப் பூர்வகமாக அறிவின் கண் அநுபவ வாயிலாக அறிதலே பிராண லிங்க அநுபவஸ்தலம், எனப்படும்.

†, விசர்க்கம் : இரண்டுபுள்ளி.

### உண்மை விளக்கம் வெண்பா.

ஓங்காரமே நற்றிருவாசி உற்றதனுள்
நீங்கா வெழுத்தைக்தே நிறை சுடரும்
ஆங்கார மற்றாரறிவார், அணியம் பலத்தாடல்
இது பெற்றார், பிறப்பற்றார் பின்

### பதி, பசு, பாச, தர்மங்களாவன

யாகம், யக்ஞம், கிருச்ர சாந்த்ராயணிவிரதம் முதலான வைகள் பசுகர்மங்களெனவும், இவை மத்திமகருமமெனவும் இன்னும் குருலிங்க ஜங்கம விபூதிருத்ராக்ஷ பஞ்சாக்ஷர முதலான வைகள் பதிகர்மங்களெனவும், இவை அந்தக்கரண சுத்திவாயிலாக திருவருட் (சிவப்) பிரசாதம் பெறுதற்குச்சாதனமாயும். இதுவே உத்தம கருமமெனவும், இன்னும், மனை. மக்கள், செட்டு. விவசாயம் சரீரபோஷணை முதலானவைகள் பாச கர்மங்களெனவும், இவையே அதம கருமங்களாகும்.

### விபூதி, ருத்திராக்ஷம், சிவ பூஜா.

விபூதி ருத்திராக்ஷ தாரண மில்லாமல், அமங்கல சரீரிகளாக மங்கள மூர்த்தியைப் பூஜிப்பது சரியன்று, இப்படியாக சிவபூஜை செய்பவரின் பூஜையானது ஆற்றில் கமுவின புளியம பழத்திற்குச் சமமாகிறது.

ருத்ரோ பூத்வாய ஜேருத்ரம் நாருத்ரோ ருத்ர மர்ச்சயேத்
பிராண லிங்காங்க சம்பந்தீ சருத்ரோ நாத்ர சம்சய:

என்றால் தான் ருத்திராகி ருத்திரனைப்பூஜிக்கவேண்டுமல்லாமல், தான் ருத்திரனாகாமல் ருத்திரனைப் பூஜிக்கக் கூடாதென்றும், இம்மாதிரியனுசரித்த வீரசைவன் சாக்ஷாத் ருத்திரனேயாவானென்றும், சங்கர சம்ஹிதை சொல்லுகிறது. ஆகையால் சிவபூஜகன் ஆதியில் சிவசின்னங்களான விபூதி, ருத்ராக்ஷங்களை விதியுக்தப்பிரகாரமாகத்தரித் (அணிந்) துக் கொண்டு பிறகு லிங்கமூர்த்திக்கு அபிஷேகாதிகள் செய்ய வேண்டுமென்பது தர்ம சாஸ்திர சித்தாந்தம், இன்னும் சிவபூஜாதிகள், செய்யும்போதும், மந்திரம ஜபிக்கும் போதும், அம்மனிதன் பேசக்கூடாது, ஜபம செய்யும்போதாவது பூஜை செய்யும் போதாவது அஞ்ஞானத்தினலெவன் பேசவைக்கிறானே, அவனுக்கு நூறுவருடங்களானாலும், பிராயச் சித்தமில்லையென்று தர்ம சாஸ்திரம் போதிக்கிறது.

### போஜன விதி

நாம் சாப்பிடப்போகும் எல்லாப் பதார்த்தங்களையும், முதலிலேயே பரிமாறின பிறகு லிங்கமூர்த்திக் கற்பித்து அர்க்யம் (ஜலம்) சமர்ப்பித்த பிறகு போஜனம் செய்ய வேண்டியது.

ருத்ரேணாத்த மஸ்நந்தி ருத்ரேண பீதம் பிபந்தி
ருத்ரேணா க்ராதம் ஜிக்ரந்தி தஸ்மாத் பிராஹ்மணா:
பிரசாந்த மனசோ விக்வாம்சோ நிர்மால்ய மேவ பக்ஷயந்தி

என்றால் வீரசைவ பிராஹ்மணர்கள் ருத்திரன் புசித்ததையே புசிக்கவேண்டுமென்றும், ருத்திரன்பானம் செய்ததையே பானம்செய்ய வேண்டுமென்றும், ருத்திரன்முகர்ந்ததையே முகரவேண்டுமென்றும், ஆனால் சாந்த மனஸ்தரான வித்துவாம்சர் சிவநிர்மால்யத்தையே பக்ஷிக்கவேண்டுமென்று ஜாபாலோபநிஷத்து சொல்லுகிறது.

ஜபம்.

ஜெபம் செய்யத்தக்கவன் ஆதியில் தீக்ஷாகுருவினாலேயே ருஷிதேவதா டம்தஸ்சு பீஜசக்தி கீலகாதிகளை கரன்யாச, தேஹன்யாச, அங்கன்யாசங்களைத் தெரிந்துக் கொண்டு ஜபிக்க வேண்டியது. இன்னும் ஆசிரமானுசாரமாக நியாசங்களிருக்குமேயல்லாமல் சர்வக்ஞருக்கும் ஒரேமாதிரியாகநியாசம் இருப்பதில்லை. ஆதியில் தீக்ஷா குரு தீக்ஷிதனான பிரம்மாசாரிக்குச்சிருஷ்டி நியாசக்கிரமத்தைப் போதிக்க வேண்டியது. சில காலங்கட்குப்பிறகு அப்பிரஹ்மாசாரி விவாஹிதனாகி கிரகஸ்தாஸ்ரமத்தை ஸ்வீகரித்த பிறகு தீக்ஷா குரு மறுபடியும் அவனுக்கு கிரகஸ்தாஸ்ரமத்திற்கு யோக்கியமான ஸ்திதிநியாசத்தைப்போதிக்கவேண்டும், சிலகாலங்கட்குப் பிறகு சிலருக்குச் சமுசாரத்தில் விரக்தியுண்டாகி, வானப்பிரஸ்தன் அல்லது சன்யாசி ஆசிரமத்தை யடைந்தவனுக்கு, அத்தீக்ஷாகுரு மறுபடியும் அந்த ஆஸ்ரமங்கட்கு யோக்கியமான, சம்ஹாரநியாசக் கிரமங்களைப்போதிக்க வேண்டியது. மற்றும் சிலர் பூர்வ ஜென்மபுண்ணிய விசேடத்தால் வைராக்கியசாலிகளாகி, சன்யாசிகளாவதுமுண்டு. அவருக்கு இத்தீக்ஷாகுரு இவரின் நிஜமான சன்யாச விருத்தியைப் பரீக்ஷித்து சம்ஹார கிரமத்தைப்போதிக்க வேண்டியது, இதுசாஸ்திரோக்தமாகையால்இக்கிரமப்படிக்கேசிஷ்யர்களுக்குப்போதிக்கவேண்டியது. இக்கிரமமறியாமல் சிலதீக்ஷா குருக்கள் தம்மிடத்தில்பக்தியுள்ள சில பக்தர்களுக்குச் சம்ஹாரக் கிரமத்தைப்போதித்து அவர்கள் வம்சத்தையே நாசம் செய்கிறார்கள்.

வீரசைவ (லிங்காயுத) விதி முறை.

வீரசைவ குலத்தில் பிறந்தவுடனே குல குருக்கள் ஒரு பரப்பிரஹ்ம ஸ்வரூபமான சிவலிங்கத்தைக் கண்டத்தில் தரிப்பித்ததினாலவன் பவித்திரனானான், பிறகு 8-வது வயதில் சாஸ்திர பிரகாரமாக சிவதீக்ஷை செய்வார்கள், பிறகு 18, 20, வருடங்கள் வரை அவர்கள் சேவையிலிருந்து வேதாத்யயனாதிகளைச் செய்து இக்குருவினாலேயே விவாஹம் செய்துக்கொண்டுச் சிலகாலம் கிரகஸ்தாஸ்ரம அநுபவத்தைப்பார்த்து பிறகு சம்சாரத்தில் விரக்தியுண்டாகி வைராக்யசம்பன்னனாகி இதே குருக்களிடத்திலநுக்கிரஹம் பெற்று வானப்பிரஸ்தாஸ்ரமத்தை ஸ்வீகரிக்கவேண்டியது பிறகுஅக்குருக்களினாலேயே சன்னியாசியாஸ்ரமத்தை ஸ்வீகரித்து ஐக்கியஸ்தலத்திலிருப்பதே சன்யாசாஸ்ரமத்தின் லக்ஷண

மாயிருக்கிறது. இதைப்போலவே கிரமமாக நடந்தால்முக்திலபிக்கும். இதற்கு மாறாக நடந்தால் சாயுஜ்ய முக்தி லபிக்கமாட்டது.

அசுத்தா சுத்தம்,

*அஜாகாவோ மஹிஷ்யச்ச, பிராஹ்மணீச பிரஸூதிகா*
*தசருக்ரேண சுத்தயந்தி பூமிஷ்டம் சனவோதகம்*

ஆடு, பசு, எருமை, முதலானவைகளைப் போலவே ஸ்த்ரீகளும் பிரசவித்த, 10, நாட்கள் வரையில் அசுத்தரென்றும் 11-ம் நாள் ஸ்நானம் செய்த பிறகே சுத்தர்களாவார்களென்றும், இன்னும் நதி முதலானவைகளில் வந்த புதுஜலமுமிப்படியே 10, நாட்கள் வரையில் அசுத்தஜல மென்றும், 11-ம் நாளே சுத்தஜலமாகி ஸ்நானம் பூஜைபாகாதிகளுக்குதவுமென்றும் தர்ம சாஸ்திரம் சொல்லுகிறது. ஆனபடியால் பசு, எருமை, முதலானவைகளின் பாலும் 10, நாட்கள் வரையிலுபயோகிக்காமல், 11-ம் நாள் முதலாக உபயோகிக்கலாமென்று வைத்தியர்கள் சொல்வது நிஜம் தான், எப்படி யென்றால், விசேஷ ரத்தாம்சத்தினால் கூடின இரண்டு மூன்று நாள் பாலே சீம்பால் கட்டியாகக்காய்ச்சி சாப்பிடுவது ராக்ஷசாம்சமேயாகிறது, இப்படியாகவே ஸ்த்ரீகள் ரஜஸ்வலாதி காலத்திலுங்கூட (ஸூதகமான) உடனே ஸ்தானாதிகள் செய்து சுத்தாத்மாவா (பவுத்திரரா) கி சிவலிங்கத்தைச் சரீரத்திலிருந்தகற்றாமல் சதாலிங்கார்ச்சனை செய்யவேண்டியது. ஆகையாலிவர்கள் நித்தியம் சிவலிங்க பூஜைக்குப் பவுத்திரர்களல்லாமல் இதர பாகாதி கிருத்தியங்கள் செய்வதற்கு அதிகாரிகளல்ல, என்று சித்தாந்த சிகாமணியும், பராசர ஸ்மிருதியும், சொல்லுகின்றன.

ஸ்ரீ ஆசார்ய தேவோ யவ.

---

# இஷ்ட லிங்கத்தின் சிரேஷ்டத்வம்.

சிவலிங்க தாரகர்கள் சிவனைத்தவிர வேறு தெய்வங் (தேவதை) களை ஆராதனை செய்ய(பூசிக்க)க்கூடாது, ஸ்தாவரலிங்காராதனைக்கார(பூமியில்ஸ்தாபித்த லிங்கத்தைபூசிப்பவ)ர்களைவிட இஷ்டலிங்காராதனைக்கார (லிங்கத்தை யணிந்து பூசிப்பவ)ர்கள் உத்தமர்களென வீரசைவ சித்தாந்தகிரந்தங்களில் சொல்லப்பட்டிருக்கின்றன. இவர்களிருதரத்தாரும் சிவனென்னும் ஒரேதெய்வத்தை(கடவுளை)ப்பூஜித்துக்கொண்டிருந்தாலும் இதனுள்பூமியில் பிரதிஷ்டிக்கப்பட்ட சிவலிங்கத்தை ஆராதிப்பதைவிட தேஹத்தில் பிரதிஷ்டையான சிவலிங்கத்தை பூஜிப்பதே மேலானதெனச் சொல்லும் காரணமென்னவென்பதையிங்கு விசாரிக்கவேண்டியதவசியமாயிருக்கிறது,தேவாலயத்தில்பிரதிஷ்டை செய்யப்பட்டசிவலிங்கமானது பஞ்சஸூத்திரத்துடன் கூடியது. தேஹத்தில் தரிக்கப்

பட்ட சிவலிங்கமும் பஞ்சசூத்திரத்துடன் கூடியது, சிலாத்துவ தோஷபரிஹாரத்திற்காகவும தேவத்வம்ஸ்திரமாக்குவதற்காகவும் ஸ்தாவரலிங்கத்திற்காயிருக்கும் விசிஷ்ட (மேன்மையான) மந்திர சம்ஸ்காரங்களும இஷ்ட லிங்கத்திற்கும் ஆயிருக்கின்றது, இஷ்ட லிங்கத்திற்கு விதித்திருக்கும் பூஜாநியமங்களனைத்தும் ஸ்தாவர (பூமியிலுள்ள) லிங்கத்திற்கும் விதிக்கப்பட்டிருக்கின்றது, இப்படியா (இவ்விதமா)ன பிறகு ஸ்தாவர லிங்காராதனையை விட இஷ்ட லிங்காராதனையானது எப்படி உத்தமமான தென்னும் சங்கையானது உற்பத்தியாகும்.

ஸ்தாவர லிங்கத்தை ஆராதனை செய்பவன் பிரதிதின மும ஸ்தாவர லிங்கமிருக்கு மிடத்திற்குப்போய் பூஜை செய்ய வேண்டுமென்னு நியமமாவது பூஜை செய்து தீர்த்தப்பிரசாதங் களை ஸ்வீகரித்தபிறகே புசிக்கவேண்டு மென்னும் நியமமாவது இப்படிச் செய்யாமல் போஜனுதி வியவஹாரங்கள் செய்தால் தோஷங்கள் வருமென்னும் நிஷேத சாஸ்திரங்களாவது இருப்ப தில்லை, அவரவர்களின் இஷ்டாநு சாரமாக பண்டிகை முதலான விசேஷ நாட்களிலும் மற்றும் பிரார்த்தனை (வேண்டுகோள்) முத லான சங்கற்ப காலங்களிலும், சுவாமி யிருக்குமிடத்திற்குப்போய் பரிசுத்த பாவனையுடன் சேவை செய்வ (வழிபடுவ) து உலகப்பிர சித்தமானதாயிருக்கிறது. மற்றும் ஸ்தாவர லிங்கத்தை யெவன் பூஜிக்கிறனே அவனே அதைப்பூஜிக்கவேண்டு மென்னும் பிரபல நியமமில்லை, ஒரு தெய்வத்தை அநேகர்கள் பூஜிக்கலாம் அல்லது ஒருவரேயாகிலும், பூஜிக்கலாம். சரீரத்தில் தரிக்கப்பட்டசிவலிங் கத்தை எவன் சரீரத்திலணிந் திருப்பானே அவனே அதைத்தன் னுடைய ஜீவியகாலம் வரையில் பூஜிக்கவேண்டுமென்னும் நியம மிருப்பதல்லாமல் அவன் பிரதிதினமும் ஸ்நாநாதிகளினுல் பரிசுத்த னுகியும் கிரமமறிந்து தத்துவசுத்தி, பூதசுத்தாதிகளினுல் பரிசுத்த னுகியும் குரு உபதேசித்த சாஸ்திர கிரமத்துடனர்ச்சித்து சிவலிங் கத்தின் தீர்த்த பிரசாதங்களை ஸ்வீகரிக்காமல் போஜனுதி வியவ ஹாரங்களைச் செய்துக்கொள்ளக்கூடாது.

சிவபூஜாதி கிரமணம் மஹாதோஷஸ்ய காரணம்

சிவபூஜையை பிரதிதினமும் செய்யாவிட்டால் மஹா தோஷமுண்டாகு மெனவும்.

அசார்ச்ய பதம் சம்போ: பு: க்தே காதகி பாதிய:
ஸ்வாம்ச மஸ்திமூத்ரம்ச புக்தே காதகி பாதிச

என்னும் பிரமாணத்தின்படிக்கு எந்த வீரசைவ (லிங் காயுத)னுவது தன்னுடைய சிவலிங்கத்தைப் பூஜிக்காமல் ஆஹா ரம் புசிப்ப (போஜனம செய்வ) தாவதும், ஜலபான மருத்துவதா வதும், பலஹாராதி பக்ஷணங்களை ஸ்வீகரிப்பதாவதும் முதலான தெதையும் செய்யக்கூடாது, அப்படிக்குச் செய்தாலவன் நரக

காமியா (நரகத்தை யிச்சித்தவனு)வானென சாஸ்திரங்களில் சொல் லப்பட்டிருக்கின்றது. இஷ்ட லிங்கதாரியானவன் தானெப்போ தும் எக்காலத்திலும் சதாசிவசன்னிதியில் வாசம் செய்துக்கொண் டிருக்கிறேனென்னும் திடபாவனையு (உறுதியானதியாமு) டையவ னும்மற்றும் சிவசன்னிதியில்பாவகாரியங்களைச்செய்யக்கூடாதென் னும்பயத்துடன்கூடியுள்ளவனுமானதினால்திரி (மூன்று)காலங்களி லும்சிவஸ்மரணைசிவநாமகீர்த்தனம்,சிவகதாஸ்ரவணம்,சிவசேவனை (சிவனைச்சேவிப்பது)சிவார்ச்சனை (சிவனைப்பூசிப்பது) சிவவந்தனம் (சிவனைவணங்குதல்) சிவகைங்கர்யம். சிவசக்யம்(சிவனிடம் அன்பு கொண்டிருத்தல்)ஆத்மார்ப்பண முதலான நவ(ஒன்பது விதமான பக்திகளுடன் கூடிக்கொண்டிருக்கவேண்டு மென்பதே சிவலிங்க தாரணையின் முக்கியோத்தேசமாயிருக்கின்றது. ஸ்தாவரலிங்கா ராதனைக்காரர்கள் முக்திசாதனங்களான இன்நவவித (ஒன்பது விதமான)பக்திகளைச் சாதிக்கவேண்டியிருந்தாலுமவர்களுக்கு எப் போதும் சிவலிங்கத்தின் சான்னித்திய (சமீப) த்திலிருப்பது சாத் தியமில்லை, ஏனென்றால் தேவாலயத்திலுள்ள சிவலிங்கத்திற்கும் தனக்கும் இடைவிடாத சான்னித்தியமில்லாதிருப்பதனாலும் சிவ லிங்கத்தின் தரிசனம் செய்யவேண்டுமென்னும் இச்சையுண்டான போது மாத்திரம் ஸ்நாநம் செய்து தேவாலயத்திற்குப்போக வேண்டியதாயிருக்கிறது, அத்தேவாலயத்தில் எவ்வளவு நேரம் வரையில் சிவன் பிரத்தியக்ஷமாகக் காணப்படுகின்றதோ அது வரையில் (அக்காலபரியந்தம்)மாத்திரம் அவன்செய்த பாவகருமங் களைத்தும் மறந்து பரிசுத்த பாவனையுடன் கூடியிருக்கிறான். மறுபடியும் தேவாலயத்தை விட்டு வெளியில் வந்தவுடனே சிவ சான்னித்தியமானது இல்லாதிருப்பதால் காயகம் வாசகம் மானசிகங்களான (காமப்பிராந்தியினாலும், வார்த்தையாலும், மனத்தினாலும்) பாவகருமங்களைச் செய்வதற்கு அவகாசமேற் பட (சமயமுண்டாக) லாம், பூமியையரசாளும் மஹாராஜனுக்கு எதிரில் நின்று கொண்டிருக்கும் பிரஜைகளுக்கும் தூரத்தில் யதேச்சையாகத்திரிந்து கொண்டிருக்கும்பிரஜைகளுக்கும் அநேக வித்தியாசங்களுண்டு, தூரத்திலிருக்கும் பிரஜைகளின் பயபக்தி களுக்கும் ராஜ சன்னிதியிலுள்ள பிரஜைகளின் பயபக்திகளுக் கும், வெகு (அநேக) வித்தியாசமுண்டாயிருப்பதைப்போல சதா (சிவலிங்க)சான்னித்தியமுள்ள சிவபக்த சிரோன்மணிகளுக் கும் ஏதோவொரு நாள் சொற்ப நேரம் சிவலிங்கமிருக்கு மிடத் திற்குப்போய் சிவலிங்க தரிசனம் செய்யும் சிவபக்தர் களுக்கும் அநேகமான தாரதம்மியங்களிருக்கின்றன. என்பது அநுபவ சித்தாந்தமாகத் தெரியவருகிறது, ஆனதினால் குருவினால் சம்ஸ் காரம் செய்யப்பட்ட தேஹ (சரீர) மென்னும் தேவாலயத்தில் சிவலிங்க சான்னித்திய மிடைவிடாதிருப்பதால் எப்பொழுது

(எக்காலமு)ம் பயபக்தியுள்ளவனுயிருந்து காயம், வாக்குமனங்களுள்ளும் ஏதாவதொன்றினுலும் நரகஹேதுவானபாவகாரியங்களைச் செய்ய அவகாச (சமய)மிருப்பதில்லை, அப்படி பாவகருமங்களைச் செய்தால் ஸ்தாவர லிங்காராதகர்கள் செய்த பாவகாரியங்கள் சிவசான்னித்தியமில்லாதிருக்கும்போது செய்தபடியால் க்ஷமையா (மன்னிப்புண்டா) னுலுமாகலாம், இஷ்ட லிங்காராதகனுனவன் செய்யும் பாவகருமங்களானது சிவ சன்னிதியிலேயே நிர்ப்பீத (பயமில்லாதவ) னுகச் செய்யப்பட்டதினுல் அக்ஷம்யவாதங்களை (மன்னிக்கக்கூடாதவை யெ) ன்றே சொல்லவேண்டியதாகிறது, சிவசன்னிதியிலில்லாதபோது செய்த பாவகருமங்களானவை அஞ்ஞானதோஷத்தினுல் செய்யப்பட்டவையாகும். சிவசன்னிதியில் செய்யப்பட்ட பாவகருமங்களானது ஞான பூர்வகமாக செய்யப்பட்டதானதால் பிரயுக்த லிங்கதாரியானவன் ஜாக்கிர சுவர்ப்பன சுழுத்தி முதலான மூன்றவஸ்தைகளிலுங்கூட சிவசம்மந்தமான புண்ணியகாரியங்களைச் செய்யவேண்டு மேயல்லாமல் சிவ விரோதங்களான பாவகருமங்களைச்செய்யக்கூடாது, இப்படிக்கல்லாமல் பாவகாரியங் (அக்கிரமத்தொழில்) களைச்கைக்கொண்ட லிங்காங்கியினுடைய அபராத (குற்ற) மானது அதிகமெ(மிகுதியெ)ன்றே ஸ்பஷ்டமாகத் தெரியவருகின்றது.

வீரசைவ (லிங்காயுத) மதஸ்தாபகர்களான ஸ்ரீஜகத்குரு பஞ்சாசாரியர்கள் சிவலிங்கத்தை ஓரிடத்தில் வைத்து பூசிப்பதைவிட அனவரதமு (எப்பொழுது) ம் சம்ஸ்காரம் செய்த சரீரத்தில் தரித்துக்கொண்டிருப்பது உத்தமமார்க்கமென லிங்கதாரணத்தின் மஹத்துவத்தை வேதாகமபிரமாணங்களுடன் ஸ்திரம் செய்திருக்கிருர்கள், ஸ்ரீபஞ்சாசார்ய சித்தாந்தாவலம்பிகளான அநேக வீரசைவ பண்டிதர் (சாஸ்திரி) களுங்கூட இத்தத்துவார்த்தத்தை நன்ருகப் பரிசோதித்து.

சுலோஹம்

லிங்கதாரீ சதாசுத்த : நிஜலிங்கம் மனோஹரம்
அர்ச்சயேத் கந்தபுஷ்பாத்யை : கரபீடே சமாஹித :

கிஞ்சிற்ருவதும் பாவகருமங்களின் சங்கற்ப (நியமம் அல்லது விருப்ப) மில்லாமல் கண்டாதி (கழுத்து முதலான) யுக்தமா (உத்தம அ) ங்கங்களில் தரித்துக்கொண்டுள்ள (தாங்கிக் கொண்டிருக்கப்பட்ட)சிவலிங்கத்தைத் தன்னுடைய ஹஸ்த(கை) உருவமான சிம்ஹாசனத்தில் வைத்து பூசித்துக்கொண்டு சதா பரிசுத்தனுகவேண்டுமென உபதேசம் செய்திருக்கிருர்கள்.

ஸ்ரீபஞ்சாசார்ய பிரசீதம்து.

30--10--33, பிரபா பத்திரிக்கையின் மொழி பெயர்ப்பு,

# திரி வித லிங்கோபாசனே,

லயகத்யர்த்த யோர் ஹேது பூதத்வாத் சர்வதேஹினும்
லிங்க மித்யுச்யதே சாக்ஷாத் சிவன் சகல நிஷ்களம்,

ஸ்தாவர ஜங்கமாத் மகமான பிரபஞ்சமானது எவனுல் தோற்றப்பட்டு (உதயமாகி) எவனுல் ஐக்கியமா (ஒன்றிப்பா) கின்றதோ அப்படிப்பட்ட பரமாத்மனே லிங்கமெனச் சொல்லிக் கொள்ளப்படுகிறுன். இப்படிப்பட்ட லிங்கமூர்த்தி ரூபமான பரசிவன் ஜகத் தபிவிர்த்திக்காக சகல ரூப (எல்லாவடிவமுள்ள)ஞகியும், நிஷ்கள ரூப (உருவில்லாவடிவ) த்திலிருக்கும் காலத்தில் பாவ (விருப்ப) லிங்கமெனவும், சகல நிஷ்கள ரூப (உருவா ருவ)த்திலிருக்கும் காலத்தில் பிராணலிங்க மெனவும், கேவல சகல ரூபத்திலி (உருவத்துடனி) ருக்கும்போது இஷ்டலிங்கமெனவும் மூன்றுவது (பகு) ப்பாயிருக்கிறுன். இவைகளில் பாவ (விருப்ப) லிங்கமென்பது அதிசூட்மமானதினுல் பாவத்தி (நினைவி) லிருந்து கிரகிக்க (பற்ற) யோக்கியமானது, பிராணலிங்கமானது, சூட்மமானதினுல் மனதி (சிந்தையி) ஞல் கிரகிக்க யோக்கியமானது, இஷ்ட (இச்சை) லிங்கமானது ஸ்தூலமானபடியால் நேத்திரங் (கண்) களால் கிரகிக்க (பற்ற) யோக்கியமானது. உலகத்தில் எப்பதார்த்தம் கண்ணுல் பார்க்கக்கூடியதோ அவ்வஸ்துவினிடத்திலேயே மனது (சிந்தையு) ம் பாவனையு (எண்ணமு) ம் பிரவர்த்திக்கும், எப்பதார்த்தமானது கண்ணுக்ககப்படுவ (விழிக்குக்கிடைப்ப) தில்லையோ அது மனதுக்கு கோசரமா(கருத்துக்கு அறியதக்கதா) வதில்லை எதுமனதுக்குகோசரமா(சிந்தைக்குவிளங்கு)வதில்லையோ அப்பதார்த்தமானது பாவனைக் (எண்ணத்திற்) கு என்றைக்கும் கோசர (விளக்க) மாவதில்லை, பவரோகத்தை நாசம்(ஜனனமரணப் பிணியை) (அழிவு) செய்யும் சிவலிங்கத்தை நாம் முதலில் நம்ம கண்களுக்கெதிரில் ஹஸ்த (கை) பீடத்தில் வைத்து ஆராதனை (பூசனை)ச் செய்யவேண்டுமேயல்லாமல் சூட்ம உருவத்துடனுவது அல்லது அதிசூட்ம (சூக்குமத்திற் சூக்கும) உருவத்துடனுவது பூஜிக்கமுடிவதில்லை, சித்திரக்காரன் அதிசூட்மமான சித்திரத்தை யெழுதவேண்டுமானுல் முதலில் ஸ்தூலாகார (பிரதமத்தில் உருவ அல்லது வடிவ) ங்களான அநேக சித்திரங்களை எழுதவேண்டியதாயிருக்கிறது. இப்படியே எழுதிக்கொண்டுவந்த பிறகு அவனது கைகள் பழகி அத்மமு (பிராணனு) ம் சூட்மமாகி சூட்சும சித்திரத்தைஎழுதும்யோக்கியதையை யடைகிறுன், இப்படிக்கல்லாமல் தன்னுடைய கைகளினுலும் திருஷ்டி (பார்வை) யினுலும் எவ்வித அப்பியாச (எப்படிப்பட்ட பழக்க) மும் செய்யாத மனிதனுக்கு ஆத்துமாவி (பிராண) னிடத்திலாவது, மனதி (கருத்தி) னிடத்திலாவது யாதொரு விசேஷாம்சமும் காணப்படுவதேயில்லை, ஆனதினுல் பிறதியொரு பதார்த்தா நுபவமென்பது முதலில் நேத்திரத்திற்குத் தெரிந்த பிறகே மனதி (சிந்தையி) னிடத்திலும் பிறகு

பாவனையி (எண்ணத்தி) னிடத்திலும் கிராஹ்யமாகு (விளங்கு) மென்பது சர்வானுபவ சித்தமாயிருக்கின்றது, இதைப்போலவே சூட்மாதி சூட்மமான சிவலிங்கஸ்வரூபமானது தனக்கு சாக்ஷாத்காரமாக வேண்டுமானுல் முதலில் ஸ்தூலாகாரத்திலுள்ள இஷ்ட லிங்கத்தை ஆராதிக் (வணங்) கவேண்டியதவசியமாயிருக்கின்றது, இவ்விஷ்ட லிங்கத்தை யாராதியா (பூசிக்கா)மலிருப்பவன் பிராண லிங்காராதனைக்கு அருகனுக மாட்டான், பிராண லிங்காராதனையைச் செய்யாதவன் பாவலிங்காராதனைக்கு அருகனுக மாட்டான், இஷ்டலிங்கமானது ஸ்தூலாகாரமானதினுல் நேத்திரத்திற்கு கிராஹ்யமான (கண்ணிற்கு தோற்றக்கூடிய)து. பிராண லிங்கமானது சூட்மாகாரமானதினுல் கேவலம் மனதுக்கு கிராஹ்யமாக(தோற்ற)க்கூடியது. பாவலிங்கமானது அதிசூட்மாகாரமானதினுல் கேவல பாவனையி (இஷ்டமான அல்லது உறுதியான தியானத்தி)ல் கிராஹ்யமாக (தோற்ற)க் கூடியது.

ஸ்தூலம் பாஹ்ய மிதிப்ரோக்தம் சூட்ம மாப்யந்தரம் ஸ்ம்ருதம்

இஷ்டலிங்கம், பிராணலிங்கம், பாவலிங்கம், என்னுமிம் மூன்று லிங்கங்களும் சூட்மமானவைகளாகும், இச்சூட்மங்களான பிராணலிங்கம் பாவலிங்கங்களே ஆப்யந்தர (உள்ளேயிருக்கும்) லிங்கங்களாகும், இஷ்ட லிங்கமே பாஹ்ய (வெளியிலுள்ள) லிங்கமாகும், இவைகளில் இஷ்ட லிங்கத்தை வேதோக்த நியமங்களு (வேதங்களில் சொன்ன முறைமையு) டன் பூஜியாதவனுக்கு பிராண லிங்காராதனையும் மற்றும் பாவலிங்காராதனையின் சாமர்த்தியமு முண்டாவதில்லை, ஹிருதயா (மனு) காசத்தில் ஸ்வஸ்வரூபத்துடன் (உருவமாகியும் உருவமில்லாமலும்) பிரகாசித்துக்கொண்டிருக்கும் ஜோதிர் லிங்காராதனையின் சக்தியை யுண்டாக்குவதே இஷ்ட லிங்காராதனையின் பலனு(லாபமா) யிருக்கிறது. இவ்விஷ்டலிங்காராதனையைச் செய்யாதவன் ஜோதிர்லிங்கசாக்ஷாத்காரத்தை யடைவே னெனச்சொன்னுலவன் விதையை (வித்தை) விதைக்காமல் விளைவை (ஆதாயத்தை) அபேக்ஷிக்கு (விரும்பு) ம் மூடனைப்போலகேலிக்காரனுவான், ஆனதினுல்வீரசைவ சித்தாந்த ஸ்தாபகர்களான ஜகத்குரு பஞ்சாசார்யர்கள் சர்வ ஜனங்களும் இப்பரமாத்மனைப் பூஜித்து பவபந்த (ஜெனன மரண) துக்கத்திலிருந்து விடுதலையாகவேண்டு மென்னும் விசாலதிருஷ்டி(விரிவான பார்வை)யினுல்ஸ்தூலமான இஷ்ட லிங்காராதனா ரூபமாக நியமங்களைச் செய்திருக்கிறுர்கள். வீரசைவ (லிங்காயுத) மதஸ்தனுயிருப்பவனுடைய சரீரத்திலிப்படிப்பட்ட இஷ்டலிங்கமிருப்பதில்லையோ அவன் தேஹ (சரீர) மானது பாழடைந்த க்ஷேத்திரத்தைப்போல வியர்த்தமான(பயனில்லாத)து இவ்விஷ்டலிங்கமானது மோக்ஷோபாயத்திற்கு பிரதமசோபான (முதல் படித்தர)மான படியாயிதை சித்தாந்தக்காரர்கள் விசேஷமாக ஸ்துதி (பிரதானமாக அல்லது மேன்மையாக ஸ்தோத்திரம்) செய்திருக்கிறுர்கள்.

இஷ்ட வாப்திகரம் சாக்ஷா தனிஷ்ட பரிஹாரகம்
இஷ்டி : பூஜாதயா நித்ய மிஷ்டம் பூஜித மாதராத்
இஷ்டலிங்க மிதி புரோக்த மாசார்யைர் லிங்கபூஜகை:
இஷ்டமர்த்தம் ஸ்வபக்தானு மனுச்சதி சர்வதா
ததிஷ்ட லிங்க மித்யாஹே தஸ்மாதா தர்வணீ சுருதி:

இவ்விஷ்டலிங்கமானது, பக்தர்களுகககு இஷ்டார்த்த பலன்களையுண்டாக்குகின்றது, அநர்த்த பரம்பரை (பயனிலாத முறைமை) களையெல்லாம் போக்கும், இஷ்டியென்றால்பூஜை,இப்படிப்பட்ட பூஜையினால் எந்த லிங்கமானது பக்தியுடன் பூஜிக்கப் படுகின்றதோ அதுவே இஷ்டலிங்கமென லிங்க பூஜகரான மஹா சார்யர்கள் அபிப்பிராயப்பட்டு (எண்ண முடையவர்களா) யிருந்திருக்கிறார்கள். ஆகையால் இவ்விலிங்கத்தைத் தன்னுடைய சரீரத்திலணிந்துகொண்டு அனவரதமு (எப்பொழுது)ம் பூஜித்துக் கொண்டிருக்கும் பக்தர்களுடைய இஷ்டார்த்தங் (இச்சைப்பட்டவை) களை உண்டாக்குவதாலிது இஷ்ட லிங்கமென்னும் பெயரையடைந்திருக்கின்றதெனஅதர்வணவேதவாக்கியமுதலானவைகள் இவ்விஷயத்தை ஜாக்கிரதையா (கவனிப்பா)கச் சொல்லியிருக்கின்றன. ஆனதால் இஷ்ட லிங்கத்தையணிந்து பூஜிக்கவேண்டியது அதியவசியமாயிருக்கின்றது. ஸ்தூல சரீரத்தில் இஷ்டலிங்காராதனை செய்து சித்தியடைந்தவனுக்கு சூட்மசரீரத்தில் பிராணலிங்காராதனை சுலபமாகும், பிராணலிங்காராதனையில் சித்தியையடைந்தவனுக்கு காரண சரீரத்தில் பாவலிங்காராதனை சுலபமாக லபிக்கும். எந்த வீரசைவனு (லிங்கதாரியு)ம் ஸ்ரீகுருவினாலனுக்கிரகிக்கப்பட்ட இஷ்டலிங்கத்தை யடைந்து கிரமமறிந்து பரிசுத்தாத்ம (தூய்மையான பிராண) னாகி அர்ச்சி (பூசி) ப்பதில்லையோ அவன் மனோகிராஹ்யமும் ஆத்மகிராஹ்யமுமான பிராணலிங்க பாவலிங்காராதனைகளுக்கு அருகனுவதில்லை. கீழ்த்தாவகுப்புக்குவேண்டிய ஞானத்தையடையா (வாசிப்பைக் கற்றுக்கொள்ளா) தவன் மேல் (மேலான) வகுப்புக்குப் பிரவேசிக்க அருகதை யுண்டாவதில்லை, யென்பது சர்வாநுபவசித்தமாயிருக்கின்றது. இப்படியாக ஸ்தூல சூட்மகாரணங்களென்னும் மூன்றுசரீரங்களிலும் கிரமமாக இஷ்ட பிராண, பாவ (தியான) முதலிய மூன்று லிங்கங்களையும் தரித்து (அணிந்து)ப் பூஜிக்கும் சக்தியை யடைந்தவனே ஜீவன் முக்த (ஞானமடைந்தோ) னென்னும் பெயரையடைவான். இம்மாதிரியாக மதஸ்தாபகர்களான ஸ்ரீஜகத்குரு ரேணுகாதி பஞ்சாசார்யர்களுடைய சித்தாந்த நியமங்களை யெல்லாம் சாங்கமாக பரிபாலி (ஒழுங்காக பாதுகா) த்தவர்களிடத்தில் பரமாத்மன் சம்பூர்ண (நிறைந்த) கிருபாகடாக்ஷம் வைத்து மோக்ஷரூபமான நித்திய பதவியை யநுக்கிரகிப்பான்

ஸ்ரீ சத்குரு ஸ்வாமினே நம:

6—11—33, பிரபா பத்திரிக்கையின் மொழி பெயர்ப்பு,

ஸ்ரீ பஞ்சாசார் யேப்யோ நம :

# ஸ்ரீ பஞ்சாசார்ய பிரபாகரம்,

## (1) பஞ்ச ஆகமங்கள்

சுப்ரபோதாகம, சுலோஹம்

காமிகோ ரேணுகார்யஸ்ய தீப்த : ஸ்ரீ தாருகஸ்யச
ஏகோராமஸ்ய விஜயோ ரௌரவ : பண்டிதஸ்யச
விஸ்வாராத்யஸ்ய புரோத்கீதச் சைதே சூத்ராணி பார்வதி

ஏ பர்வத நந்தினியே ரேணுகாராத்யருக்கு காமிகாகமமும், மருளாராத்யருக்கு தீப்தாகமமும், ஏகோராமாராத்தியருக்கு விஜயாகமமும், பண்டிதாராத்யருக்கு ரௌரவாகமமும், விஸ்வாராத்யருக்கு புரோத் கீதாகமமும், சூத்திர ரூபங்களாகும்.

## (2) மந்திர ரூபம்.

நகாரோ ரேவணார்யஸ்ய மகாரோ மருளஸ்யச
சிகாரச் சைகராமஸ்ய, வாகார : பண்டிதஸ்யச
யகாரோ விஸ்வகர்ணஸ்ய மந்திர ரூபாச்ச பார்வதி

ஏ பார்வதியே ரேவணாராத்யருக்கு நகாரமும், மருளாராத்யருக்கு மகாரமும், ஏகோராமாராத்தியருக்குசிகாரமும், பண்டிதாராத்யருக்கு, வகாரமும், விஸ்வாராத்தியருக்கு யகாரமும் மந்திர ரூபங்களாயிருக்கும்.

பிரசாதோ ரேணுகார்யஸ்ய, மாயாது மருலஸ்யச
ஏகோராமஸ்ய வைசூட்ம : ஸ்தூல : ஸ்ரீபண்டிதஸ்யச
விஸ்வாராத்யஸ்ய மூலஸ்து, பஞ்ச பஞ்சாக்ஷரீ சிவெ

ஏகிரிஜே ரேணுகாராத்யருக்கு பிரசாத பஞ்சாக்ஷரமும் மருளாராத்தியருக்கு மாயாபஞ்சாக்ஷரியும், ஏகோராமாத்தியருக்கு சூக்ஷ்ம பஞ்சாக்ஷரியும், பண்டிதாராத்தியருக்கு ஸ்தூல பஞ்சாக்ஷரியும், விஸ்வாராத்தியருக்கு மூல பஞ்சாக்ஷரியும் இவைகளே போதிக்கும் மந்திரங்களாகும்.

## (3) தண்டங்கள்

அஸ்வத்தோ ரேணுகார்யஸ்ய பலாசோ மருலஸ்யச
வைணவச் சைகராமஸ்ய நியக்ரோத : பண்டிதஸ்யச
விஸ்வாராத்யஸ்ய பில்வஸ்து கிரமாத்தண்டா : பிரகீர்த்திதா :

பார்வதியே, ரேவணாராத்யருக்கு அரசன் தண்டமும், மருளாராத்தியருக்கு புரசன் (புரசமர) தண்டமும், ஏகோராமாராத்தியருக்கு வேணு (மூங்கில்) தண்டமும், பண்டிதாராத்யருக்கு ஆலன் (ஆலமரத்தின்) தண்டமும், விஸ்வாராத்யருக்கு வில்வ (வில்வமரத்தின் தண்டமும், கிரமமாக யுக்தங்களாயிருக்கும்.

## (4) கமண்டலங்கள்.

ரஜதோ ரேணுகார்யஸ்ய தாம்ரஸ்து மருலஸ்யச
ஏகோராமஸ்ய லோஹஸ்ய காம்ஸ்யஸ் ஸ்ரீபண்டிதஸ்யச
விஸ்வாராத்யஸ்யசௌவர்ண: கிரமாத் ப்ரோக்த : கமண்டலு:

ரேணுகாராத்யருக்கு வெள்ளிகமண்டலமும், மருளாராத்யருக்கு தாம்பிரகமண்டலமும், ஏகோராமாத்தியருக்கு இரும்புகமண்டலமும், பண்டிதாராத்யருக்கு வெண்கல கமண்டலமும், விஸ்வாராத்தியருக்கு சுவர்ண(தங்க)கமண்டலமும், கிரமமாக உத்பன்னங்களாயிருக்கும். (5) வர்ண வஸ்திரங்கள்.

ஹரித்கந்தா ரேணுகஸ்ய ரக்தா ஸ்ரீ தாருகஸ்யச
ஏகோராமஸ்ய நீலாச, ஸ்வேதா ஸ்ரீபண்டிதஸ்யச
விஸ்வாராத்யஸ்ய பீதாச கிரமாத்கந்தா: பிரகீர்த்திதா:

ரேவணாராத்தியருக்கு பச்சைவர்ண வஸ்திரமும், மருளாராத்யருக்கு சிகப்பு வர்ண வஸ்திரமும், ஏகோராமாராத்தியருக்கு நீலவர்ண வஸ்திரமும், பண்டிதாராத்தியருக்கு வெள்ளை வஸ்திரமும் விஸ்வாராத்தியருக்கு முழுமஞ்சள்வர்ண வஸ்திரமும் சொல்லப்பட்டிருக்கிறது. சுப்ர போதாகம சுலோஹம்.

பூர்வதிக் கலசாதீச: சிவலாண்டன தாரக:
த்வாதசாணும் சஹஸ்ராணும், சரலிங்காதி வோபவத்
தக்ஷிண கலசாதீச: சிவலாண்டன தாரக.
ஷட்சஹஸ்ரேதி சம்க்யாக சரலிங்காதி வோபவத்
பச்சிம கலசாதீச: சிவலாண்டன தாரக:
திரிசகஸ்ரேதி சம்க்யாக சரலிங்காதி வோபவத்
உத்திர கலசாதீச: சிவலாண்டன தாரக:
அசங்க்யாதேதி சங்க்யாக சரலிங்காதி வோபவத்
மத்திய கலசாதீச: சிவலாண்டன தாரக:
கணாதீத பூர்வோக்த சரலிங்காதி வோபவத்

கிழக்கு கலசாதிபதிகளும், சிவலாண்டன தாரகருமான ஸ்ரீஜகத்குரு மருளாராத்தியர் ஆறாயிர ஜங்கமருக்கு அதிபதியாய் இருப்பார். மேற்கு கலசாதிபதிகளும், சிவலாண்டன தாரகருமான ஸ்ரீ ஜகத்குரு ஏகோராமாராத்தியர் மூவாயிர ஜங்கமருக்கு அதிபதிகளாயிருப்பார். வடக்கு கலசாதிபதிகளும், சிவலாண்டன தாரகருமான ஸ்ரீ ஜகத்குரு பண்டிதாராத்தியர் அசங்க்யாத (எண்ணிறந்த) ஜங்கமருக்கு அதிபதிகளாயிருப்பர். மத்திய கலசாதிபதிகளும், சிவலாண்டனதாரகருமான ஸ்ரீ ஜகத்குரு விஸ்வாராத்தியர் கணாதீத ஜங்கமருக்கு அதிபதிகளாயிருப்பார்.

பஞ்ச பூத பஞ்சப் பிரம்ம மயம் ஜகத்.

சுப்ரபோதாகம சுலோஹம்.

சத்யோஜாதோ பவேத் பூமி: வாமதேவஸ் ததாஜலம்
அகோரஸ் சாக்னி ரித்யுக்தஸ் தத்புருஷோ வாயுருச்யதே
ஈசானோ ககநாகார: பஞ்சப்பிரஹ்ம மயம் ஜகத்

சத்தியோஜாத முகமே பூமியும், வாமதேவ முகமே,ஜலமும், அகோர முகமே, அக்கினியும், தத்புருஷ முகமே, வாயுவும், ஈசான்ய முகமே. ஆகாசமும் ஆக இந்தஜகத்து பஞ்சப் பிரஹ்ம மயமாயிருக்கும்.

# ஆராத்தியரின் நாமங்கள்.

## ஆராத்யகவசம்.

*ஆராத்யோ குருராசார்யோ கணதீசோ சிவத்விஜ:*
*ருத்விச்ச தேசிகாத்யக்ஷா கௌரவ: ஸ்திர ஜங்கம:*
*ஆர்ய தீக்ஷித பிரஹ்மக்ஞா ஆராத்யாக்யா ஸ்திரயோதச*

ஆராத்தியரின் நாமங்களாவன:— ஆராத்தியர், குரு, ஆசார்யர், கணதீசர், சிவபிராஹ்மணர், ருத்விஜர், தேசிகர், அத்யக்ஷகர், கௌரவர், ஸ்திரஜங்கமர், ஆரியர், தீக்ஷிதர், பிரம்மக்ஞர் என்னுமிப் 13, பர்யாய நாமங்களினால் ஆராத்தியன் விளங்கிக்கொண்டிருப்பான்.

*ஆராத்ய கர்ப்பசம்பூதா ஆத்மதத்வ விசாரதா;*
*தாராபுத்ர சமாயுக்தா, அராத்யா: ஸ்திர ஜங்கமா:*

ஆராத்தியர்கள், கர்ப்பசம்பூதராகியும் ஆத்மதத்துவ விசாரத்தவராகியும், தாராபுத்திரரினால் கூடினவராயிருக்கும் ஆராத்தியர்கள் ஸ்திரஜங்கமரென்று சொல்லிக்கொள்ளப்படுவார்கள்.

*சமஸ்த வீரசைவேஷு: பாவகா ஸ்திரஜங்கமா:*
*தேபவேயுஸ்ச கோத்ரோத்தா வீரசைவத் விஜோத்தமா:*

சமஸ்த வீரசைவரிலும், வீரசைவ பிராஹ்மண சிரேஷ்டர்களே அத்தியந்தபாவன மூர்த்திகளாகிறார்கள். வீராதி கோத்ரோத்பவரான ஆராத்யர்களே ஸ்திர ஜங்கமராவார்கள்.

## பாரமேஸ்வர ராகமம்.

*பிரஹ்மணா வீரசைவஸ்த்தா: சிகா யக்ஞோப வீதிந:*
*லிங்க ருத்ராக்ஷ பஸ்மாங்க, பிரஹ்ம கர்ம சமாஸ்ரிதா:*

சிகாயக்ஞோபவீதம், லிங்கம், ருத்ராக்ஷம், விபூதி, இச்சின்னங்களினால் யுக்தராகி, யஜனம், யாஜனம், அத்தியயனம், அத்யாயனம், தானம், பிரதிக்ரஹணங்களென்னும், ஷட்கர்மங்களையும், ஆஸ்ரயித்தவரே வீரசைவ பிராஹ்மணராவார்கள்.

*அஹிம் சாயா: பரோதர்மோநா நிச்சாயா: பரம் சுகம்*
*அதர்வான்ன பரோவேத ஆராத்யான்ன பரோகுரு:*

அஹிம்சையைவிட சிரேஷ்டமான தர்மமில்லை. நிரபேட்சையைவிட சிரேஷ்டமான சுகமில்லை. அதர்வணவேதத்தைவிட சிரேஷ்டமான வேதமில்லை ஆராத்தியனையைவிட சிரேஷ்டமான குருவில்லை

*குருஷ்வத்யக்ஷ ஆராத்ய: சுராத்யக்ஷோ மஹேஸ்வர:*
*புராத் யக்ஷஸ்ச கைலாசோ முன்யத் யக்ஷஸ்ச நாரத:*

சமஸ்த தேவதைகளுக்கும், பரமேஸ்வரனெப்படி அத்யக்ஷகனாயிருப்பானோ, சமஸ்த புரங்களுக்கும், கைலாசபுரமெப்படி அத்யக்ஷதையாயிருக்கிறதோ சமஸ்த முனிகளுக்கும், நாரதரெப்படி அத்யக்ஷகனாயிருப்பாரோ அப்படியே சமஸ்த குருக்களுக்கும், ஆராத்யன் அத்யக்ஷகனாயிருப்பான்.

சிவயேவ சிவாராத்ய ஆராத்ய ஹிருதயம் சிவ :
சிவஸ்ய சித்த மாரத்திய ஸ்தஸ்மாத் பாவன உச்யதே.

சிவனே ஆராத்தியன், ஆராத்யனின் ஹிருதயமே சிவன் சிவனின் ஹிருதயமே ஆராத்யன், ஆனதினால் இந்த ஆராத்தியன் பவித்திர (பரிசுத்த)மூர்த்தியென்று சொல்லிக்கொள்ளப்படுவான்.

குரு லிங்காராதனையினால் மோக்ஷமடைந்தவர்கள்.

சிவதர்ம சாஸ்திரம்.

விஷ்ணு பிரஹ்மாச விக்னேசோ பாரத்வாஜாதி தாபசா :
இந்திராதி சர்வதிக் பாலா தானவா மனு மானவா :
லிங்கபூஜா நிமித்தார்த்தம் தீக்ஷாபி லக்ஷிதா : சதா
குரோராதானம் க்ருத்வா சமாபு : பரமம் பதம்.

விஷ்ணு, பிரமன், கணபதி, பராத்வாஜாதி, மஹரிஷிகளும், இந்திரன் முதலான சமஸ்த திக்குப் பாலகர்களும், தானவர் மனுக்கள், மானவர், இவர்களெல்லாம் லிங்க பூஜையைச்செய்து தன்னியராகவேண்டுமென்னும்,ஹேதுவினால் எப்போதும் தீக்ஷா பிலாசை யுள்ளவர்களாக குருவின் ஆராதனையைச்செய்து சிரேஷ்டமான பதவியை யடைந்தார்கள்.

ஆராத்ய கவசம்.

நந்தி பிருங்கிரிஷி: காளி வீரபத்ரோ கஜானன :
புஷ்பதந்தோ கௌதமாத்யா விரக்தா : பிரமதாதிபா :
இந்திரமுக்யதி சாதீசா: சூர்ய சந்த்ராதி சத்கிரஹா :
குரோராதனம் கிருத்வா லேபிரே சிவமந்திரம்.

நந்தீஸ்வரன், பிரிங்கிரிஷி, மஹாகாளி, வீரபத்திரன், கஜானனன், புஷ்பதந்தன், கௌதமாதி மகரிஷி புங்கமர்கள், விரக்தர், பிரமதாதி பதிகள், இந்திராதி சமஸ்ததிக்கு தேவதைகளும், சூர்ய சந்திராதி கிரஹங்களுக் கதிபதிகள், இவர்களெல்லோரும், குருவின் ஆராதனையைச்செய்து சிவலோகத்தை யடைந்தார்கள்.

கைவல்ய சிந்து.

கணாத : பாணினிச்சைவ கௌதம : கும்ப சம்பவ :
அத்திரி சைவ பரத்வாஜோ கௌசிக : கபிலஸ்ததா
கஸ்யபோ வியாச வால்மீகி சாநந்த : ஜனகஸ்ததா
சிவபூஜார்த்த மாராத்ய மவாபு: பரமாதராத்.

கணநாதர், பாணினி, கௌதமர், அகஸ்தியர், அத்திரி, பரத்வாஜர், கௌசிகர், கபிலர், வியாசர், வால்மீகர், சாநந்தர், ஜனகர் முதலான உலகப்பிரசித்தர்களான மஹரிஷி புங்கவர்கள், சிவபூஜாதிகாரத்தை அடைவதற்காக ஆராத்ய குருவை அத்தியந்த பிரேமையுடன் அடைந்தார்கள்.

சாம்ப புராணம், கூஷ்மாண்ட ருத்ராத்யாயத்தில்.

புராமுராரி பிரஹ்மாத்யா வீரபத்ரோ குருஸ்ததா
ஹேரம்போ நந்தி பிருங்கீசௌ மஹாகாளீச பைரவ :

*மாத்ருகா: பிரமதா தைத்யா தேவேந்ராதி சுராஸ்ததா*
*ராக்ஷசா குஹ்யகா: சித்தா கந்தர்வா யக்ஷ கின்னரா:*
*சிவதீக்ஷாம் காம்க்ஷயித்வா பிராப்தா ஆராத்ய பஞ்சகம்*
*பாதபூஜா சமாசக்தா லிங்கபூஜாபி லாஷயா.*

பூர்வத்தில் விஷ்ணு, பிரஹ்மாமுதலான தேவதைகளும வீரபத்திரன், ஷண்முகன், கணபதி, நந்தி, பிருங்கி, மஹாகாளி, பைரவன், சப்த மாத்ருகெயர்கள், பிரமதர்கள், அசுரர்கள், தேவேந்த்திராதி தேவதைகள், ராக்ஷசர்கள், கின்னரர்கள். இவர்களனைவரும் லிங்கபூஜாபிலாஷையினால் சிவ தீக்ஷையை இச்சித்து பாதபூஜையில் அசக்தராகி ஸ்ரீமத் பஞ்சாசார்யரை ஆஸ்ரயித்தார்கள்.

ஆராத்ய பிராஹ்மண லக்ஷணம்.

சுயம்புவாகமம்.

*ஆராத்ய மத சம்ஜாத ஆகமார்த்த விசாரத:*
*கர்மசோடச பாண்டித்யோ நிர்மல: சிவபூஜக:*
*மந்த்ர தந்த்ர சமாயுக்த ஆராத்யோ த்விஜ உச்யதெ*

ஆராத்யமத சம்ஜாதனாகியும், ஆகமார்த்த விசாரத்தவனாகியும், சோடச கருமங்களில் பாண்டித்ய முள்ளவனாகியும், நிர்மலனாகியும், சிவபூஜகனாகியும், மந்திர தந்திரங்களின் ரஹசியத்தை நன்றாயறிந்தவனாகியுமிருக்கும், ஆராத்தியனேபிராஹ்மணனென்று சொல்லிக்கொள்ளப்படுவான். இப்படிப் பவித்திரமான ஆராத்திய வம்சத்தவரிடத்தில் சர்வரும் பக்தி யுள்ளவராயிருக்கவேண்டியது.

சிவ ரஹஸ்ய பிரகாசிகை.

*குருதோஷண மாத்ரேண தார்க்கதிம் பிராப்னுயான் நர:*
*சிலாபூத் யார்ச்சகோ லிங்கம் பிராப்னுயான் நரகம் துருவம்.*

லிங்கத்தை சிலாபுத்தியுடன் பூஜிப்பவனெப்படி நரகத்தையடைவானோ அப்படியே குருவை திரஸ்கரிக்கும் மனிதன் நரகத்தையடைவான்.

*நாஸ்தி தத்வம் குரோ: பரம் நகுரோ ரதிகம்.*

"*ஆசார்ய தேவோபவ*" ஸ்ரீ ஜகத்குரு பஞ்சகாய நம:

இஃது ஸ்ரீ ஜகத்குரு பஞ்சாசார்ய பிரபாகர சுருக்கம் முற்றிற்று.

# சிவபூஜா பிரபாவம்.

வீரசைவ (லிங்காயுத) ர்களுக்கு சிவ பூஜை என்பதே சமஸ்த சத்கதிக்குச் சாதனமானது. இது ஒன்றே சாஸ்வதமான பலனைக்கொடுக்கத்தக்கது. இன்னும், மற்ற யாகாதிகளினால் லபிக்கும பலன்களெல்லாம் நஸ்வர (அழியக்கூடியவை) களானதினால் அவை பரித்தியாஜ்யங்கள், (முற்றத் துறத்தலாகும்.)

ஆனதினால் சிவதீக்ஷா சம்ஸ்கார முள்ளவன் தனக்குக் குருவினால் அநுக்கிரஹித்து கொடுக்கப்பட்ட லிங்கத்தைத் தரித்தது முதல் சிவதர்ம பிரமாணத்தில் நிரூபிக்கப்பட்டிருக்கும் மாதிரியாகவே.

சுலோஹம்.

பக்த்யைவை கமநா பூத்வா-யாவஜ்ஜீவம் பிரதிக்ஞயா
அர்ச்சயேத்தம் மஹாதேவ மாபன்னோபி சதாபுத:

என்கிறபடி தன் ஜீவனிருக்கும் வரைக்கும், நித்தியசங்கல்பத்தினால் சிவார்ச்சனைச் செய்யவேண்டியது. எவ்வளவோ பெரிய விபத்திலிருந்தாலும், இதை விடக்கூடாது. இந்த சிவார்ச்சனையை பிரதி தினமும், ஜாமத்திற்கொருதரமாக அஷ்ட ஜாமங்களிலும், செய்யவேண்டியது. அப்படிச்செய்ய அசக்தராயிருந்தால் திரிசந்தி (காலை, உச்சி, மாலை,) காலங்களிலாவது செய்யவேண்டியது. இதுவும் செய்யக் கூடாமையாயிருந்தால் காலை, மாலையாவது தப்பாமல் தினத்திற்கிரண்டு தடவையாவதும், கட்டாயம் செய்தே தீரவேண்டும். இதற்கு பிரமாணம்.

கிரியாசார சுலோஹம்.

ஸ்நாத்வாத் விவாரம் சிவமர்ச்ச யிர்ஷ்ய
பும்ஜீத நோசித் நரகம் பயாதி.

சிவாசார சம்பன்னநானவன் தினத்திற்கிரண்டு தடவையாவதும் ஸ்நாநம்செய்து பூஜையை நிறைவேற்றினபிறகே போஜனம் செய்யவேண்டியது. இப்படிக்கல்லாமல் சாப்பிடுபவன் நரகத்தில் விழுவானென்றுச் சொல்லியிருக்கிறது. இன்னும் இதற்குப்பிரமாணம்.

பண்டித சரித்திரம்.

ஆராத்ய மஹாதேவம் பும்ஜீயான் னகதாசன
இப்படிப்பட்ட வாக்கியங்களினாலும், இன்னும்.

சுலோஹம்.

பரம் பிராண பரித்யாக: சேதனம் சிரசோபிவா
நத்வ நப்யர்ச்ய பும்ஜீயாத் வீரசைவ ஸ்ரீலோசனம்.

பிராணத்யாகமாவதும் செய்யலாம். சிரச்சேதனமாவதும் செய்துக்கொள்ளலாம். வீரசைவநானவன் சிவபூஜையைச் செய்யாமல் போஜனம் என்றைக்கும் செய்யவே கூடாது.

சுலோஹம்.

த்விஜோவாத்விஜ நாரீவாத் யக்த்வா ஸ்ரீலிங்க பூஜனம்
யதி பும்க்தே தாதாயோநிம்சண்டாலம் ப்ராப்னு யாத்ருவம்.

பிராக்ருத (அலிங்கி) பிராமணர்களிலுங் கூட புருஷர்களானாலும், ஸ்த்ரீகளானாலும், லிங்கார்ச்சனையை விட்டுப் போஜனம் செய்யக்கூடாது. அப்படிச்செய்தாலவர்கள் அடுத்தஜன்மத்தில் சண்டாளயோனியில் பிறப்பதே நிஜமென்று சொல்லப்படுகிறது. இப்பிரமாணங்களினால் லிங்கதாரிகளானவரொவ்வொரு

வருக்கும், இஷ்ட லிங்கார்ச்சனே அத்யவஸ்யமான கார்யமெனத் தெரியவேண்டியது. மற்றும். சுலோஹம்

ருத்ரேணுத்த மஸ் நம்தி ருத்ரேண பீதம் பிபம்தி
ருத்ரேணு க்ராதம் ஜிக்ரம்தி தஸ்மாத் ப்ராஹ்மணு
பிரசாம்த மனசோ வித்வாம்சோ நிர்மால்யமேவ பக்ஷயம்தி
நிர்மால்ய மேவாஸ் நீயான் நிர்மால்யமேவ நிஷேவேத.

என்பதாகவும் "ருத்ரஸ் வீக்ருதா சேஷமே பரிக்ராஹ்ய"

மென்று சுருதிப்பிரமாண மிருப்பதினுல் இஷ்டலிங்கத்திற்குச் சமர்ப்பிதமானபதார்த்தங்களையேதான் ஸ்வீகரிக்கவேண்டுமெல்லாமல் மற்றென்றும் ஸ்வீகரிக்கக் கூடாதென்பதற்குப் பிரமாணம். சுலோஹம்.

பத்திர புஷ்ப பலம்தோய மன்னபானுதி மௌஷதம்
லிங்கார்ப்பிதம் விநாபுக்தே சத்யோ பவதி கில்பீஷீ.

என்பதாக லிங்கத்திற் கற்பிக்காமல், இலை, புஷ்பம், ஜலம், அன்னம் முதலானவைகளைப் புசித்தால் தக்ஷணத்திலேயே பாபியாகிருன். முக்கியமாகச் சிவார்ச்சனைக்கு பக்தியேகாரணம். பக்தியில்லாமல் எவ்வளவு விதியுக்தமாகச் சிவார்ச்சனைச் செய்தாலும், பலனில்லை. நியாயார்ஜ்ஜிதமான திரவ்வியங் (சன்மார்க்கத்தில் சேகரித்த பொருள்) களினுல் ஸ்வசக்தியாநுசாரமாக சிவ பூஜையைச் செய்யவேண்டியது. இப்படியாகவே,

மாளவீய சம்ஹிதை சுலோஹம்.

ஆட்யோவாத தரித்திரோ வாஸ்வகாம் சக்தி மவம்சர்ய
த்ரவ்யைர்ன்யா யார்ஜிதைரேவ பக்த்யாதேவம் சமர்ச்சயேத்
பக்த்யா வித்வானுசாரேண சிவமுக்திஸ்ய யத்க்ருதம்
அல்பே மஹதி வாசாம்ய பலமாட்ய தரித்ரயோ :
பக்த்யா ப்ரசோதித: குர்யா தல்பவித்தோபி மானவ :
மஹாவிபவ சாரோபி நகுர்யாத் பக்தி வர்ஜ்ஜித :
சர்வஸ்வ மபியோ தத்யாச் சிவபக்தி விவர்ஜ்ஜித :
சதேன பலபாப் நஸ்வாத் பக்திரேவாத்ர காரணம்.

என்கிற மாதிரியாக தனிகனானுலும்சரி, தாரித்திரிய நானுலும் சரி, பக்தி விசிஷ்டனுகி ஸ்வசக்தி யானுசாரமாக நியாயார்ஜ்ஜிதமான திரவ்வியங்களினுல் சிவார்ச்சனைச் செய்யவேண்டியது. இப்படியாகச் சுவசக்தியானுசாரமாகப் பூஜிப்பதினுல் தரித்திரனுக்கும், தனிகனுக்கும், மஹாராஜனுக்கும், சமபலனே பிராப்தமாகும். பக்தி ஹீனனுகி அநேக பெருமையாக சிவார்ச்சனைகள்செய்து அநேக தான தருமங்கள்செய்தாலும், அதனுல் பலனில்லை யென்றறியவேண்டியது.

ஓம் பரப் பிரஹ்மணே நம :

வீரசைவ சிவபூஜா விதிமுறை முற்றிற்று.

# புதுவருட உகாதி பண்டிகை.

பிரபஞ்ச இச்சையுள்ள நாரதரானவர், ஸ்திரீ ரூபத்தைத் தரிக்கவும் தேவர்களைப் பெண்ணுருவின் வயிற்றில் 60-பேர் புத்திரர்கள் பிறந்தார்கள். அப்புத்திரர்களே பிரபவாதி அறுபது வருடங்களாயின. தேவர்களின் புத்திரோற்பவ நிமித்தமாக பிறதியொரு ஆண்டி (வருடத்தி) ன் ஆரம்பத்திலும் ஆநந்தோத்சவம் ஆசரித்தார்கள் அது முதலாக ஜனங்களித்தினத்தைப் பெரிய பண்டிகை நாளாகக் கொண்டாடுகிறார்களென ஐதீகமுண்டு.

தூர்வாச மஹரிஷிகளின் சாபத்தினல். தேவேந்திரனுடைய சம்பத்துக்களெல்லாம், சமுத்திரத்தில் விழவும் மஹா விஷ்ணுவின் ஆக்கினையின்படிக்கு தேவதானவர்களெல்லோரும், ஒன்றுகூடி கடலைக் கடைந்தார்கள். அச்சமயத்திலதி பயங்கரமான விஷம் பிறந்து உலகத்தைத் தஹிக்க ஆரம்பித்தது தேவர்களைச் சங்கடத்தைச் சகிக்காமல் பரசிவனைத் துதிக்கவும் பரசிவன் பிரத்தியக்ஷமாகி இவ்வுகாதி பண்டிகையின் தினத்தில் அக்காலகூட விஷத்தைப்பானம் செய்துகண்டத்தில் நிருத்தி உலகத்தை ரக்ஷித்தார். இதின் ஞாபகார்த்தமாக இத்தினத்தில் வேப்பிலை அல்லது வேப்பம்பூவை ஸ்வீகரிக்கும் சம்பிரதாயமுண்டாயிருக்கிறதெனச் சிலர் சொல்வதுண்டு ஆகையாலித்தினத்திற்கு பூர்வ காலத்திலிருந்து நம் பெரியோர்கள், சில கிரமங்களைக்காட்டிக் கொடுத்திருக்கிறார்கள். அவையாவன. பிராதக்காலையிலெழுந்து பகவத்ஸ்மரணை செய்து சௌசாசமனுதிகளைப் பூர்த்தி செய்து முகம், கைகால்களைக்கழுவிக்கொண்டு தைலாப்யங்கப் பூர்வமாக ஸ்நாநம் செய்து வீட்டை மெழுகிச்சுத்திசெய்து கோலங்களிட்டு மாவிலைதோரணங்களா லெங்கரித்து சாங்கமாகத் தங்கள் இஷ்ட தேவதையையர்ச்சித்து ஆசனத்திலமர்ந்து ஆசமனம் பிராணுயாமங்களைச் செய்து அக்ஷதைபாணியாகிதேச காலாதி (சங்கல்பங்)களைச்சொல்லிப் பிறகு.

அஸ்மத் க்ருஹே வர்ஷாந்தம் நித்யமங்களா வாப்தயே
ஆத்மந: ஆரோக்யப் பிராப்த் யர்த்தம்
குரு பூஜாம் நிம்பபத்ர பக்ஷணம்ச கரிஷ்யே

என சங்கல்பம் சொல்லி கணபதியைத் தியானித்துத் தன் குலகுருவின் பூஜையைச் செய்து நிம்பபத்திரத்தை (வேப்பிலையை) பக்ஷிக்கத்தக்கது. பிறகு தங்களிஷ்டமித்திரர்களுடன் மிருஷ்டான்ன போஜனம் செய்து ஸ்வதேசத்திய நூதன ஆடையாபரணங்களணிந்து குருமடங்களில் நடைபெறும் தர்மார்த்த உபன்யாசங்களைக்கேட்டு தேவதூநக்களின் ஆசிர்வாதமடைந்து சாயங்காலத்தில் குருக்களின் எதிரில் பஞ்சாங்கசிரவணம் செய்ய வேண்டியது. இப்படிச்செய்தால் அவ்வருடத்திய தன் காரியங்களனைத்தும் ஜயவிரதமாக முடியும்.

16—3—31, பிரபா பத்திரிக்கையின் மொழி பெயர்ப்பு,

# மடாதிகாரிகள்.

மதஸ்தாபனாசாரியர்களானவர்கள், வீரசைவர்கள் வாசம் செய்யும் பிறதியொரு (ஒவ்வொரு) கிராமங்களிலும் மடங்களை நியமித்து குருக்களின் விஷயத்தில் சொல்லியிருப்பதாவது:—

ஸ்ரேயோர்த் தீயதி குர்வாக்ஞாம் மனசாபி நலம் கயேத்

சிரேயசை(கீர்த்தியை) அபேக்ஷிக்கும் மனிதர்கள் குருக்களின் ஆக்கினையை மீறக்கூடாதெனவும்.

குருர் தேவோ யதஸ்சாக்ஷாத் தக்கிருஹம் தேவ மந்திரம்.

குரு மடங்களை சிவாலயங்களாகவும், அவ்விடத்திலுள்ள குருக்களை சாக்ஷாத் சிவபெருமானாகவும் பாவிக்கவேண்டுமென உத்தரவு கொடுத்திருக்கிறார்கள். இவ்வளவு மஹத்துவமானது குருக்களுக்கும், குருமடங்களுக்கும் உண்டாயிற்றென்றால், குருக்களும் மற்றும் குரு மடங்களும் எவ்வளவு பரிசுத்தமானதாயிருக்கவேண்டுமென்பது இதனால் பஷ்டமாகத் தெரியவருகின்றது மற்றும் குருக்களானவர்கள். பக்தி, ஞான, வைராக்கியங்களென்னும் ரத்தினங்களை எப்பொழுதும் தங்கள், ஹிருதயஸ்தானத்தில் ஸ்தாபனம் செய்துகொண்டிருப்பதுமல்லாமல், சிஷ்யர்களை யபிவிர்த்தி செய்யும் தொழிலொன்றை மாத்திரம் கைக்கொண்டிருந்தார்களல்லாமல் மற்றெவ்வித லௌகிகவிருத்தி (உலகத் தொழில்) களிலும் பிரவேசித்துக்கொண்டிருக்கவில்லை. சதாவேதாத்யயன கோஷத்தினால் (எப்போதும் வேதபாராயண சப்தங்களாலும்) சிவயோகாப்பியாசங்களாலும், லிங்காங்க சாமரஸ்யபோதகமான சாஸ்த்ரார்த்த விசாரங்களாலும், தபஸ்சினாலும் குரு மடங்களானது எப்பொழுதும் (சதா) வந்து போகும் பக்தர்களின் மனதை ஆகர்ஷித்து (இழுத்து)க் கொண்டிருந்தன, பக்தர்கள் பகலெல்லாம் வியவசாயம் வியாபாரம் முதலான அவரவர்களுடைய தொழில்களிலீடுபட்டு விஸ்ராந்தி (ஆயாசமடைந்து) (மனவமைதி) க்காக குரு மடங்களுக்குப்போய் குரு தரிசனம் செய்து குரு போதாமிர்த (குரு உபதேசித்த அமுர்த) பானத்தினால் திருப்தர்களாகிப்போய்க் கொண்டிருப்பார்கள், பூஜிய பூஜக பாவனையை இவ்வளவு ஸ்திரம் செய்ததற்குகாரணமென்னவெனில் தவாக்கினியை சாந்தம் செய்யும் மேகங்களைப்போல மடாதிகாரிகள், சிஷ்யர்களின் பவதாபங்களைபரிஹரிப்பதில் ஜாக்ருதர்களாயிருந்ததே இதற்கு காரணமாயிருக்கிறது. மற்றும் சிஷ்யர்கள் எப்பொழுதும் தர்ம மார்க்கத்திலிருந்து நழுவிவிடாமல்படிக்கு மனோவிர்த்தியை திருத்தம் (மனதின் வியாபாரத்தை ஒழுங்கு) செய்துக்கொண்டே பிரபஞ்சத்தை ஆஸ்திகமயமாகச் செய்வதே குருக்களின் முக்கிய கருத்தாயிருந்தது. காலபரிபாகத்தினா (காலத்தின் மாறுபாட்டா) லிப்போது அப்படிப்பட்ட மடாதிகாரிகளான குருக்கள் தங்கள் கனதரமான வைதீகவித்

தையைக்கைவிட்டு லௌகிகர் (உலகத்தவர்) களைப்போலத் தாங்களும் விவசாயம் வியாபாரம் முதலான லௌகிக (உலக)த்தொழில்களைக்கைக்கொண்டுவந்ததினால் தான் இவர்களின் ஹிருதயங்களிலிருந்த சத்துவம் சூனியமாகி மடங்களும்கூட சம்சாரிகளின் துக்கமயமான வீடுகளாகிப் பரிணமிக்கின்றன.

வெகு காலங்களாக குருக்களின் ஹிருதய ஸ்தானத்திலாசிரயம் செய்துக் (மனத்திற்குடி) கொண்டிருந்த சமதமாதி (சமம், தமம், விடல், சகித்தல், சமாதானம், சிறத்தை என்னு மறுவகை) குணங்கள் நாசமடைந்து இதற்குப் பதிலாக காமக்குரோதாதி துர்க்குணங்கள்போய் நிலைக்கொண்டதால் தான் பக்தர்களுக்கு குருக்களிடத்துள்ள பிரீதியானது குறைந்துக்கொண்டே வந்திருக்கிறது, உலகத்தில் யாசகனானவன் தனிகனையாஸ்ரயிப்பதை (பிச்சைக்காரன் பணக்காரனிடம் போவதை) விட்டு தன்னைப்போலுள்ள மற்றொரு பிச்சைக்காரனிடம் போனதைப் போலவும், அந்தக (குருட)னானவன் விழியு(கண்ணு)ள்ளவனிடம் போவதை விட்டு தன்னைப்போலுள்ள மற்றொரு நயனமி(கண்ணி)ல்லாதவனிடம் சென்றதைப்போலவும் சாஸ்திராத்யயனம் செய்யாமலும் சமதமாதிகுண சம்பத்தில்லாதவரும்தன்னைப்போலவே துன்பத்திலவஸ்தை (துக்கத்தில் மூழ்கிகஷ்ட) ப்படும் ஞான சூனிய (விவேகமில்லாதவ) ரான குருக்களை யாரும் அபேக்ஷிப்பதில்லை.

பிரயோஜன மநுத்திஶ்ய நமம்தோபி பிரவர்ததெ

பிரயோஜன (முகாந்திர) மில்லாமல் ஒருவரை மற்றொருவர் அபேக்ஷிப்பதில்லை என்னும் நியாயத்தைப்போல, குருக்களானவர்கள் பாரமார்த்திக வித்தியா சூன்யரும் ஞானசூன்யரும் ராகத்து வேஷாத்துரருமானால், சிஷ்யர்கள் அப்படிப்பட்ட குருக்களைஆஸ்ரயிக்கும் வகை யெப்படி, ஆனதால் குருக்களானவர்கள் தங்கள் மதசித்தாந்தத்தைப்படித்து அந்தக்கரண சுத்தியுள்ளவர்களாகவும் சிருஷ்டிகர்த்தனான பகவானுடைய குணவளி(குணநிசயங்)களை த்தங்களுடைய சுவாதீனம்செய்துக்கொண்டிருந்து, சிஷ்யர்களின் சக்தி பாதாநுசாரமாகத்தங்கள் முக்தஹஸ்தத்தினால் அநுக்கிரகம் செய்யும் சக்தியை யடைந்திருக்கவேண்டியது. இப்படிக்கல்லாமல் குருக்களும் சிஷ்யர்களைப்போலவே அவிவேகிகளாயிருந்தார்களானவிப்படிப்பட்டகுருக்களினால் பிரபஞ்சத்திற்கு எவ்வித பிரயோஜனமு முண்டாகமாட்டாது, சாதாரணமாக பசு, பக்ஷி விருக்ஷம், கொடி முதலான சேதனா சேதன(உணர்சி அறிவில்லாத) வஸ்துகளுங்கூட ஒவ்வொன்றும் அநேக பிரயோஜனத்திற்கு வரும்போது கிரியா (தொழிற்) சித்தியில்லாத குருக்கள் அவைகளை விடக்கேவல (அற்ப) மானவர்களென நினைக்கும் காலம் அடுத்திருக்கின்றன,

ஞான ஈனம் குரும் பிராப்ய குதோமுக்தி மவாப்நுயாத்
பின்னநௌ காகதஸ் சிம்தோர் யதாபாரம் நகக்சதி

குருக்களானவர்கள் ஞானநிதி (ஞானக் கழஞ்சியங்) களாயிருப்பதுமல்லாமல், பரிபக்குவ புத்தியுள்ள சிஷ்யர்களுக்கு ஞானோப தேசம் செய்துக்கொண்டேயிருக்கவேண்டும். இப்படிப் பட்ட குருக்களை யடையாமல் ஞானசூனியர்களான குருக்களிடம்போய் முக்தியை யடையவேண்டு மென்றபேக்ஷிக்கும் மனிதனவன் உடைந்து துவாரமாயுள்ள படகி (தோணியி)லுட்கார்ந்துக்கொண்டு கடலைக்கடப்பே னெனப்பிரயத்தினப்படும் மூடனுக்குச் சமானனுவான், என ஸ்ரீமஹா குருக்களான ரேணுகபகவத் பாதரே ஆக்ஞை செய்திருப்பதைப்பார்த்தால், மடாதிகாரிகளான குருக்கள் சாஸ்திர பாரங்கதர் (கல்வியிற்கரை கண்டவர்) களாகியும், ஞானிகளாகியும், சமதமாதி குண சம்பன்னர்களாகியும், வைராக்கியசாலிகளாகியும், லிங்காங்கசாமரஸ்யா நுபவமுள்ளவர்களாகியுமிருக்கவேண்டுமென ஷ்பஸ்டமாகத் தெரிகின்றது. இதற்குப் பிறதியாக அநேக விடங்களில் குருக்களானவர்கள் வித்தியா (எழுத்து) வாசனையில்லாதவர்களாயும் அஞ்ஞானிகளாயும், இந்திரிய நிக்கிரஹசக்தியில்லாதவர்களாகியும் ஆசாபாசத்தி லழுந்தினவர்களாகியுமிருக்கிருர்கள். இப்படிப்பட்டவர்களுடைய வாசத்தி(குடியிருப்பி)ளுல் பவித்திரமா(தூய்மையா)ன மடங்களும் கூட குணதோஷங்களுள்ளனவாக காணப்படுகின்றன-

மடச் சாஸ்திராதி நிலய :

என்னும் அமரகோசத்தின் வாக்கியத்தைப்போல மடங்களென்ருல் பாரமார்த்தீக வித்தையை யப்பியசிக்கும் வித்தியார்த்தி (கற்போர்) களின் மந்திர (வேதமோதும் ஆலய) ங்களாயிருக்கவேண்டியது, பூர்வகாலத்திலிப்படிப்பட்டஸ்திதியிலிருந்த அநேக மடங்களில் மங்களமயமான வேதசாஸ்திர படனத்துவனிக்கு (வேதசாஸ்திரம் சொல்லும் சப்தத்திற்கு)ப் பதிலாக இப்போது அமங்கல சப்தங்களே கேட்கப்பட்டு வருகின்றன.

யதாவஹ்னி சம்பர்க்கான் மலம்திய ஜதிகாம்சனம்
ததைவ குருசம்பர்க்காத் பாபம் தியஜதி மானவா :
யதாவஹ்னி சமீபஸ்தஸ் சாத தும்போ விலீயதே
ததாபாவோ விலீயேத ஆசார்யஸ்ய சமீபத :

அக்கினியின் சம்மந்தத்தி (நெருப்பின் கூட்டுறவு) ளுல் தங்கத்திலுள்ள தோஷங்களானது எப்படி விலகிப்போகின்றனவோ, அப்படியே குருசம்சர்க்கமுள்ள மனிதனுனவன்பாவ(குற்ற)த்திலிருந்து விடுதலை யடைகிருன், அக்கினியின் சமீபத்தில் வைத்த சுவர்ணகும்பமானது, எப்படி உருகிமாயமாக மறைகின்றதோ அப்படியே குருக்களின் தரிசன சம்பாஷணுதி சம்சர்க்கத்

தினல் சிஷ்யனுடைய இருதயஸ்தானத்தில் உறைந்துள்ள (இருகியிருக்கும்) பாபராசியானது உருகி மறைந்துப்போகுமென வீரசைவ (லிங்காயுத) சித்தாந்த கிரந்தங்களில் குருக்களுக்கு வெகுவாக மஹத்துவத்தைக் கொடுத்திருக்கிறார்கள். குருக்களுக்கு இப்படிப்பட்ட மஹத்துவம் வரவேண்டுமானல்.

சமோ தமஸ் தபஸ் சௌசம் க்ஷாந்தி ரார்ஜ்ஜவ மேவச
ஞானவிக்ஞான மாஸ்திக்கியம் பிராஹ்மம் கர்மஸ்வபாவஜம்

என்பதைப்போல அந்தரிந்திரிய நிக்கிரஹம் (உள்ளிந்திரியங்களையடைக்கல்) பஹிரிந்திய நிக்கிரஹம் (வெளியிந்திரியங்களையடக்குதல்) தபசு (தபம்) சௌசம் (சுத்தம்) க்ஷாந்தி, அர்ச்சவம், (அருஜ்ஜனே) ஞானம் ஆஸ்திக்கிய முதலான தைவீக சம்பத்துகளே அவஸ்யகமாயிருக்கின்றன, இப்படிப்பட்ட சிஷ்யர்களின் கூட்டுறவான ஆத்துமர்களை சோதனை செய்யும் தைவீக சம்பத்துகளுங்கூட நஷ்டமடைந்து அவைகளின் ஸ்தானங்களில் குரோதம், தம்பம் தர்ப்பம், அஞ்ஞான முதலான அசுரசம்பத்துகளுச்குயிடம் குடுத்ததினல் தான் குருக்களிடத்தில் சிஷ்யர்களுக்கிருந்த சிரத்தை (அன்பு)குறைந்துக்கொண்டேவந்திருக்கின்றன, குருக்களில்லாமல் மடங்கள் விழுந்துபோய் (ஜீர்ணமாய்)க் கொண்டிருந்தாலும் ஒருவரும் கண்ணெடுத்துப் பார்ப்பதேயில்லை, ஆகையால் குருக்களைத் தெய்வமாகவும் குரு நிவாச ஸ்தலத்தை (குருயிருப்பிடத்தை) தேவமந்திரங்க (சுவாமி கோவில்க) ளாகவும் பார்க்கவேண்டுமென்னும் சித்தாந்த வசனங்கள் வியர்த்தமாகப் போய்க் கொண்டிருக்கிறது. இதற்கெல்லாம் இப்போதுள்ள குருக்களே காரணர்களல்லாமல் சிஷ்யர்கள் காரணர்களெனச் சொல்லுவதற்காவதில்லை, குருக்கள் தங்கள் கர்த்தவ்வியத்தில்சமர்த்தரா யிருந்தால் இப்படிப்பட்ட அநாஹுதங்கள் நடக்கக்காரணமில்லை அரசன் தன்னுடைய ராஜதர்மத்தை விட்டு சுவேச்சாசாரியானல்பிரஜைகளுக்கு அப்படிப்பட்ட அரசனல் ராஜபக்தி குறைவதைப்போல குருக்கள் தங்களுடைய கர்த்தவ்வியஹீனரானல் சிஷ்யர்களுக்கு பக்தியானது குறைந்துக்கொண்டே போவது சுபாவமேயாகிறது, ஆனதினல் குருவர்க்கத்தவர்கள் எச்சரிக்கையுடன் தங்கள் புத்திரர்களுக்கு சாஸ்திராத்யயனம் செய்வித்துத் தங்கள் வம்சானுகதமான குரு தர்மத்தைக் காப்பாற்றிக்கொண்டு ஜகத் வம்திய (ஜகத் பூஜித) ர் களாகவேண்டுமெனக்கோருகிறேம்

12—12—32, பிரபா பத்திரிக்கையின் மொழி பெயர்ப்பு,

# தைலாப்யங்கம்,

பஞ்ச மஹா பூதங்களிலொன்ருன வாய்வா (காற்ரு) னது ஜகத்தில் சகல காரியங்களுக்கும், சஹாயமாயிருக்கிறது. வாயுவின் பலத்தினுலேயே சகல பிராணிகளும் ஜீவிக்கின்றன. வாயுவானது கோபமடைந்தால் நிமிஷமாத்திரத்திலேயே ஜகத்து சம்பூர்ணமாக நசித்துப்போகும். வாயுவின் கிருபையினுலேயே சம்சாரத்தின் பிறதியொரு காரியங்களும் நிர்விக்கினமாக நடைபெறுகின்றது, வாயுவானது அதிசீக்கிரமாகப்போகும் சுபாவமுடையதாகியும் சீதகுண விசிஷ்டமா (மேன்மையா) யும் ஜகத் வியாபகமா (உலகத்திலெங்குமிருப்பதா) யு மிருக்கிறது. இப்படிப்பட்ட மஹத்துவ சக்தி சம்பன்னமான வாயுவா (மேன்மையான வல்லமையுடைய குறைவில்லாத பாக்கியம் பொருந்திய காற்ரு) னது மனிதசரீரத்தில் உதான, பிராண, சமான, அபான வியானன்களென்னும் பெயர்களை ஸ்தாணபேத (இடவித்தியாச) ங்களாலடைந்து சரீரத்தின் சம்பூர்ணகாரிய சமூஹத்தையும் தன்னுதீனமாக்கி (எல்லாத்தொழிலின் கூட்டத்தையும் தன் சுவாதீனம் செய்து)க் கொண்டு சர்வ அவயங்களிலும் சஞ்சரிப்ப (எல்லாவறுப்புகளிலும் திரிவ) தாயிருக்கிறது. வாயுவின் சஹாயமி (காற்றின் உதவியி) ல்லாமல் கண், செவி, முதலான இந்திரியங்களும் மற்றும், ரசம், ரத்தம், மாமிசாதி, (எலும்பு, சுக்கிலம், மாமிசம், தோல், மூளை,) முதலான தாதுக்களும், மல மூத்திரம், வியர்வை என்னும் மலத்திரயங்களும் இவைகளினுடைய எக்காரியங்களும் நடைபெறமாட்டாது. மற்றும் பிறதியொரு அவயவங்களின்காரியமாவதும் வாயுவின் சஹாயமில்லாமல் நடக்கும்படியாயில்லை, ஆனதினுல் வாயுவானது சரீரத்திலுள்ள கரசரணுதி சகல அவயவங்களுக்கும் சப்ததாதுக்களுக்கும் பித்தம் ஐய (சிலேத்மம்)முதலியவைகளுக்கும் மலத்திரயத்திற்கும், அரசனுயிருக்கிறது. வாயுவின் சர்வ வியாபகத்தையும் சகல அவயவங்களின் புரபுத்துவத்தையும் சரகசம்ஹிதை சூத்திரஸ்தானத்தின், வாதகலாகலீயம்,, என்னும் 12-வது அத்தியாயத்தில்.

> வாயுஸ்தம்த்ர யந்த்ரதர: பிராணேுதான வியானு பானுத்மா சர்வேந்திரியானு முத்யோஜகம் சர்வேந்திரி யார்த்தா நாமபி போடா சர்வ சரீரதாது வ்யோஹகர: சம்தானகர: சரீரஸ்ய பிரவர்த்திகோ வாச: பிரகிருதி: ஸ்பர்ச சப்தயோ:
> ஸ்ரூத்ரஸ் யர்சன யோர் மூலம்

என அதிவிஸ்தாரமாக வருணித்திருக்கிறது. வாயுவானது சரீரத்தின் சகல சாமக்கிரியைகளுக்கும் அதிபதியாயிருக்கிறது. இதுகோபமடைந்தால் சரீரத்தின் எல்லாக்காரியங்களும் நின்றுப்போகின்றன. அல்லது இதின் கோபத்தினுல் சரீரத்தில் நாநாவிதங்களான உபத்திரவங்களுண்டாகு மாகையால் வாயுவா

னது சரீரத்தில் கோபமடைந்து தன் பிரதாபத்தை (வீரத்தை) அநேக விதங்களாகக்காட்டாமலிருப்பதற்கும் அவ்வாயுவின்சாந்தி (தணிவு) க்காகவும் சிரேஷ்டமான உபாயத்தைத்தேடவேண்டியது அவசியமாயிருக்கிறது. ஹாரீத முனிவர் மனிதர்களிடத்தில் வாயுவையே ரக்ஷிக்கவேண்டு மெனச் சொல்லியிருப்பதாவது.

ரக்ஷணீயம் கஜே பித்தம் சிலேஷ்மம் வாஜிஷு சர்வதா
பனஞேயம் மனுஷ்யேஷு பிராயோ ரக்ஷேச்ச சர்வதா

யானையானது ரோகங்களிலிருந்து விடுதலையாகிச்சுகியா (வியாதியில்லாமல் சுகமா) யிருக்கவேண்டுமானால் பித்தமானது கோபங்கொள்ளாமலிருப்பதற் கநுகூலமான உபசாரங்களைச்செய்யவேண்டும். குதிரையானது வியாதியில்லாம லிருக்க வேண்டுமானல் சிலேஷ்மம் கபிதமாவதற்கநுகூலமான உபாயத்தைச் செய்ய வேண்டும். மனிதர்கள் எப்பொழுதும் வியாதியின்றி சுகமாக ஜீவிக்கவேண்டுமானல் வாயுவு கோபமுண்டாகாதிருக்கும் உபாயங்களைத்தேடி அவ்வுபாயங்களில் அத்தியந்த சிரேஷ்டமானதையே நியமபூர்வகமாக அநுஷ்டித்து வாயுவின் கோபத்தைச் சாந்தம் (அத்தந்திரங்களில் மிகுதியாகச் சிறந்த முறைமையை ஆசரித்து காற்றின் சினத்தை அமைதி)செய்துக்கொள்ளவேண்டும் வாயுவின் கோபத்தைச் சாந்தம் செய்வதற்காக சரகமஹரிஷி சர்வபிரதானமான உபாயத்தைப் போதித்திருக்கிறார்.

சரக சூஸ்திரம் அத்தியாயம், 5

ஸ்பர்சனேப் யதிகோவாயு :ஸ்பர்சனம் சத்வகாஸ்ரிதம் வசஸ்ச
"பரமோப்யங்க :,, தஸ்மாத்தம் சீலயோன் நரம்

ரூபரஹித ஸ்பர்சவான் வாயு :,, என்னும் வைசேஷிக (தர்க்கசாஸ்திர) பிரமாணுனுசாரமாக வாயுவானது கண்களுக்கு காணப்படும் சுபாவ முடைதாயிருப்பதில்லை. இதினிருப்பிடமானது நமக்கு ஸ்பர்சனத்தினுலேயே தெரிகின்றது. ஆனதினுல் ரூபரஹிதமா (உருவமில்லாதிருப்பதா) கியும் ஸ்பர்சேந்திரியத்திற்கு கோசரமா (ஐம்பொறிகளிலொன்ருகிய தோலினு லறியக்கூடியதா) யும் இருக்குமென வாய்வுஸ்வரூப நிர்ணயம் பிரசித்தமாயிருக்கிறது. இந்த நிர்ணய (நிச்சய) த்தினுல் வாய்வின் ஸ்திதியானது ஸ்பர்சனேந்திரி யத்தினுலேயே தெரியவேண்டுமென நிச்சயமாயிற்று. ஸ்பர்சேந்திரியமான சர்மத்தை (தோலை) அநுசரித்துக்கொண்டிருப்பதாயிருக்கிறது. வாயுவானது தன்னுடைய ஆஸ்ரயஸ்தான ஸ்பர்சனேந்திரிய(சர்ம)த்திலேயே விசேஷ(பிரரூபதான) மாயிருக்கிறது. வாயுவானது சரீரத்திற்கு ஆவரணஸ்வமானசர்மத்தி(காற்ருனது திரேகத்தை மறைத்துள்ள உருவமான தோலினிடத்தி) லேயே அதிகமாயிருக்கிறதெனத் தெரியலாயிற்று ஆனதினுல் இந்த சர்மகத (தோலின் உக்கிர) மான வாயுவானது கோபமடையாமல் எப்பொழுதும் சமானவஸ்தையிலிருக்கவேண்

டுமென்பதின் நோக்கமாகவே நித்தியமும் சிரேஷ்டமான,, தைல ஸ்நாநம்,, செய்யவேண்டுமென வைத்திய சாஸ்திரங்கள் போதிக்கின்றன.

வாயுவின் கோப (மூர்க்க) த்தைச் சாந்தம் செய்வதற்காக தைல சிகிச்சையேபிரதான(முக்கிய)மாயிருக்கிறது. உலர்ந்துப்போன தடிகொம்பு முதலானவற்றை எண்ணெயில் சில நாள் ஊரவைத்திருந்து அதைத்தேவையானபடி வளைக்கலாம். வாயுவின் கோபத்தினால் கைகால்கள் விறகைப்போல சலனமில்லாததாகி வளைக்கமுடியாதபோது சில நாட்கள் வரையில் எண்ணெயைத் தேப்த்துக்கொண்டிருந்தால் கைகால்கள் தாமாகவே வளையும் படியாகும் ஆனதினால் வாத பிரகோபத்தாலுண்டான ரோகங்(வியாதி)களில் தைலாப்யங்கம், தைலபானம், தைலபஸ்தி (எண்ணெ தேய்த்தல் எண்ணெ யுட்கொள்ளல், குதத்துவாரத்தில் பீச்சாங்குழல்மூலமாக எண்ணெயைச் செலுத்துதல்) முதலான தைலசிகிச்சைகளே விசேஷமாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. வாதஜன்னிய ரோகங்களின் சாந்திக்காக தைல சிகிச்சையைப் போல உத்தமசிகிச்சையானது மற்றொன்றில்லையென்றால் அதிசயமாகமாட்டாது. தைலாப்பியங்கத்தினாலுண்டாகும் பலனை

சுசுருத சம்ஹிதை, சு. சி. 24

*ஜலசிக்தஸ்ய வர்த்தந்தே யதாமூலேம் குமாஸ்தரோ:*
*ததா தாது விவிர்த்திர்ஹி ஸ்நேஹ சிக்தஸ்ய ஜாயதே*

விருக்ஷ (மர) த்தின் மூலத்திற் (வேருக்) கு ஜலம் விட்டால் கிளைகளும், இலைகளும், புஷ்பபலங்களும், அபிவிர்த்தியாகி அவ்விருக்ஷத்தை யடைந்தவர்களுக்கு வெப்பத்தாலுண்டான சந்தாப (துன்ப) த்தைத் தன்னுடைய குளிர்ச்சியான நிழலால் நிவாரணம் செய்துத் தன்னுடைய மதுரமான பலங்களினாலும், மற்றும் சுவாசனையுள்ள புஷ்பங்களாலும் மனதை ஆநந்திக்கச் செய்வதைப்போல நித்தியமும் அனுஷ்டிக்கும் தைலாப்யங்கத்தினா (சரீர மெல்லாம் எண்ணெ பூசுவதா) ல் வாயுவானது சமானமடைந்து ரத்தமாமிசாதி தாதுக்களுக்கும் சமஸ்த அவயங்கட்கும் உசிதமான பரிமாணத்து (தகுதியான அளவு)டன் விருத்தியு (வளர்த்தலு) ண்டாகி சரீரமானது காந்தி விசிஷ்டமாகி (உடலானது அழகில் மேன்மையாகி) கண், செவி, முதலான இந்திரியங்களின் சக்தியுமதிகரிக்கின்றது.

தலைக்குக் தைலம் தேய்ப்பதினால் நினைவின் பொக்கிஷமான மூளையின் சக்தியானது விருத்தியாகி கூந்தல் நீளமாகவும் வண்டுகளைப் போலக்கறுத்தும் திடமாகவும் பெருகுவதல்லாமல் தலைநோய், ரோமமுதிர்தல், கூந்தல் சிகப்பு, வெண்மைகளாவதும் கண்வலி, நித்திராபங்கம், முதலான ரோகங்களும்,

சாந்தமடையும் கைகால்களுக்கு எண்ணெ தடவி தேய்ப்பதால் உள்ளங்கை உள்ளங்காலெரிவு இவை முதலான வியாதிகளுண்டாவதில்லை. மற்றும் கண்களில் எண்ணெ விட்டுக்கொண்டுவர கண் திருஷ்டி சக்தியுமதிகரிக்கும், மற்ற விடங்களில் எண்ணெ பூசித்தேய்ப்பதால் சர்மமா (தோலா) னது மிருதுவாகி காந்தியுண்டாகிச் சொரி, சிரங்கு, தடிப்பு, இழுப்பு, முதலான சர்ம ரோகங்களின் பயமானது சுவப்பனத்திலுங்கூட சம்பவிக்காது.

சரீரத்திற்கு எண்ணெயைச் சும்மா பூசின மாத்திரத்தில் ஒரு பிரயோஜனமு முண்டாகாது, எண்ணெயைப்பூசி 10, 15, நிமிஷ காலம் நன்றாகத் தேய்த்தால் அவ்வெண்ணெயானது, உரோமத்துவாரங்களிலுள்ள சரீர உஷ்ணத்தில் 300-மாத்திரைக்காலம் வரைக்கு மிருந்து (ஓரெழுத்துக்கு ஒரு மாத்திரைக்காலம்) பிறகு ஒவ்வொரு நூறு மாத்திரைகளின் காலப்பிரமாணத்துடன் 900 மாத்திரைக்காலம் வரையில் கிரமமாக சர்மம், உதிரம், (தோல் ரத்தம்)மாமிசம், மேதஸ்சு, அஸ்தி மஜ்ஜைசுக்கிலம் (நரம்பு எலும்பு மூளை, வீரியம்) ஆக இவைகளில் பிரவேசித்து அவைகளிலுண்டாகும், வாத, பித்த, சிலேஷ்ம விகாரங்களை சாந்தம் செய் (முத்தோஷங்கள் வேற்றுமைப்படுதலை அமைதியாக்கு) கின்றது. ஆனதினால் பிறதிதினமும் தைலாப்யங்கம் செய்வது அத்தியந்த ஹிதகரமானதாயிருக்கிறது. பிறதி தினமும் செய்யாவிட்டாலும் வாரத்திற்கிருமுறையாவது, கடைசி பக்ஷமாக வாரத்திற்கொரு முறையாவதும் தைலாப்யங்கம் செய்தேய கவேண்டும். இல்லாவிடில் வாயுவானது கோபமடைந்து அநேகவிதமான உபத்திரவங்களையுண்டாக்கும் வாயுதேவனுனவன் சிநேஹாபிஷேகத்தினால் (எண்ணெதேய்ப்பதினால்) திருப்தவனுவதைப்போல மற்றெந்த வஸ்துவினாலும் திருப்தனுவதில்லை.

அப்பியங்க நிஷேதம்.

நூதனசுரம், அஜீர்ணம், அதிசாரம், வாந்தி, முதலானவைகளுண்டானபோதும், விரோசன (பேதி) மருந்துகளைச் சாப்பிட்டுள்ளபோதும் பஸ்திகிரியை (எனிமாவை) செய்து கொண்டபோதும், தைலாப்யங்கம் செய்யக்கூடாது. வியாயாம் (தேகாப்பியாச)த்தாலுண்டான உஷ்ணம் சாந்தமானபிறகேசெய்யத்தக்கது.

அப்பியங்கத்திற்கு விளக்கெண்ணெ, எள்ளெண்ணெ தேங்கா எண்ணெ முதலியவைகள்உத்தமானதாயிருக்கிறது. அல்லது சுவைத்தியர்களால் தயாரித்ததைலங்களையாவது உபயோகிக்கலாம். கடைகளில் விற்பனையாகும் நானாவித சுகந்த தைலம் (ஹேர் ஆயில்)முதலானவைகளை உபயோகிக்கக்கூடாது, 100-க்கு 90-வீதம் வாசனை எடுத்த சீமை எண்ணெயில் கொஞ்சம் எள்ளெண்ணெச்சேர்த்து வர்ணமும் சுகந்தமுமான செண்டு (வாசனைத் தைலங்) களைச்சேர்த்து தயாரித்தவைகளாயிருக்கின்றன. மூளை

யின் சக்திபெருகுவதைத்தடுக்கும், பதார்த்தங்களின் சம்சர்க்கத்தினால் ரஹிதங்ளான (விடுதலான) தைலங்களையுபயோகித்தால் அக்காலத்திலேயே சுந்தர கிருஷ்ண கேசங்கள் வெண்மையாகி, ஸ்மிருதி சக்தி (நினைவின் வல்லமை) யானது க்ஷீணமாகும், பிறதினமும் கேச சம்ஸ்காரம். (தலைவாரிக்கொள்வது) ஸ்திரீ புருஷர்கள் ஹேர் ஆயில்களின் மனோமோஹமான கேவல சுகந்தத்திற்கு பித்தர்களாகி அவைகளையே உபயோகித்துக் கொண்டிருப்பது. எல்லாத் தேசங்களிலும் தற்கால வழக்கமாயிருக்கிறது. ஆனாலும் இத்தைலம் தற்காலத்தில் யஞனந்த (மனத்திற்கானந்த) முண்டாக்கினாலுங்கூட தினக்கிரமமாக நாநாவிதங்களான உபத்திரவங்களையுண்டாக்குகின்றன. இவ்விஷயத்தைத் தெரிந்துள்ள எவ்வளவோ பேர் சுசிக்ஷிதருங்கூட சுகந்தத்தின் மோஹபாசத்திற்கு உட்பட்டு இத்தைலத்தினாலுண்டாகும் உபத்திரவங்களுக்கு மற்றெந்தக் காரணத்தையாவதும் சொல்லி ஹேராயில்களை மாத்திரம் நிரபராதிபதிகளாகச் செய்வார்கள். இக்காரணத்தினாலேயே பிறதிதினமும் நூதனமான தைலங்கள் நூதன வேடங்களைபடைந்து வந்து நம்தேயத்தின் சுசிக்ஷித தருணர்களை மோசம் செய்கின்றன. ஆகையால் வேஷதாரிகளான ஹேர் ஆயில்களுடைய மாயாஜாலத்திற் சிக்காமல் எத்தைலத்தை யுபயோகிக்க வேண்டுமானாலும் முதலில் அவைகளின் குணதோஷங்களைப்பரிசோதித்து யோக்கியமான தெனத் தெரிந்தவைகளையே உபயோகித்தால் வெகு ஹிதகரமாயிருக்கும்.

முற்றிற்று.

# ஸ்ரீ சைல மஹா க்ஷேத்திரம்,

## உற்சவாதிகளும், செல்லும் மார்க்கமும்.

ஸ்ரீ சைலத்தில் உற்சவாதிகள் டிசம்பர் மாதத்தில் மகர சங்கராந்தி நாள் பார்வதி பரமேஸ்வரனின் கல்யாண உற்சவம் பிராரம்பமாகிறது. இக்கல்யாணோற்சவம் ஒரே நாள் நடைபெருவதாலிதற்கு யாத்ரீகர்கள் வருவதில்லை சங்கராந்திக்கும் சிவன் ராத்திரிக்கும் மத்தியில் சுமார் ஒன்றறை மாதமேயிருக்கிறது. இதற்குள்ளாக சிவன்ராத்திரிக்குவேண்டுபவைகளெல்லாம் தயார் செய்துக்கொள்ளவேண்டியிருக்கிறது.

மாசி மாதம் சிவன்ராத்திரியிலிருந்து சித்திராபௌர்ணமிக்குப் பிறகு ஒரு வாரத்திற்குள் நடைபெரும் கும்போத்சவம் வரைக்கும் 50-நாட்களிலும் பிறதிதினமும் உற்சவாதிகளும் செவ்வாய் மற்றும் வெள்ளி முதலிய நாட்களில் பிரமராம்பா தேவிக்கு விசேஷ பூஜையும் நடைபெரும் இவ்வுற்சவங்களைப்

பார்க்க கர்நாடக பிராந்தியத்தின் ஜனங்களும் இதில் வீரசைவர்களே விசேஷமாக வருகிறார்கள்.

சோலாப்பூர், மற்றும் பிஜாப்பூர், ஜில்லாக்களிலிருந்து இரும்புக் கம்பிகள் சமேதர்களாக கஞ்சாரிகள் வருகிறார்கள். உகாதிபண்டிகை சமீபத்தில் மைசூர் சம்ஸ்தானத்தின் பக்தர்கள் மாடுகளுடன் கால்நடையாக வந்து, ஸ்ரீபிரமராம்பாதேவி மற்றும் மல்லிகார்ஜுன சுவாமிக்கு வஸ்திராதிகள் சமர்ப்பிப்பார்கள், உகாதிபண்டிகைக்கு 15-நாள் கழித்து யுக்கேரியிலிருந்து யாத்ரீகர் மூலமாக யோகதண்டம் வரும், கும்போத்சவமான பிறகு தேவஸ்தானத்தில் நித்திய பூஜை செய்யும் அர்ச்சகரும் மற்றும் சமீபத்தில் வாசம் செய்யும், சிம்சரென்னும் காட்டு மனிதர்கள் தவிர மற்ற யாரு மிருப்பதில்லை.

சிவன்ராத்திரி காலத்திலும் சிவன்ராத்திரியான பிறகு ஒன்றரை மாதம் வரையில் பரதகண்டத்தின் எல்லா விடங்களிலிருந்தும் யாத்ரீகர்கள் ஏராளமாக வந்து கொண்டிருப்பார்கள் ஆந்திர தேசத்திலிருந்து வரும் யாத்ரீகர்கள் கர்நூல் ஜில்லாவுக்குச் சேர்ந்த மார்க்காபுரம் ரயில்வே ஸ்டேஷனிலும், கர்நாடகம், பம்பாய் பிராந்தியம், மற்றும் ஐதராபாத்து சமஸ்தானங்களிலிருந்து வரும் யாத்ரீகள் நந்தியால் அல்லது கர்நூல் ரைல்வேஷ்டேசனிலும் இறங்குவார்கள். கர்நூல் அல்லது நந்தியால் ரைல்வே ஸ்டேசனிலிருந்து ஆத்மகூருக்கு, ரொல்லபெண்ட, மற்றும், தோர் நாளங்களின் மார்க்கமாக ரஸ்தா இருக்கிறது. ரொல்லபெண்டயிருந்து பெத்த செருவு, வரைக்கும் 7-மைமில் பாரஷ்ட்டிபார்ட்மெண்ட்டு ரஸ்தாவும், ரொல்லபெண்டத்திலிருந்து ஆத்மகூர்வரைக்கும் இரண்டு மைமில் தூரமுள்ள ரஸ்தாவில் மோட்டார்களும் சஞ்சரிக்கின்றன, மார்க்காபுரம் மற்றும் ஆத்மகூரிலிருந்து ரொல்லபெண்ட மார்க்கமாக பெத்தசெருவு, வரைக்கும் ஜல்லி போட்ட ரஸ்தாவாகச் செய்வதால், மார்க்காபுரம் மற்றும் ஆத்மகூரிலிருந்து ரொல்ல பெண்ட மார்க்கமாக பெத்தசெருவு வரைக்கும் மோடார் பஸ்சுகள் சஞ்சரிக்க அநுகூல முண்டாகும், யாத்ரீகர்கள் தேவஸ்தானத்திற்கு 10, மைமில் தூரமுள்ள பெத்த செருவு, வரைக்கும்நிராயாசமாக(கஷ்டமில்லாமல்)வர அநுகூலமாயிருக்கும், பெத்த செருவிலிருந்து ஸ்ரீசைலத்திற்கு கால்நடையாகவும் குதிரையின் மேலேயும் அல்லது டோலிகளிலுட்கார்ந்தும் போகவேண்டும், பெத்த செருவிலிருந்து ஸ்ரீசைலம் வரைக்கும் பேர்பாதி மிகக்கஷ்டமானது, இப்பாகத்தில் அதிக கடினமான மலைகளையும் குன்றுகளையும் ஏறியிறங்கவேண்டும், மற்றும் சில விடங்களில் ரஸ்தாவானது கல்லும் முள்ளுமாகவும், பள்ளம் மேடாகவுமிருக்கிறது, பீமனகொள்ள மென்னும் ஸ்தலத்தில் பிரயாணிகள் 600, அடிவுயரமுள்ள மிகக்கடினமான மலையை

விட்டிறங்கி இதைவிடக்கடினமான மற்றொரு கற்படிகளினால் கூடியுள்ள மற்றொரு மலையை ஏறவேண்டும், இது பிரயாணத்தில் அத்யந்த கஷ்டமான பாகமாயிருக்கிறது. இக்கணவாயைக்கடந்து விட்டால் பிரயாணம் சுலபசாத்தியமாகவே முடிந்து விடுகிறது, பீமன கொள்ளத்தில் ஒரு பெரிய பாறையின் சில பாகங்களில் ஜலம் கொஞ்சம் கொஞ்சமாக பொங்கி வந்துக்கொண்டிருக்கிறது இச்சலத்தை யாத்ரீகர்கள் உபயோகித்துக் கொள்கிறார்கள்.

பெத்த செருவு மற்றும் பீமனகொள்ள இவைகளின் மத்தியில் மொட்டகுலமட்டமென்னும் ஸ்தலமிருக்கிறது. இவ்விடம் கிணறுமிருக்கிறது, கைலாசதுவார மென்னும் மற்றொரு ஸ்தலமிருக்கிறது, மற்றும் சிகரேஸ்வரத்தில்தேவாலயங்களும் மற்றும் மண்டபங்களும் ஏரியு (குளமு) மிருக்கிறது, அநேக யாத்ரீகர்கள் சிகர தர்சனத்திற்காக சிகரேஸ்வரத்திற்குப் போவார்கள், மற்றும் தேவாலயத்தின் மூன்று மைல் தூரத்தில் அடகேஸ்வரமென்னும் ஸ்தலமிருக்கிறது, இவ்விடம் சுற்றுப்பக்கங்களில் மண்டபங்களும் கிணர்களுமிருக்கிறது.

தேவஸ்தானத்தின் பிரகாரமானது சுமார் 200, கஜ அகல முள்ளதாயிருக்கிறது, சிவன்ராத்திரிகாலங்களில்இப்பிரகாரமானது யாத்ரீகர்களால் நிறைந்து அடகேஸ்வரம் சிகரேஸ்வரத்திலுங்கூட ஏராளமான யாத்ரீகர்கள் தங்குகிறார்கள், அதிகாரிகளுங்கூட பிரகாரத்திலேயே தங்குகிறார்கள். ஆகையால் ஜனக்கூட்டம் ஏராளமாயிருக்கிறது, இப்பிராகாரத்திலேயே கிணருமிருக்கிறது.

முன்னொரு காலத்தில் இக்கோவிலின் உட்சுவர்கள் பூராவும் தங்கத்தகடுகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தனவாம், பின்பொருகாலத்தில் இவ்விராஜ்யத்தை யுத்தம் செய்து ஜெயித்த ஔரன்ஜிய மதவரசன் அத்தங்கத்தகடுகளை யெல்லாம் கைப்பற்றிக் கொண்டுபோய் விட்டானெனமற்றொரு பிரபா பத்திரிகையில் பிரசுரமாயிருக்கிறது.

பீமனைவன் வில்லை நிலத்தில் வைத்து மேலே ஆகாசத்திற்கிழுத்துச் சொன்னதாவது ஏ பக்தவத்சலனே நீபிரத்தியக்ஷமானால் நன்மையாயிற்று. இல்லாவிடில் இவ்வம்பினால் என் பிராணனை விடுகிறேனெனப் பிரார்த்திக்கவும், பரமாத்மன்பிரத்தியக்ஷனாகி அவனுக்கு 3-நாளிகை வரையில் தன்னுடைய ரௌத்திராவதாரத்தைக் கொடுத்தானல்லவா. எந்த விடத்தில் பீமன் வில்லை நிலத்தில் அழுத்தினானோ அவ்விடமானது பள்ளமாக இப்போதும் பீமனகொள்ள மெனப் பிரசித்தமாயிருக்கிறது. இப்பள்ளமானது ஒருமைல் விஸ்தீர்ணமிருக்கலாமெனத் தெரிறது. இப்பீமன் கொள்ளத்திலிருந்து கைலாசத் துவாரத்திற்குப் போவதற்குள் கைலாசத்தையே கண்டதைப்போலாகிறது, இந்த

ஸ்ரீசைலத்தி லெவ்விடம் பார்த்தாலும் லிங்கமூர்த்திகளைத் தவிர இதர மூர்த்திகளில்லை. இவ்விடம் லிங்கதெஹளெ என்பதொரு பாகமான பாதாள கங்கையிருக்கிறது இந்நதியிலுள்ள வெகு சின்னவைமுதல் பெரிய கல்லுகள் வரையில் காணப்படும் சிலை, (கல்லு) களெல்லாம் லிங்காகாரமாகவே காணப்படுகின்றன. ஸ்ரீசைல சிகரம் த்ருஷ்ட்வா புனர்ஜன்ம னவித்யதே.

ஸ்ரீசைல சிகரத்ரிசனம் செய்தவர்களுக்கு புனர்ஜஜனன மில்லையென புராணங்களில் சொல்லப்பட்டிருக்கின்றன. மற்றும் இம்மலையின் கீழ் அனேக விடங்களில் அடவியில் அநேகானேக மதில் சுவர்களும் அழிந்துப்போன கட்டங்களும் ஏராளமாக ஆங்காங்கு காணப்படுவதால் பூர்வகாலத்திலனேக பட்டணங்கள் வெகு வைபத்துடனிருந்திருக்கலாமெனத் தெரியவருகிறது.

தேவாலயத்தின் பிராகாரங்களில் சின்னபடிகளுள்ள பத்து கிணருகளிருந்து இவைகளுக்கு தேவாலயத்தின் மேற்புற முள்ள எநுதல செருவு என்னும் ஏரியிலிருந்து ஜலம் வருகிறது யாத்ரீகர்களுக்கு சுத்தமான ஜலசப்ளைக்காக தேவாலயத்தின் பிராகாரத்தில் மல்லிக குண்டத்தின் மேற்புறத்தில் பத்தாயிர கியாலன் ஜலம் நிற்கும் படியான தொட்டி கட்டப்படுகிறது. இதற்கு பனிரெண்டு குழாய்கள் வைத்து சிவன்ராத்திரிக்கு முன்னால் இஞ்சினால் ஜலம் நிறைத்து வைக்கலாம், பொருள் சேகரித்து அடுத்த வருடத்தில் பதினையாயிரகாலன் ஜலம் பிடிக்கும்படியான இரண்டு தொட்டிகளை அதிகமாகக்கட்டினாலிவைகளினால் ஐயாயிரம் யாத்ரீகர்களுக்கு ஐந்து நாள் வரையில்போதுமான ஜலம் கிடைக்கும். தொட்டிகாலியானவுடனே சமீபத்திலுள்ள கிணர்களிலிருந்து மோடார் பம்புகளின்மூலமாக தொட்டிகளைமறுபடியும்நிரப்பலாம்.

பஞ்சமடங்களின் சமீபமாக ஓடிக் கொண்டிருக்கும் சரஸ்வதி வாகுநதியானது ஜலத்திற்கு மற்றொரு முக்கிய ஆதாரமாகும், இந்நதியானது தேவாலயத்தின் வாய்வுதிசையிலிருந்து இதுகண்டாமடத்தின் சமீபமுள்ள ஒரு சின்ன ஏரிக்குப்போய்ச் சேருகிறது, இக்கண்டாமடத்தின் சுற்றிலும் நல்ல ஊற்றுள்ள பனிரெண்டு கிணர்களுண்டு, இவ்விடம் இருபத்தையாயிரகாலன் ஜலம் பிடிக்கும்படியான இரண்டு தொட்டிகளைக் கட்டினால் இவ்விடமிறங்கும் யாத்ரீகர்களுக்கு சுத்தமான ஜலம் கிடைக்கும்.

கண்டாமடத்திற்குக் கிழக்கில் மற்றொரு தேவாலயத்தின் ஈசான்யதிக்கில் ஒரு பெரிய ஏரியிருக்கிறது, இதில் உத்தமமான ஊற்றுள்ள பதினாயிர கனஅடிஜலம் நிறைந்திருக்கிறது இவ்விடம் ஐந்து சிமெண்ட் தொட்டிகளைக்கட்டி கர்நூல் டிஸ்டிக் போர்ட்டார் அவர்கள் ஒருஇஞ்சினையும் ஸ்தாபனம் செய்து பம்புகளின் மூலமாக மேற்கண்ட தொட்டிகளுக்கு ஜலம் விடுகிறார்

கள். இவ்வேரியில் சுமார் ஒருலக்ஷ கியாலன் ஜலமிருப்பதால் இருபதினாயிரம் ஜனங்களுக்கிது போதுமானது.

தேவாலயத்தின் கிழக்கு திக்கில் மற்றொரு பாதாளகங்கைக்குப்போகும் ரஸ்தாவிலுள்ள மண்டபங்களின் வடக்கில் சமீபமாக இரண்டு சேந்து கிணர்களுள்ள ஒரு சின்ன கோனேரி இருக்கிறது. இதனால் சமீபத்திலுள்ள மண்டபத்தில்வாசம்செய்யும் வியாபாரிகளுக்கும் யாத்ரீகர்களுக்கும் சவுகரியமாயிருக்கிறது. இக்கோனேரியின் சமீபத்தில் பத்தாயிரகியாலன் ஜலம் பிடிக்கும் படியான ஒரு தொட்டிக்கட்டினால் வெகு சவுகர்யமாயிருக்கும்.

தேவஸ்தானத்தின் கீழ்ப்பக்கத்தில் ஒன்றரை மைல் தூரமுள்ள பாதாளகங்கையும் மற்றும் கிருஷ்ணா நதிக்கும் யாத்ரீகர்கள் போய் வருகிறார்கள். உற்சவத்திற்கு இரண்டு நாள் முன்னதாக போர்டாரவர்கள், தொட்டியில் பம்புகளினால் ஜலத்தை நிறப்புவார்கள், பகலில் ஜலம் நிறப்புவதற்கும் இரவில் எலெக்ரிக் லைட்டுக்காகவும் பதிமூன்று குதிரைபவுருள்ள ஒரு இஞ்சின் ஸ்தாபனம் செய்யப்பட்டிருக்கிறது. இது இருபது மேண்டில்பவருள்ள இருநூறு எலெக்ரிக் விளக்குகள் எரிகின்றன, இவ் எலக்ரிக் லைட்டுகளுக்கு பணம் சில வழிப்பதை சிலர் ஆட்க்ஷேபம் செய்கிறார்கள், பிரதிவருடமும் சிவன்ராத்திரியில் கியாஸ் லைட்டுக்காக ஆயிரம் ரூபாய்களுக்கதிகமாகவே சிலவாய்க்கொண்டிருக்கிறது. இக்கியாஸ் லைட்டுகளினால் எல்லாவிடங்களுக்கும் வெளிச்சம் வருவதில்லை. இவ்விஞ்சினால் சிலவு கொஞ்சம் கூடுதலானாலும் ஜலவசதிக்கும் அநுகூலமுண்டாகிறது. இவ்வளவு பளுவுள்ள இஞ்ஜினை இத்தேவஸ்தானத்திற்குக் கொண்டுவந்து ஜோடித்த போர்டின் செக்ரெடரியான யல்லூரு ஸ்ரீமான் எல்லய்ய செட்டியாருக்கும் மற்றும் எலக்ரிக் விளக்குகளை சிறிதுகாலத்திற்குள் ஜோடித்துக்கொடுத்த ஆந்திர இஞ்சினீரிங் கம்பெனி புரொபுரைடரையும் நாம் மிகவும் பாராட்டுகிறோம்.

ராவ்பகதூர், ருஷி, ஸ்ரீ கிருஷ்ணசுவாமி, டி. எஸ்பி, அநந்தபுரம்
எச், இ, கோல் ப்ரூக், டி, எஸ், பி, கர்நூல்.

மற்றும் யாத்ரீகர்களின் வசதிக்காக டிஸ்டிக் (ஜில்லா) போர்டாரவர்கள், 1929-வது வருஷத்தில் இருநூறு அறைகளுள்ள கொட்டாய்களைக்கட்டினார்கள், அடுத்த 1930-ம் வருடத்தில் யாத்ரீகர்களின் அநுகூலத்திற்காக விசாலமாயிருக்கும் படியாக இரும்புக்கம்பங்களைக்கொண்டு நூறு அறைகள் கட்டப்பட்டன. இவைகளும் யாத்ரீகர்களுக்குப் போதாமையாலிவ்வருடம், 500, அறைகள் நிர்மித்துங்கூட போதாமையால் ஜனக்கூட்டமதிகரித்து தேவஸ்தானமும் நிறைந்திருந்தது எநுகுல ஏரிக்குச் சமீபமாக தேவாலயத்தின் புறம்பிலுள்ள வெளிப்பிரதேசத்தில் கொட்டாய்

கள் கட்ட வேண்டுமென வெகுகாலமாக மூடியிருந்த அம்பாதேவா லயத்தின் மேற்குவாயிலைத்திறக்கலாயிற்று. இவ்வெளிப்பிரதேச மானது ஜலத்திற்கும் மற்றும் தேவாலயத்திற்கும் சமீபமாயிருப்ப தால் யாத்ரீகர்களின் வசதிக்கு வெகு அநுகூலமுண்டாயிற்று, ஆனால் போலீஸ் அதிகாரிகளின் வாசஸ்தலமுமிவ்விடமே ஏற்ப் படுத்தி மற்றும்கர்நூல்போலீஸ்சூப்ரெண்டெண்ட்டின்சகாக்களுக் கும் மற்றும் ஹிந்து அதிகாரிகளுக்கும் ஏரியின் சமீபத்தில் வசதி செய்துக்கொடுத்து தேவாலயத்துள் ஒரு போலீஸ் டவுனும் நிர் மாணித்ததும் தவிர உற்சவத்திற்கு வரும் யூரோபியன் அதிகாரி களுக்காக ஏரியின் மேற்புறத்தில் வசதி செய்ய வேண்டியதா யிற்று.

ஈதல்லாமல் தேவஸ்தானத்தின் பிராகாரத்திலும் மற் றும் உள்புறமும் அநேக கொட்டாய்கள் கட்டப்பட்டன, ஆனா லிவ்விடத்தில் ஜனங்கூட்டம் மதிகரிக்காமலிருப்பதற்காக அதிகமான வாடகை விதிக்கவேண்டியதாயிற்று. மற்றும தேவாலயத்தின் வெளிப்புறமுள்ள நூறு மண்டபங்களுக்கு சுண்ணம்பு பூசி எளிய யாத்ரீகர்களுக்கு விடப்பட்டது.

போர்ட் மெம்பரான ஸ்ரீமான், டி ஆர். ஸ்ரீனிவாச மூர்த்தி பி. ஏ. எல். டி. இவருடைய அதிகாரத்தின் கீழ் வழக்கப் படிக்கு பிராம்மணரின் அன்ன சத்திரமும் நடைபெற்று சாதுக் களுக்கும், இதரர்களுக்கும் போஜன சாமக்கிரியைகள் விநியோ கிக்கப்பட்டன, மற்றும் பெத்த செருவு என்னும் ஏரியி (குளத்தி) னருகில் ஸ்ரீமான்கள் அப்பைய்ய சாஸ்திரிகளும், மற்றும் சோம சுந்தர சாஸ்திரிகளென்னுமிருவர் இரண்டு அன்ன சத்திரங்களை சில நூற்றுக்கணக்கான பொருள் சிலவினால் நடத்திவைத்தார் கள், ஸ்ரீமான் பிரயாக சந்திர மௌலீச சர்மாயென்பவர் மற்றோ ரிடத்தில் அன்னசத்திரத்தை நடத்திவைத்தார்.

கட்டப்பட்ட இருபது கக்கசுகளின் சுத்திக்காக வேண் டிய ஏர்ப்பாடுகளையும் செய்தார்கள் சென்ற வருடம் ஹெல்த் இன்ஸ்பெக்டருடைய பார்வையின் கீழ் குப்பை கூட்டுபவர்கள் 16-பேர் நியமிக்கப்பட்டார்கள், நந்தியால் தாலூக்காபோர்டார் ஒரு சப்அசிஸ்டெண்ட்சர்ஜனை மருந்துகளுடன் அனுப்பி வைத் தார்கள். அவர் யாத்ரீகர்களுக்கு ஔஷதங்களைப் பிரீதியுடன் கொடுத்துக் கொண்டிருந்தார்.

உற்சவ காலங்களில் இங்கு வரும் வியாபாரிகள் ஆகா ராதிசாமான்களை அதிக விலைக்கு விற்பதாக யாத்ரீகர்கள் புகார் செய்வதால், சாமான்களின் கிரயமும் அதைக்கொண்டு வந்து சேர்க்கும் கூலியும் சொற்ப லாபமும் சேர்த்து போர்டாரவர்கள், விலைஜாபிதாவை விளம்பரப்படுத்துவதாகஉத்தேசித்திருக்கிறார்கள்.

உற்சவத்திற்கு ஓர் ராவணவாஹனமும், நாந்திவாஹனமும், பிருங்கிவாஹனமும், செய்யவேண்டியிருக்கிறது. தவிர ஒரு பெரிய ரதமிருந்தது, இது கிழக்கு கோபுரவாயலின் முன்னால் இருபுரமும் வரிசையாகயுள்ள மண்டபங்களின் நடுவிலுள்ள தெருவின் வழியாக ரதோச்சவம் நடைபெற்று வந்தது இவ்விரதமானது சில வருடங்களுக்கு முன் அகஸ்மாத்தாக நெருப்பு விழுந்து வெந்து போயிற்று, தற்காலமொரு சின்ன ரதம் மாத்திர மிருக்கிறது. பிரதி வருடங்களில் எல்லாக் காலங்களிலும் பிரமராம்பாதேவி மற்றும் மல்லிகார்ஜுன சுவாமி மற்றும் இதர தேவர்களின் பூஜாதிகள் சரிவர நடைபெறவேண்டி பூஜாகமிட்டி ஒன்று நேமிக்கப்பட்டிருக்கிறது. பிரதியொரு மெம்பரும் வருடமொன்றிற்கு சந்தாவாக ஆறுரூபாய்களையாவது அல்லது ஒரே தடவையாக 100—0—0 ரூபாய் கொடுத்தால் அவர்களுக்கு தேவாலயத்தின் பிரசாதம் பிறதியொரு மாதமும் தபால் மூலமாக அனுப்பப்படும், இம்மெம்பர்களால் வசூலாகும் தொகையில் அர்ச்சகர்களுக்கும், பூஜாதிரவ்யங்களின் சிலவுக்கும், வாஹன விக்கிரஹாதிகளை நிர்மாணிப்பதற்கும் உபயோகித்ததுபோக மீதமுள்ள திரவ்யத்தைக்கொண்டு தேவாலயங்களின் ஜீர்ணோத்தார காரியங்களுக்குபயோகிக்கப்படும். தற்காலமிருநூரு மெம்பர்களிருக்கிறார்கள்.

கோட்டையின் சுவர்களினுட்புறத்தில் சுத்தம் செய்யப்பட்டிருக்கிறது, இதில் ஷெட்டு (கொட்டாய்) களைக்கட்ட அநுகூலம் செய்யப்பட்டிருக்கிறது. மற்றும் வெடிப்பாயிருந்த சில மண்டபங்களை ரிபேர் செய்யப்பட்டது, அம்பாதேவாலயத்தின் மேற்கு கோபுரவாயிலைத் திறந்து விழுந்திருந்த மேற்கு சுவற்றின் சில பாகங்களை புதுப்பிக்கப்பட்டிருக்கிறது, அம்பா தேவாலயத்தின் முன்பாக உள்ள இரண்டு கோபுரங்களையும் ரிபேர் செய்யப்படுகிறது, இன்னுமிவ் வம்பாதேவாலத்திலுள்ள மண்டபங்களை ரிபேர் செய்யவேண்டியிருக்கிறது.

இவ்வருடம் சிவன்ராத்திரி உற்சவத்திற்கு வந்திருந்த யாத்ரீகர்களின் தொகை மிகக்குறைந்தபடியால் ஐயாயிரம் தர்சன டிக்கட்டுகள் விற்கப்பட்டன, ஆகையால் யாத்ரீகர்களின் சங்கை சுமார் 12-அல்லது 15-ஆயிரம் வரையிலிருக்கலாம், யாத்ரீகர்கள் குறைந்ததற்குக்காரணம் யாதெனில் கர்நூல் ஜில்லா எல்த் ஆபீசர் அவர்கள் கால்ராவியாதியுண்டாகலாமெனப் பிரசுரித்த பிரசுரமும் மற்றும் சத்யாக்கிரக விஷயமும் காரணமாயிருக்கலாம், ஆனால் அவர் பிரசுரம் செய்த மாதிரி வியாதியுண்டாக வில்லை. தெலுங்கு தேசங்களிலும் மற்றும் மதராஸ் பிராந்திய ஜனங்களின் சங்கையே மிகக்குறைவாயிருந்தது. காசி (பனாரஸ்) பம்பாய், கல்யாணி, நாகப்பூர் காதேவாட், மற்றும் கர்னாடக ஜில்லாக்களிலிருந்து அநேக யாத்ரீகர்கள் வந்திருந்தார்கள்.

உற்சவ கார்யாதிகள் சம்பிரமமாக நடைபெறச் செய்த எல்லா அதிகாரிகளையும், மற்றும் சிவன்ராத்திரி நாள் தேவாலத்துள் போய்வரும் யாத்ரீகர்களுக்கு சுலபமாக சுவாமி தெரிசனம் கிடைக்குமாறு விசேஷ சகாயம் செய்த ஸ்கவுட்டுகளுக்கும், மற்றும் ஸ்கவுட்மாஸ்டருக்கும், மற்றும் தூரமான பிரயாணத்தை லக்ஷியம் செய்யாமல் குண்டூரிலிருந்திவ்விடம் வந்து யாத்ரீகர்களுக்குப் பலவிதமான சஹாயங்கள் செய்த ஸ்கவுட் ஜனங்களையும் எவ்வளவு வர்ணித்தாலும் முடியாது.

இப்படிக்கு, பி. பிராமைய்ய, பிரசிடெண்ட்டு,
ஸ்ரீசைலம் மானேஜ் மெண்ட் போர்ட்டு 12–10–31,.
3–11–31,, 10–11–31,, பிரபா பத்திரிக்கையின்மொழி பெயர்ப்பு

தற்போது சுமார் 82-வருடங்களுக்கு முன்இத்தேசத்திற்கு பிரிட்டிஷார் வந்தபோது கர்நூல், பனகானபல்லி, வங்கைரா நவாப்புஅரசர் இந்த க்ஷேத்திரத்திற்கு வந்து 10—15—லக்ஷ ரூபாய்கள் விலைமதிப்புள்ள ஜாகீர்களை யெல்லாம் தம்சுவாதீனம் செய்துக்கொண்டு அப்போதிருந்த மடத்து சுவாமிகளுக்கு வெகு கஷ்டத்தையுண்டாக்கினபடியாலப்போதிருந்த சுவாமிகள் இவர்கள் கண்களுக்ககப்படாமல் எங்கோ ரகசியமாக மறைந்துபோய் விட்டார், பிறகு இப்பிராந்தியமெல்லாம் பிரிட்டிஷாரால் ஆக்ரமிக்கப்பட்டு பிறகு இந்தக்ஷேத்திராதிகாரிகளான சுவாமிகள் எவ்விடமிருக்கிறார்களெனத் தேடியும் கிடைக்காமையினால் இச்க்ஷேத்திரத்தின்காரியநிர்வாஹம்செய்வதற்கு இவ்விட மிருந்து 30—40 மைல் தூரத்திலுள்ள சிருங்கேரியின் கிளைமடமான புஷ்பகிரி மடத்தின் ஆதீனத்தில் ஒப்புவித்தார்கள். இது வரையி லிவர்களை பார்த்து வந்தார்கள்.

இந்த தேவாலயமானது வீரசைவ மதஸ்தாபனசார்யருடைய பீடமானதாலிது வேறு மதத்தவருடைய ஆதீனத்திலிருக்கக் கூடாதென தற்போதுள்ளவர்கள் கர்நூல் ஜில்லா கோர்ட்டில் வியாஜ்யம் தாக்கல் செய்யவும், இப்போது இம்மல்லிகார்ஜுன சுவாமியின் பூஜை மாமூல்படிக்கு வீரசைவ அர்ச்சகரும், பிரமராம்பாளின் பூஜை மாத்திரம்பிராம்ண அர்ச்சகனாலும் நடைபெற வேண்டுமென தீர்மானமாகி தற்போது நடைபெற்று வருகிறது. மற்றும் 5-பேர் டிரஷ்டிகளின் மேற்பார்வையில் இக்கோவில் காரியங்கள் நடைபெறவேண்டுமென ரிசீவரையும் ஏற்படுத்தியிருக்கிறார்கள். இன்னும் ஜில்லா கோர்ட்டில் வியாஜ்யம் நடைபெற்று வருகிறது.

4—4—32, பிரபா பத்திரிகையின் மொழி பெயர்ப்பு,

# ரம்பாபுரி ஜகத்குரு

## ஸ்ரீரே ணுகாசார்யர் ரதோச்சவம்,

வீரசைவர்களுக்கு முக்கிய க்ஷேத்திரமான ஸ்ரீமத் ரம்பாபுரி ஜகத்குரு வீரசிம்ஹாசனத்தின் சம்ஸ்தானத்தில் அநாதி காலமிருந்து வருடம் பிறதி நடைபெற்று வந்ததைப்போலவே சென்ற விபவவருடம் பங்குனி மாதம் பால்குணசுத்த 8-லிருந்து 13-வ வரைக்கும் நித்தியப்படி நடைபெறும் விருஷபோர்சவம், அஸ்வாரோஹணோச்சவம், அந்தோலிகோச்சவம், புஷ்பகோத்சவம், சயனோற்சவம், சுப்ரபாதோத்சவம், குங்குமோற்சவம், வசந்தோற்சவம், அவபிருத ஸ்நாநம், பத்திராநதியில் தெப்போற்சவம், முதலான நித்திய உற்சவங்களும், 13-வது நாள் சனிக்கிழமை பிராதக்காலேயில் பீடத்தின் கோத்திர புருஷனை ஸ்ரீவீரேசனுக்கு ஏகாதசருத்ரா பிஷேகங்களும், சஹஸ்ர வில்வார்ச்சனையும், நிறைவேறிய பிறகு மத்தியானம் அபிஜின் முகூர்த்தத்தில் ஸ்ரீசுவாமியை சுந்தரமான பிரஹ்மாதத்தில் ஆரோஹணம் செய்வித்த பிறகு ரதத்தின் காணிக்கை நடந்த பிறகு சகல பிருதுகளுடனும் வாத்திய வைபங்களுடனும் உற்சவம் வெகு சம்பிரமாக நடைபெற்றது. சமஸ்தபக்தமண்டலத்தவர்களும் ஸ்ரீசுவாமிகளின் பிரசாதத்தை ஸ்வீகரித்து தன்னிய ஜீவிகளானார்கள், உற்சவசமாப்தி சூசகமான சுரகிசமாராதனையுங்கூட கிரமமாக நடைபெற்றது, பக்தாதிகள் ஸ்ரீமுடிகந்த (அர்ச்சித்தசந்தன) பிரசாதங்களை ஸ்வீகரித்து சுவஸ்தானத்திற்கு புறப்பட்டார்கள்.

15–4–29, 10–3–30 பிரபா பத்திரிகையின் மொழி பெயர்ப்பு,

# ஸ்ரீ ரேவண சித்த மலை.

## ஸ்ரீ ரேவண சித்தசுவாமி ரதோச்சவம்.

பெங்களூரிலிருந்து மைசூர் ரைல்வே லயனில் குளோஸ் பேட்டை ரைல்வே ஸ்டேசனிலிருந்து, கான்கான்ஹள்ளி ரஸ்தாவில் 7-வது மைலில் ஸ்ரீ ரேவண சித்தமலையிருக்கிறது, ஸ்ரீஜகத்குருரேணுகாசார்யர்கொல்லிபாகியிலுள்ள சோமேச லிங்கத்திலுற்பவித்து ஆங்காங்கு அநேக லீலா விநோதங்களைச்செய்து இம்மலைக்கு வந்து நிலைக்கொண்டாரென இந்த ஸ்தல புராணத்தில் ஸ்பஷ்டமாகச் சொல்லியிருக்கிறது. இப்படிப்பட்ட பரமபவித்திரமான மலையின் மீது ஸ்ரீரேணுக லிங்கோத்பவ மூர்த்தியின் தேவாலயமிருக்கிறது. பிரதிவருடம் வைகாசி மாத பவுரணை நாள் காலையில் மேற்படி மூர்த்திக்கு மஹா ருத்திராபிஷேகமும்

சஹஸ்ர வில்வார்ச்சனையும், மத்தியானம் ஸ்ரீ பீமேஸ்வர ஸ்வாமி சன்னிதியில் உற்சவமும், ஸ்ரீ ரேவண சித்தரின் ரதோச்சவமும் (ஜாத்திரையும்) ஏராளமான கூட்டங்களுடன் நடைபெற்று வருகிறது, மூன்று நாள் காலையில் கிரிப்பிரதக்ஷிணையும் மாலே விருஷப வாஹனரூடராயும் மற்றும் ராவணேஸ்வர வாஹனரூடராயும், உற்சவம் வெகு விமரிசையாக நடைபெற்று வருகிறது, இம்மலே யடிவாரத்தில் ஸ்ரீரம்பாபுரி பீடத்திற்குச்சம்மந்தப்பட்ட ஸ்ரீராஜாபுர மடமென்று வீரசைவ மடமுமிருக்கிறது. இம்மடத்திற்கு 50, ஏக்கர் பூமியுமிருக்கிறது, இவ்விடமிருக்கிறது. இரண்டுமூன்று மைல் தூரமுள்ள குள்ளூர் என்னும் கிராமத்தருகில் அர்க்காவதி யென்னும் நதியுமிருக்கிறது.

ஸ்ரீரேவணகிரி க்ஷேத்திரமானது ஆரண்யத்திலிருந்தாலுங்கூட பரமபாவனமானதினல் பிறதிதினமும் தவராமல் ஸ்ரீசுவாமியின்சேவார்த்தமாகசதுர்வர்ண(நான்கு குல)த்தவர்களும் வந்துக்கொண்டேயிருக்கிறார்கள். இது மஹா மஹிமை பொருந்திய க்ஷேத்திரமாகும், இவ்வருடம் நடைபெற்ற ஜாத்திரையில் (உற்சவத்தில்) ஒரு குழந்தையானது மேல்மலேமீதிருந்து தவரி விழவும்.கீழ்மலேயிலுள்ளஒருமரத்தின்கிளேயின் மீது ஒருஅபாயமுமில்லாமல் அக்குழந்தை உட்கார்ந்திருந்தது, இவ்வதிசயத்தை அக்குழந்தையின் தாய்ப்பார்த்து, ஸ்ரீரேவண சித்தருக்கு முப்பது ரூபாய் காணிக்கை கொடுத்தாள், தவிர இவ்விடம் விசேஷமான உற்சவ(ஜாத்திரை)காலங்களில் அநேக பக்தர்கள் ஏராளமாகக்கூடி ஐந்தாறு நாட்கள் வரையில் பலவிடங்களில் அன்னதானம் நடந்தாலுங்கூட அக்காலங்களிலும் மற்ற காலங்களிலும் காக்கைகளின் கூட்டங்களே இருப்பதில்லே, சாம்பல்மூடின அக்கினியின் வர்ணமுள்ள இம்மஹா க்ஷேத்திரத்தின் மஹிமையை யாறறிவார்கள், இன்னுமிந்த க்ஷேத்திரத்திலுள்ள ரதவீதிகளும், ஸ்ரீவிக்நேஸ்வர, மற்றும், விருஷபேஸ்வர சுவாமிகளின் சந்நிதிகளில் பிறதிதினமும் பூஜை தீபாராதனைகள் சஹிதம் நடைபெற்று வருகின்றன.

17–6–29, 23–3–31, பிரபா பத்திரிகையின் மொழிபெயர்ப்பு.

---

சந்தா பாக்கியுடைய கனவான்கள் உடனே தயவு செய்து சந்தாதுகையை அனுப்பவேணுமாய்க்கோருகிறேன்.

பத்திராதிபர்.

மூன்றுநாளம்மை தலையில் காணும் ... ... ... 4
உடம்பெல்லாம் வுமிபோலகாணும், பலமாக வாரியிட்டுமறையும் 6
ஏழாநாள் ஸ்நானம் செய்யவும், பின்பு வயிற்றுளைவு காணும். 8
சரீரத்தைக் குளிர்ச்சி செய்யவும்.

(13) நீர்கோழுவன் அம்மையின் குணம்

காய்ச்சல்கண்ட மூன்றுநாள் சங்கம்பழம்போல அம்மைகாணும் 1
ஏழாம் நாளிறங்கிப்போகும் ... ... 2
ஒன்பதாம்நாள் ஸ்நானம்செய்யவும். தேகத்தைகுளிர்ச்சிசெய்யவும்

(14) தவளை அம்மையின் குணம்.

காய்ச்சல் கண்டால் நடக்க ஒட்டாது ... ... ... 1
சூலைப்போல் வலிகாணும், போஜனம் செல்லாது ... 3
மூன்றுநாளம்மை சிரசில் காணும் ... ... ... 4
ஒன்பதாம் நாள் தப்பாமல் அம்மையிறங்கும் ... ... 5
11-ம் நாள் ஸ்நானம் செய்யவும்.

பொதுவாக

எல்லா அம்மைகளும் ஒன்பதாநாள்தான் இறங்கும். முத்து காணும் அம்மைகளுக்கு நல்ல முத்து என்னும் ஆணிமுத்து சின்னது ஒன்றுவது இரண்டாவது வாழைப்பழத்தில் வைத்து உள்ளுக்கு கொடுத்தால் வயிற்றில் இறங்கும். அம்மைகள் வயிற்றி லிறங்கி கெடுதல் செய்யாது, அதியுஷ்ணமில்லாத பேதி மருந்து கொடுப்பது நன்று. பேதிக்கு கொடுத்தால் வைசூரி லகுவாய்க் காணும்.

## (1) மறுமுள்ளு, அல்லது, மறுகூறு.

இளம் அம்மையில் நீர்விட்டால் மறுமுள்ளு மூளை (புடை)க்கும், புண்ணுகும், (ரணமாகும்) பலவகையாய் சுரம்காயும், சுரம் நெருப்புபோலகாயும்.

(2) மறுமுள்ளு சுரத்திற்கு கியாழம்

சாதிக்காய், லவங்கம், சீரகம், கத்தைக்காம்பு, இவைசமனிடையாக இடித்து கஷாயம்செய்து, எலுமிச்சம்பழரசம், ஈருள்ளி (வெங்காய) ச்சார், கஷாயத்துடன் சேர்த்து சட்டி காயவைத்து முரித்துவாங்கி உள்ளுக்கு கொடுக்க தீரும். சுரம் நிற்கும்.

(3) மறுமுள்ளு ரணத்திற்கு பூசுமருந்து

வட்டத்துத்தியிலைச் சாற்றில் வுருண்டை கர்பூரத்தைக் கூட்டிக் குழைத்து விழக்கெண்ணெ சேர்த்து ரணத்தின்மேல்ப்பூசவும் சகல புண்ணும் ஆரும்.

2, கொட்டைமுத்து சுத்தமாய் மேலோடு நீக்கிய பருப்பும் வேப்பிலை, மஞ்சள், சேர்த்தரைத்து புண்ணிற்பூச புண்ணாரும்.

(4) வைசூரி, ஆராத புண்ணிற்கு தைலம்

வைசூரிப்புண்ணாறவிட்டால்புளியன்விரையின்மேல்தோலைப்

பொடித்து முத்ததேங்காயைத்திருகி அத்தேங்காய்ப்பூவில் முன் புளியன் விரை மேற்றோல் தூளும் சேர்த்து நன்றாகப் பிசைந்து பிழிந்த தைலத்தை புண்ணிற்பூச புண்ணாரும். வீக்கத்திற்பூச வீக்கம் கரையும்.

(5) கண்ணில் அம்மை வராமலிருக்க

வெங்காயப்பூ, அல்லது வெங்காயத்தை நசுக்கித்துணியில் வைத்து இரண்டு கண்களிலும் பிழியவும்.

(6) கண்ணிற்கு ஒற்றடம்.

(1) சீரகத்தைத் துணியில் பொட்டலம் கட்டி முலைப்பாலில் துவைத்து கண்ணிலொற்றவும். கண்வலி தீரும்.

(2) சுடுசோற்றில் வெண்ணை சேர்த்துப் பிசைந்து நீராகாரத்தில் தோய்த்து கண்ணிலொற்றவும். கண்வலி தீரும்.

(7) அம்மையால் கண் பூவிற்கு

பனங்குருத்தை நசுக்கி ரசம் பிழிந்து துணியில் வடி கட்டி கண்ணில் பிழியவும். கண் பூ மாறும்.

2, முருங்கைப்பூ, நெருஞ்சிப்பூ, நந்தியாவட்டம்பூ, சீரகம் இவைகளை நசுக்கிதுணியில் வைத்து கண்ணில் பிழியகண் பூதீரும்.

(8) வைசூரியால் கிராந்திக்கு

இளநீரை மேற்பட்டையைச் சீவிவிட்டு வெந்நீரில் அவித்து (எரித்து)வாங்கி கண் திறந்து தேத்தான்விரை, கோரைக்கிழங்கு, கோரோசனை வகைக்கு கால் விராகனிடையும், சீரகமும் தேனும் சேர்த்தரைத்து முன் இளநீரில் கலந்து சாப்பிடவும். கிரந்தல், வெக்கை தீரும். 3 வேளை கொடுக்கவும்.

(2) வேறு, பச்சை அல்லது வேகவைக்காத சுக்கான் (சுண்ணாம்புக்) கல் கால் பலம் உடைத்து மான் கொம்பும், காண்டாமிருகக்கொம்பும், ஆக மூன்றும் சேர்த்து அரைத்து 3-வேளை சாப்பிட கிராந்தல் தீரும்.

(3) கியாழம், பிராயிலை புதுச்சட்டியில் போட்டு நீராகாரத்தால் பிசைந்து கால்சேர் வீதம் 3-வேளை கொள்ளவும், கிராந்தல் தீரும். அம்மை லகுவாகும். வைசூரி லகுவானபிறகும்கிராந்தல் வெக்கை இருந்தால் இந்த மூன்றிலொன்று கொடுக்கத் தீரும்

(9) வைசூரி சுரத்திற்கு கியாழம்

எலுமிச்சன் வேர்பட்டை, சீந்திகொடி, சந்தனமரப்பட்டை விலாமிச்சுவேர், பர்ப்பாடகம், வெள்ளைஏலம், கோரைக்கிழங்கு, வகைக்கு ஒருவிராகனிடை வீதம் கஷாயமிட்டு 3-வேளை சாப்பிடவும், சுரம் நிற்கும்.

2, மதனகாமப்பூஎன்னும் மதனகாமேஸ்வரப்பூ, வராகனிடை 5, கஷாயம்செய்து கோரோசனை கால் வராக நிடை சேர்த்து சாப்பிடவும் சுரம் நிற்கும். வைசூரி லகுவானவுடனே சுரம் வந்தால் இவை இரண்டிலொன்று கொடுக்கத் தீரும்.

(10) வைசூரி, தாகத்திற்கு, குடிநீர்

கலைமான் கொம்பை ஜலத்தில் ஒருநாள் ஊரப்போட்டு மறுநாள் கழுவியதைக் காயவைத்து அரத்தால் ராவின கொம்புப் பொடி பலம் 2, கொதிக்கக் காய்ச்சின வென்னீரில்போட்டு ஆரின பின் தண்ணீர் இறுத்து தாகத்திற்குக்கொடுக்கவும், தாகம் நிற்கும் வைசூரி லகுவாகும். மூன்று நாளைக்கொருதரம் செய்துக்கொள்ளவும். நோய் தீரும் வரையில் செய்ய நன்று.

(11) வைசூரியால் மலக்கட்டிற்கு எண்ணை

வைசூரியால் மலங்கட்டினால் தேகம் உப்பிசம் காணும் ஈருள்ளி, கற்கண்டு, வகைக்கு வராகநிடை 5, விளக்கெண்ணை சேர் அரைக்கால் சேர்த்தரைத்து வயதுக்குத் தகுந்த அளவு கொடுக்கவும். மலஜல மிறங்கும்.

(12) வைசூரியால், தொண்டைக்கம்மலுக்கு

வைசூரியால் மென்னி (தொண்டை) கட்டினாலும் சேத்துமம் நெஞ்சில் நின்றாலும் கர்ப்பூரவள்ளி அல்லது ஓமவள்ளிச் சாற்றில் கோரோசனையை உரைத்து கொடுக்கத்தீரும்.

கொப்பளிக்க, கியாழம், மாதுளம்பூவை கஷாயம்செய்து எலுமிச்சம் பழரசமும் தேனும் ஆக மூன்றும் சேர்த்து கொப்பளித்து உமியவும். மென்னி கட்டு உடனே தீரும். தொண்டைக் கம்மல் வாங்கும். ஆனால் உட்கொள்ள (முழுங்க) க்கூடாது.

(13) வைசூரியில் வாந்தியும், பேதியும், கண்டால்

வைசூரியில் வாந்திசெய்து பேதிகண்டால் நஞ்சு முரித்தான் பாலை (நாய்ப் பாலை அல்லது பேய்ப்பாலை) வேர், நடுநரம்பு போக்கி வென்னீர் விட்டரைத்து புன்னைக்காயளவு வென்னீரில் கலந்து காலையில்கொடுக்கவும். வாந்தியும்,பேதியாகும், மத்தியானம் கஞ்சி காச்சி கொடுக்கவும். மறுநாள் புளியிலை கோளியவரையிலை, ஈருள்ளி சேர்த்து நீராகாரத்தில் பிசைந்து கால் சேர் வீதம் 3-வேளை கொடுக்கத்தீரும். பிறகு மூக்குரட்டைவேர், தவசிமுருங்கை சமூலம் பிராயிலை, சீரகம், ஈருள்ளி, இவைகளை நீராகாரத்தில் சேர்த்துப் பிசைந்து இறுத்து கால் சேர் வீதம் 3-வேளை சாப்பிடவும் தீரும்.

(14) அம்மையில், பேதிகண்டால்

வைசூரிசரியுமுன்னே பேதிகண்டால் சட்டியில் நீராகாரம் விட்டு இச்சிமரத்தின்யிலை போட்டு காய்ச்சி ஆரவைத்து 3-நாள் கொடுக்கத்தீரும். பேதி நிற்கும்.

2. சுக்கு, வேப்பன் ஈர்க்கு, விலாமிச்சுவேர், கோரைக்கிழங்கு, இவைகளை இளவறுப்பாய் வறுத்து கியாழமிட்டு கொடுக்கத் தீரும்.

3. லவங்கம், வேப்பன் ஈர்க்கு, பொன் முசுட்டை அல்லது மலைதாங்கி என்னும் வட்டத் திருப்பி, இவைகளை கியாழமிட்டு கொடுக்கத் தீரும்.

4. சீந்திக்கொடி, கோரைக்கிழங்கு, சுக்கு இவைகளை மேல் தோல் நீக்கி வறுத்து இடித்து கியாழமிட்டு 3-வேளை கொடுக்க அதிசாரமுள்ள தெல்லாம் தீரும். பேதி நிற்கும்.

5. மான்கொம்பை முன் வைசூரி தாகத்திற்குச் சொன்ன மாதிரிமான் கொம்புப்பொடி ஊரவைத்த சலத்தில்ஒரு வராகநிடை சிங்கி பர்ப்பம்போட்டு கலக்கிச் சாப்பிட அதிசாரம், கடுப்புதீரும்.

6. பலசரக்கு குடிநீர், சுக்கு, ஆலம் வித்து, அத்திவித்து, அரசு, ஒதியன், இச்சி, தத்தி, கோரைக்கிழங்கு இவைகளை இடித்து கியாழமிட்டுக் கொடுக்க அதிசாரமுள்ள தெல்லாம் தீரும். விதையில்லாவிட்டால் பட்டையைக் கூட்டவும்.

(15) வைசூரி, சீத, ரத்தக்கடுப்புக்கு,

ஈருள்ளிசார், பசுநெய்யில் கலந்து சாப்பிடவும், கடுப்பு சீத ரத்தமும் நிற்கும்.

2. முத்தநாவல் (நாகமரப்) பட்டை இடித்து வெள்ளாட்டுப் பாலிலரைத்து சாப்பிடவும். கடுப்பு தீரும்.

3. ஈருள்ளி, (வெங்காயம்) சீரகம், அத்திவேர்ப் பட்டை இவைகளைவெள்ளாட்டுப்பாலிலரைத்து சாப்பிடவும். கடுப்புதீரும்.

4. ஈருள்ளியை ஆவின்நெய்யில் வேகவைத்து சாப்பிடத் தீரும்.

5. பழயமாங்கொட்டையை நறுக்கி இளவருப்பு வறுத்து அரைத்து தயிரிலாவது நீராகாரத்திலாவது கலக்கி 3, வேளை கொடுக்க சீதரெத்தக் கடுப்பு தீரும்.

(16) வைசூரியால், வாயாலும்,
நீர்த்தாரையிலும் காணும், இரத்தம் நிற்க

நன்னாரிவேர், மேல்த்தோல் நீக்கி வராகநிடை 2, மான்கொம்புச்சாந்தும் சேர்த்து முன் வைசூரி தாகத்திற்குச் சொன்னமாதிரி மான்கொம்பு ஊறு ஜலத்தில் பிசைந்து 3-நாள் சாப்பிடவும் உதிரம் நிற்கும். சன்னி, தோஷம், கிராந்தால், இவைகள் தீரும்

(17) குரு சூலைகாணும் விதம்,

பெண்ணுசை வாடைப்பட்டால் குருசூலை காணும். வேகமாய்க் கடுப்பெடுத்து கரடுகட்டி கைகாலை முடக்கும் பாரு.

வைசூரி சூலைக்கு வேது

1 வட்டத்துத்தி சமூலத்தை, வேகவைத்து ஒற்றட மிட்டு இந்தகஷாயத்தால் கழுவவும். 13, நாளிகையில் தீரும்.

2. பழங்கூரை வைக்கோலும் வேப்பிலையும் சேர்த்து அவி (வேகவை)த்து ஒற்றடமிட்டு கட்டவும். எப்படிப்பட்ட சூலையும் ஆறு தினத்தில் தீரும்.

(18) வைசூரியில் ஸ்நானம் செய்யும் நாள் சாப்பிடும் மருந்து

1. பருத்திப்பிஞ்சு, சீரகம், சாதிக்காய், இவை மூன்றும் மோரிலரைத்துச் சாப்பிடவும்

2. நலங்கிட்டு மூழ்க

2. கொட்டை முத்துப்பருப்பும், வேப்பிலை, மஞ்சள், அறுகன்வேர் இவைகளை மோர் விட்டறைத்து மேலாக அம்மை சிரங்கிற்கும் உச்சி முதல் பாதம் வரையிலும் பூசி தலைக்குத்தயிர் தேய்த்து உடம்பிற்கும் தயிர் தேய்த்து குளிர்ந்த ஜலம் வார்க்கவும். இப்படி ஒன்று விட்டொருநாள் 3 நாள் முழுகவும். தேகதணல் மாறும். பிறகு

3. ஆவாரன் இலையை மோர்விட்டறைத்து சிரசில்தேய்த்து ஒட்டிவைத்திருந்து, பிறகு சிரசு முதல் பாதம் வரையில், தேய்த்து ஒன்று விட்டொருநாள் குளிர்ந்த ஜலம் முழுகவும். பிறகு

4. விளக்கெண்ணை தேய்த்து அரப்பிட்டு மூழ்கவும். மூழ்கியபின் மோரும் சாதம் சாப்பிடவும். ஈருள்ளி சேர்த்துச்சாப்பிடவும் ஸ்நானம் செய்த நாள் முதல் இப்படியே சாதம் சாப்பிடவும்.

(20) அம்மைக்கு பத்தியம், சாப்பிடக்கூடியது.

சாதத்தை ஆரவைத்துமிளகுநீர்விட்டு சாப்பிடவும். அம்மை இறங்கும். அம்மை இரக்கமான பின்பு நீர்மோர்சாதம் சாப்பிடவும் எலுமிச்சங்காய் நெல்லிக்காய், வாழைக்காய், அத்திப்பிஞ்சு, பாசிப்பயறு, பழயபுளி, கருவேப்பிலை, பனங்கற்கண்டு, சீனிகற்கண்டு கெளிற்றிமீன்க நவாடு, சுரவைகருவாடு, வெள்ளாட்டு வற்றல், காடை, வெள்ளெலி, உடும்பு, ஊர்க்குருவி இவைகள் ஆகும்.

(21) அம்மைக்கு சாப்பிடக்கூடாத வஸ்துக்கள்

அதிககாரம், மாம்பழம், தேங்காய், மாங்காய், நல்லெண்ணை இலுப்பெண்ணை, சோற்று ஆவி, நெல்லாவி, கொட்டை முத்தாவி புண்ணாக்கு, காய்கறிகள் அவித்த (வேகவைத்த) வாடைகள் கூடாது. இவைகள் தேஹத்தின்மேல் ஸ்பரிசப்பட்டால் கருஞ்சூலை, கடுப்பு, கைகால் முடக்கல், சம்பவிக்கும். ஆகையாலிவைகள் கூடாது. ஆகாது. பெண்ணுசை வாடைப்பட்டால் குருசூலை காணும் ஆகையால் இதுவுங்கூடாது.

(22) வைசூரி கண்ட உடம்பின் நிதானம்.

வைசூரிகண்ட ஆறுமாத மட்டிலும் சரீரத்தில் பலமில்லை, இந்த ஆறுமாதத்திற்குள் வியாதி வந்தால் மருந்து லகுவாய்ச் செய்யவும், கடுங்கார அவுழ்தம் செய்தால் பொல்லாப்பு சேரும்.

(1) அகஸ்தியர் ஊழிகாற்று முறை

# காலரா அல்லது வாந்தி பேதி, குறி

வாந்தி பேதி, பிளேக்கு இவ்வியாதிகள் இருக்குமிடங்களிலுள்ள வேப்ப மரத்தின் துளிர்கள் காய்ந் (உலர்ந்) திருக்கும், ஊழிகாற்றின் நிறம் இரும்புபோல கருப்பு வர்ணமாயிருக்கும் 2

மேலிருந்திறங்கும், கண்ணுக்குத் தோன்றாது 4

4. சிந்திக்கொடி, கோரைக்கிழங்கு, சுக்கு இவைகளை மேல் தோல் நீக்கி வறுத்து இடித்து கியாழமிட்டு 3-வேளை கொடுக்க அதிசாரமுள்ள தெல்லாம் தீரும். பேதி நிற்கும்.

5. மான்கொம்பை முன் வைசூரி தாகத்திற்குச் சொன்ன மாதிரிமான் கொம்புப்பொடி ஊறவைத்த சலத்தில்ஒரு வராகநிடை சிங்கி பர்ப்பம்போட்டு கலக்கிச் சாப்பிட அதிசாரம், கடுப்புதீரும்.

6. பலசரக்கு குடிநீர், சுக்கு, ஆலம் வித்து, அத்திவித்து, அரசு, ஒதியன், இச்சி, துத்தி, கோரைக்கிழங்கு இவைகளை இடித்து கியாழமிட்டுக் கொடுக்க அதிசாரமுள்ள தெல்லாம் தீரும். விதையில்லாவிட்டால் பட்டையைக் கூட்டவும்.

(15) வைசூரி, சீத, ரத்தக்கடுப்புக்கு,

ஈருள்ளிசார், பசுநெய்யில் கலந்து சாப்பிடவும், கடுப்பு சீத ரத்தமும் நிற்கும்.

2. முத்தநாவல் (நாகமரப்) பட்டை இடித்து வெள்ளாட்டுப் பாலிலரைத்து சாப்பிடவும். கடுப்பு தீரும்.

3. ஈருள்ளி, (வெங்காயம்) சீரகம், அத்திவேர்ப் பட்டை இவைகளைவெள்ளாட்டுப்பாலிலரைத்து சாப்பிடவும். கடுப்புதீரும்.

4. ஈருள்ளியை ஆவின்நெய்யில் வேகவைத்து சாப்பிடத் தீரும்.

5. பழயமாங்கொட்டையை நறுக்கி இளவருப்பு வறுத்து அரைத்து தயிரிலாவது நீராகாரத்திலாவது கலக்கி 3, வேளை கொடுக்க சீதரெத்தக் கடுப்பு தீரும்.

(16) வைசூரியால், வாயாலும்,

நீர்த்தாரையிலும் காணும், இரத்தம் நிற்க

நன்னாரிவேர், மேல்த்தோல் நீக்கி வராகநிடை 2, மான்கொம்புச்சாந்தும் சேர்த்து முன் வைசூரி தாகத்திற்குச் சொன்னமாதிரி மான்கொம்பு ஊறு ஜலத்தில் பிசைந்து 3-நாள் சாப்பிடவும் உதிரம் நிற்கும். சன்னி, தோஷம், கிராந்தால், இவைகள் தீரும்

(17) குரு சூலைகாணும் விதம்,

பெண்ணுசை வாடைப்பட்டால் குருசூலை காணும். வேகமாய்க் கடுப்பெடுத்து காடுகட்டி கைகாலை முடக்கும் பாரு.

வைசூரி சூலைக்கு வேது

1 வட்டத்துத்தி சமூலத்தை, வேகவைத்து ஒற்றடமிட்டு இந்தகஷாயத்தால் கழுவவும். 13, நாளிகையில் தீரும்.

2. பழங்கூரை வைக்கோலும் வேப்பிலையும் சேர்த்து அவி (வேகவை)த்து ஒற்றடமிட்டு கட்டவும். எப்படிப்பட்ட சூலையும் ஆறு தினத்தில் தீரும்.

(18) வைசூரியில் ஸ்நானம் செய்யும் நாள் சாப்பிடும் மருந்து

1. பருத்திப்பிஞ்சு, சீரகம், சாதிக்காய், இவை மூன்றும் மோரிலரைத்துச் சாப்பிடவும்

### 2. நலங்கிட்டு மூழ்க

2. கொட்டை முத்துப்பருப்பும், வேப்பிலை, மஞ்சள், அறுகன்வேர் இவைகளை மோர் விட்டறைத்து மேலாக அம்மை சிரங்கிற்கும் உச்சி முதல் பாதம் வரையிலும் பூசி தலைக்குத்தயிர் தேய்த்து உடம்பிற்கும் தயிர் தேய்த்து குளிர்ந்த ஜலம் வார்க்கவும். இப்படி ஒன்று விட்டொருநாள் 3 நாள் முழுகவும். தேகதணல் மாறும். பிறகு

3. ஆவாரன் இலையை மோர்விட்டறைத்து சிரசில்தேய்த்து ஒட்டிவைத்திருந்து, பிறகு சிரசு முதல் பாதம் வரையில், தேய்த்து ஒன்று விட்டொருநாள் குளிர்ந்த ஜலம் முழுகவும். பிறகு

4. விளக்கெண்ணை தேய்த்து அரப்பிட்டு மூழ்கவும். மூழ்கியபின் மோரும் சாதம் சாப்பிடவும். ஈருள்ளி சேர்த்துச்சாப்பிடவும் ஸ்நானம் செய்த நாள் முதல் இப்படியே சாதம் சாப்பிடவும்.

### (20) அம்மைக்கு பத்தியம், சாப்பிடக்கூடியது.

சாதத்தை ஆரவைத்துமிளகுநீர்விட்டு சாப்பிடவும். அம்மை இரங்கும். அம்மை இரக்கமான பின்பு நீர்மோர்சாதம் சாப்பிடவும் எலுமிச்சங்காய் நெல்லிக்காய், வாழைக்காய், அத்திப்பிஞ்சு, பாசிப்பயறு, பழயபுளி, கருவேப்பிலை, பனங்கற்கண்டு, சீனிகற்கண்டு கெளிற்றுமீன்க நவாடு, சூரவைகருவாடு, வெள்ளாட்டு வற்றல், காடை, வெள்ளெலி, உடும்பு, ஊர்க்குருவி இவைகள் ஆகும்.

### (21) அம்மைக்கு சாப்பிடக்கூடாத வஸ்துக்கள்

அதிககாரம், மாம்பழம், தேங்காய், மாங்காய், நல்லெண்ணை இலுப்பெண்ணை, சோற்று ஆவி, நெல்லாவி, கொட்டை முத்தாவி புண்ணாக்கு, காய்கரிகள் அவித்த (வேகவைத்த) வாடைகள் கூடாது. இவைகள் தேஹத்தின்மேல் ஸ்பரிசப்பட்டால் கருஞ்சூலை, கடுப்பு, கைகால் முடக்கல், சம்பவிக்கும். ஆகையாலிவைகள் கூடாது. ஆகாது. பெண்ணுசை வாடைப்பட்டால் குருசூலை காணும் ஆகையால் இதுவுங்கூடாது.

### (22) வைசூரி கண்ட உடம்பின் நிதானம்.

வைசூரிகண்ட ஆறுமாத மட்டிலும் சரீரத்தில் பலமில்லை, இந்த ஆறுமாதத்திற்குள் வியாதி வந்தால் மருந்து லகுவாய்ச் செய்யவும், கடுங்கார அவுழ்தம் செய்தால் பொல்லாப்பு சேரும்.

### (1) அகஸ்தியர் ஊழிகாற்று முறை

## காலரா அல்லது வாந்தி பேதி, குறி

வாந்தி பேதி, பிளேக்கு இவ்வியாதிகள் இருக்குமிடங்களிலுள்ள வேப்ப மரத்தின் துளிர்கள் காய்ந் (உலர்ந்) திருக்கும்,
ஊழிகாற்றின் நிறம் இரும்புபோல கருப்பு வர்ணமாயிருக்கும் 2
மேலிருந்திறங்கும், கண்ணுக்குத் தோன்றாது 4

ஜனங்களுடைய சிரசில்பட்டால் கண் மூடித்திறக்கு முன்னே
இரத்தமெல்லாம் முறிந்து நீராய்ப்போகும், 5

(2) பொதுவாக வாந்திபேதியின் குணம்.

வாந்தியும் பேதியும் காணும், உடம்பு களைக்கும் 2
கக்கல் (வாந்தி) கண்ட நாழிகைக்கு. கடுப்பு காணும் 3
தேகமெல்லாம் பிசின்போல் வேர்வை பெருகும் 4
தொண்டை வரட்சி காணும், உடம்பு களைக்கும் 6
வயிற்றுவலி காணும். கசிந்துருகி தேகமெல்லாம் கடினவேதை, 8
வெகு சுருக்காய் ஜன்னி பிறக்கும். 9

காலராவில் (3) வகை.

கொம்பன் கழிச்சல், படுவன் கழிச்சல், அக்கரத்தின் கழிச்சல், 3

(1) கோம்பன் கழிச்சலின் குணங் குறி

வாந்தியும் பேதியும் காணும். 1
ஒருதடவை பேதியானதும் மயக்கம்வந்து படுக்கையிலாழ்த்தும் 2
தேகமெல்லாம் பிசின்போல் வேர்க்கும் 3
உடம்பு குளிர்ந்துவிடும், நீராகப்பிழிந்துப்போடும். 5
நாக்கு வரட்சிகாணும், வயிற்றுவலியும் ஜன்னியும் காணும். 8
வெகு சுருக்காய் ஒரு பகலில் கொல்லும் 9

நிவிர்த்தி:— ஒருதரம் பேதியான் உடனே காலரா மாத்திரை சாராயத்திலுரைத்துக் கொடுக்கவும். மீறினல் விதிப்படியாகும். ஆணுனாலும் பெண்ணுனாலும், அசாத்தியம் தான். வியாதிகுணமாகிற வரையில் இம்மருந்து கொடுக்கவும். இத்துடன் மின்சாரதைலமும் கொடுக்க நிவிர்த்தியாகும்.

(2) படுவன் கழிச்சல், குணங் குறி

குடலிரையும், தாங்காத பேதியும், வாந்தியும், காணும் 3
காதடைக்கும், மூர்ச்சையாகும் 5
வெறும்வயிற்றில் வலியுண்டாகும். உடல்குளிரும் 7
மலம்தேன்போல கழியும், நரம்பிழுக்கும். சீதரத்தம் விழும், 10
சுத்த ஜலமபோல அடிக்கடி பேதியாகி வயிற்றைப்புறட்டி
வாந்திசெய்து சீதத்தை யுண்டுபண்ணும், 11
மூன்றுதினத்தில் மரணம். மூன்றுநாளுக்குமேல்மரணமாகாது 13

நிவிர்த்தி:— மஞ்சள் பொடியை வென்னீரில் கரைத்துதெளி விருத்து காலராமாத்திரை வுரைத்து தினம் 3-வேளை கொடுக்கத் தீரும். நோய் தீரும் வரையில் கொடுக்கவும், இத்துடன் மின்சார தைலமும் கொடுத்துக்கொண்டுவர சீக்கிரம் லகுவாகும்.

மேலுக்கு:—பசுவின் சாணத்தின் சாம்பல், அல்லது விபூதியை மேலெங்கும் பூசி படுக்கையிலும் தூவவும்.

2, மதுரைமரப் பட்டைத்தூளும், சுக்குத்தூளும் சேர்த்து மேலெங்கும் பூசவும், அல்லது மின்சாரத் தைலத்தை கர்ப்பூர

(நீலகிரி)த் தைலத்திலாவது கிருஸ்ணு (சீமைஎண்ணை)யிலாவது சேர்த்துப்பூச நன்று. கர்ப்பூரத்தைலமும் பூசலாம்.

(3) அக்கரத்தின் குணங்குறி

உடல் குளிரும், சோறுகபேதி, எடுக்கும் 2
பேதியில் பருக்கை விழும், தாகம்காணும் 4
உடம்பும், காலும், கடிக்கும். 5
அஜீரண பேதிபோலத் தோன்றி வயறு பொருமி மெல்ல மெல்ல தூர்க்குணங்களை யுண்டாக்கும் 6

நிவிர்த்தி:— மிளகை, சிறுக வறுத்துப் பொடிசெய்து ஜலம் விட்டு கஷாயம் செய்து வடித்து கால்ரா மாத்திரை உரைத்து கொடுக்கத்தீரும்.

காலராவில், பேதியிலும், வாந்தியிலும், சோறெடுத்தால், க்ஷாயம்,

2 வெள்ளைத்துணியில் சுண்ணும்பு வைத்து மடித்து நைய்யத் தட்டி கொழுஞ்சிவேர்ப்பட்டையும், வெள்ளைக்குன்றிமணிவேரும் சமனிடை சேர்த்து வறுத்து மூன்துணியுடன் சாம்பல் செய்து இதைக்கஷாயம்வைத்து கஸ்தூரி கோரோசனை மாத்திரை ரெட்டிப்பளவு சேர்த்து கொடுக்கவும், வாந்தியிலும் பேதியிலும் பருக்கை விழுந்தால் இந்தக்கஷாயம் கொடுத்த உடன் அலரியோடும், பேதி நிற்கும்,

N. B:-கொம்பனென்ற குறியரிந்தால் இதைக்கொடுக்கக்கூடாது.

(2) கால்ராவில், தாகமேடுத்தால், கஷாயம்.

நாயுருவி வேர், சிவனார்வேம்பு வேர், கொடுவேலி என்னும்சித்திரமூல வேர், புளியன் பட்டை, மாவிலிங்கம் பட்டை, முருங்கைப் பட்டை, எருக்கன் பூ, வகைக்கு ரூபாயிடை, 2-ம், தென்னம்பூ அல்லது பிஞ்சு 14-ரூபாயிடையும், ஆக எல்லாமிடித்து வறுத்து 2-படி ஜலம்விட்டு பேர்பாதி சுண்டவைத்து கொஞ்சம் வடித்து கஸ்தூரிகோரோசனை மாத்திரை யுரைத்துச் சாப்பிடவும். வெகு சுருக்காய் தாகம் தீரும். ஊழி சவுக்கியப்படும். நோய் தீரும் வரையில் இக்கஷாயம் கொஞ்சம் கொஞ்சமாய் வடித்து கொடுத்துக்கொண்டுவரவும், ஜன்னி, ரூட்சை, தாகம், வயிற்றுப்பொருமல் இவை அணுகாது.

3. பத்தியம்:—தயிர் மோரைக் குடித்தால், ஜன்னி மூடும். ஆகையாலிவைகள் கூடாது

4. சாப்பாடு:—அரிசி பொரித்து உடைத்து கஞ்சி காய்ச்சி கருவேப்பிலை, மிளகு, உப்பு, ஆக மூன்றும், பொடித்து கஞ்சியில் கலந்துகொடுக்கவும். பேதி நிற்கும் கழிச்சல் தீரும்.

## கால்ரா மாத்திரை-10

1. இதில் விலையுயர்ந்த வஸ்துக்களனேகம் சேர்ந்திருக்கின்றது. மூன்றுவகை கழிச்சலுக்கும் கைகண்டது.

2. அளவு அனுபானம்:—குழந்தைகளுக்கு அரைமாத்திரை வீதமும், சிறுவர்களுக்கு ஒரு மாத்திரை வீதமும், பெரியவர்களுக்கு 2-மாத்திரை வீதமும், முன் அந்தந்த வகைக்குச் சொன்னஅனுபானத்திலாவது, அல்லது இளவென்னீரிலாவது சாராயத்திலாவது, ஓமத்திராவகத்திலாவது, ஓமக் கஷாயத்திலாவது உரைத்து தினமிருவேளைக் கொடுக்கவும். வாந்தியாகி விட்டால் மறுபடி உடனே கொடுக்கவும். 2, 3-வேளையில் சவுக்கியப்படும் உடனே குணம் தெரியும்.

வியாதி பூராவும் தீரும் வரையில் கொடுக்கவும். இத்துடன் மின்சார தைலமும் கொடுத்துக்கொண்டுவர அதி சீக்கிரம் சுகப்படும். வகை மூன்றுக்கும் கொடுக்கவும், குணமாகும்.

3 காலராவைத் தவிர மற்ற வியாதிகளுக்கு பேர் பாதி அளவு தினம் 2-அல்லது 3-வேளை மேல்சொன்ன அனுபானத்திலாவது அல்லது, இம்மாத்திரையையும், சீனியும் சேர்த்தாவது, சுக்கு, மிளகு கஷாயத்திலாவது அல்லது அந்தந்தவியாதிகளுக்கு அந்தந்த இடங்களில் சொன்ன அனுபானத்திலாவது, சீனியும் இம்மாத்திரையும் சேர்த்துச் சாப்பிடத்தீரும்.

நீடித்த வியாதிகளுக்கு 6, 9, 12-நாள், கொள்ளத் தீரும்.
N. B:-இம்மாத்திரை கெர்ப்பஸ்திரீகளுக்குக் கொடுக்கக்கூடாது.

4. மற்றும் தீரும் வியாதிகள்:— அதிசாரம், அதிசாரசுரம், அஜீர்ணம், அஜீர்ணபேதி, வயிற்றுவலி, கிருணி, சீதபேதி, விஷபேதி, வாந்தி, சுரம், சன்னிபாதசுரம், அசதிசன்னி, விஷசன்னி, ரணசன்னி, சூதகசன்னி, சூதகச் சூலை, உதரசூலை, மூர்ச்சை, பல்லசைவு, இரைப்பு, போதக்ஷயம், மூளைநோய், மனக்கலக்கம், நித்திராபங்கம், கீல்வாதம், கீல் பிடிப்பு, சந்துவாதம், சுவாச காசநோய், மாரடைப்பு, மார்துடிப்பு, மார்சளி, மஞ்சகாமாலை, மூலவாய்வு, கரப்பான், இடுப்புவலி, இருமல், இருதய பலவீனம் கைகால் குத்தல், குடைச்சல், சோர்வு, துர்ப்பலம், ஆண்குறிவேதனை, சொட்டுமூத்திரம், சொற்பனஸ்கலிதம், நரம்புவீக்கம், நீர்க்கோவை இவைகள் தீரும்.

## (5) கிராணி, கழிச்சல், அதிசாரபேதியுள்ளவர்களுக்கு.

1. சுக்கு, மிளகு, திப்பிலி, அதிவிடயம், மாசக்காய், சாதிக்காய், வகைக்கு பலம் 1-இடித்து கஷாய மிட்டு கஷாயத்தில் காலராமாத்திரை பாதியளவு வுரைத்து காலை மாலை தினமிருவேளை 3-நாள் 6-வேளை சாப்பிடவும். வயிர்சம்மந்தவியாதிகள் பூராவும் தீரும். நீடித்த வியாதிகளுக்கு 9, 12-நாள் சாப்பிடவும் தீரும்.

2. ஒருவேளைக்கு வில்வப்பழச்சதை பலம் அரை, மாதுளம் பழத்தோல், மாசக்காய், வகைக்கு பலம் கால் காலரா மாத்திரை பாதியளவு சேர்த்து பசுவின் பாலிலரைத்துச் சாப்பிடவும். தீரும்.

## நூதன சஜ்ஜை.

புதுமாதிரியான சிறந்த, அதி சௌந்தர்யமான சஜ்ஜை (லிங்கக்காய்) இதைச் சிறுவர் முதல் முதியோர் வரையில் ஆண் பெண்களனைவரும் எவ்வித ஜாதி வித்தியாசமு மின்றி எல்லா லிங்கதாரிகளும் நிராபாரமாக அணிந்து கொள்ளத் தகுதியானது குனிந்து, நிமிர்ந்து வளைந்து ஓடி, வேலை செய்தாலும், மார்புக்கு அடிபடாமலும் அதிக கனமும், பளுவும், பருமனுமில்லாமலும், வெகு திறமையான வேலைப் பாடுடன் செய்யப்பட்டது. இதில் உபயோகமில்லாத விடங்களும் அழுக்கடையு மிடங்களும் பாசம் பிடிக்குமிடங்களும், கிஞ்சிற்று மிருப்பதில்லை. நூற் கயிறு சீக்கிரம் தண்டிக்காத (அறுந்து போகாத) மாதிரியாக அமைக்கப் பட்டிருக்கிறது. இதில் கீழ்மேல் பத்தவைப்புகளில்லாமலும் இருபக்கங்களிலும் அஷ்டதள (எட்டுப்பட்டை) கெட்டி குண்டுகள் அமைக்கப்பட்டிருப்பதால், இது இரண்டு மூன்று தலைமுறைகளுக்கு நீடித்திருக்கும். அளவிலும் சிறிய உருவமாகையால் இதின் மீது சொக்காயணிந்தாலும் மார்புக்கு மேல் உயர்ந்து காணப்படுவதில்லை.

சுத்த வெள்ளி சஜ்ஜை 1-க்கு விலை ரூ. 5—4—0 முதல் ரூ. 6—8—0 வரையிலும் தங்கத்தில் தேவையானால் 10 சவரன்களும் இதற்கு கூலி ரூ. 10—0—0-ம் சேதாரமும் அரைவரடையும் ஆகிறது. இவைகள் தேவையுள்ளவர்கள் முன் பணமனுப்ப வேண்டும். பதில் விரும்புவோர்கள் ரிப்ளை கார்ட் எழுதவும்.

## வைத்தியாம்சம்!

56-பக்கமுள்ள புஸ்தகம், இதில்தாய்மார்களின் விஷயங்களும், சிசுக் (குழந்தை) களுக்கு வரும் நோய்களும் நோய் வரும் காலங்களும், மற்றும் பலவித தோஷங்கள், மாந்தம், கணம் இவற்றினுட் பிரிவு 8-வகைகளின் விபரங்களும், கிராந்தி, இருவகையும், பாலகிரகதோஷங்கள் 16-பிரிவும், வைசூரியில் 14, விதமும், வாந்திபேதியில் 3-விதமும், பிளேக்வியாதியி லிருவிதமும், முடக்குமாரி, இன்புளூயன்சா சுரம் முதலான வியாதிகளின் குணங்குறிகளும் அவ்வவ்வகைக்குள்ள வாய்தா நாட்களும். பத்தியாபத்தியங்களும். அவரவர்கள் செய்துக்கொள்ளும் அவுஷதங்களும், குளிசங்களும், பூசைகளும், மந்திரங்களும், பரிகாரங்க (சிகிச்சை) களும் சில முக்கியமான மருந்துகளின் உபயோகங்களும் ஒருங்கு சேர்த்து அனைவரும் சுகமுறக்கருதி உலோகோபகாரமாகவெளிப்படுத்தியது. இப்புஸ்தகம், தேவையுள்ளவர்கள், இரண்டணு தபால் முத்திரையுடன் விலாசம் தெரிவிக்கவும்.

**வை. செ. குருசாமி ஐயர்,**

வைத்தியம், குகை, சேலம்.

மலர். 8. ரிஜிஸ்டர் நெ. M. 3157

மாத வெளியீடு | விலை அணா 2.



சிவமயம்.

தியான சுலோஹம்.

ஜாதஸ்ய ஜாயமானஸ்ய கர்ப்பஸ்த ஸ்யாபி தேஹி ந:
மாபூன்ய மகுலே ஜன்ம யஸ்ய சம்புர்ன தைவதம்
ஹரசம்போ மஹாதேவ விஸ்வேசா மாவல்லப
சிவசங்கர சர்வாத்மன நீலகண்ட நமோஸ்துதே.

# சிவ பக்தன்

## பவ-வருஷம் பங்குனித் திங்கள்.

### பொருளடக்கம்.


| | | |
|---|---|---|
| 1 | சேலம் ஸ்தல மலையில் ஸ்ரீரேவண சித்த ஜயந்தி | |
| 2 | குரு பஜனை கீர்த்தனங்கள் | |
| 3 | ஸ்ரீபசவேஸ்வரனின் செய்கைகள் ... | 307 |
| 4 | விதி முறைகள், பஞ்சசூதக நிவிர்த்தி ... | 312 |
| 5 | இஷ்ட லிங்கத்தின் சிரேஷ்டத்வம் ... | 318 |
| 6 | திரி வித லிங்கோபாசனை ... ... | 322 |
| 7 | ஸ்ரீபஞ்சசார்ய பிரபாகரம் ... ... | 325 |
| 8 | ஆராத்திரியரின் நாமங்கள் ... ... | 327 |
| 9 | சிவபூஜா பிரபாவம் ... ... | 329 |
| 10 | புதுவருட உகாதி பண்டிகை ... | 332 |
| 11 | மடாதிகாரிகள் ... ... | 333 |
| 12 | தைலாப்யங்கம் ... | 337 |
| 13 | ஸ்ரீசைல மஹா க்ஷேத்திரம்... ... | 341 |
| 14 | ரம்பாபுரி ஜகத்குரு ரதோச்சவம் ... | 349 |
| 15 | ஸ்ரீரேவண சித்தமலை ... ... | ,, |


சேலம், செவ்வாய்ப்பேட்டை, கோல்டன் பிரஸில் பதிப்பிக்கப்பட்டது.